183

MYSORE ARASU

(A HISTORY IN TAMIL VERSE OF THE KINGS OF MYSORE)

BY

K. V. SRINIVASACHARIAR,

HEAD TAMIL PANDIT,

HIS HIGHNESS THE MAHARAJA'S COLLEGE, MYSORE.

PART II.

V213
NO3.2

ஸ்ரீ

கடவுள் துணை.

—:o:—

மைசூர் அரசு.

இரண்டாம் பாகம்.

183
4 1903

284

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
30 NOV 1903
MADRAS.

மஹாராஜராஜஸ்ரீ

காந்தராஜ அரசு அவர்கள்

கேட்டுக்கொண்டபடி,

மைசூர் மஹாராஜா ஸர்வகலாசாலைப்

பிரதம தமிழ்ப்பண்டிதர்

கோழியாலம். வ. ஸ்ரீநிவாஸாசாரியரால்

இயற்றப்பெற்று,

சென்னை:

வே. நா. ஜுபிலி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சுபகிருத்வூ தைமீ

All Rights Reserved.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS.
REGISTERED
30 NOV 1903
MADRAS.

TO

HIS HIGHNESS THE MAHARAJA

SRI

KRISHNARAJENDRA WADAYAR BAHADUR

THIS WORK

(By Special permission graciously granted.)

is most gratefully and respectfully dedicated
on behalf of the many Tamilians
whose loyalty to the Mysore Throne is unbounded
and who owe their great prosperity
to the sympathetic administration
of His Highness

BY THE AUTHOR.

INTRODUCTION.

This Tamil work was undertaken by command of Her Highness Vani Vilas Sannidhanam, Maharani-Regent of Mysore, and under the encouragement of her son-in-law, W. M. Kantaraj Urs, B. A., with the object of making the history of the Mysore Kingdom familiar to the Tamil reading world. Hazy ideas, more or less accurate, have long prevailed in Southern India regarding the origin, career, accomplishments and character of the southern branch of the Yadavas, which has for centuries worthily filled the historical throne of Mysore. The Kannada people have been able to correct some of their erroneous notions in this matter from the compendium called "Vamsavali" and other similar works. But the great bulk of the Tamilians are still labouring under the misconceptions which it is high time in the interest of Truth and History to correct. It has been the ambition of the author in the compilation of this work to record in chronological sequence the various stages of the rise and spread of the Yadavas in Southern India ; and to graphically describe the combination of the mythological with the real in the advent of that classical race into this their distant arena of political enterprize. It is well-known that all ancient dynasties and races in India trace their origin directly to higher-human beings, and the *raison d'etre* of the Yadavas coming to this country, so far a field from their legendary home, was a divine mission to establish a dynasty by their valour in the distant south. This part of the narrative has been reconciled as far as possible with realism. The usurpation of the ancient Kingdom of Mysore by the Muhammadans and their rapid down-fall under the British arms are recent events within the ken of most readers of modern history. The romantic adventures and vicissitudes of the ancient Wadayars, the restoration of the Raj to the ancient Hindu dynasty on the overthrow of Tippu Sultan, the successful administration

of Dewan Purnaya, the illustrious ancestor of the present Mysore Dewan, during the minority of the grandfather and namesake of H. H. the present Maharaja, the reign of the late Krishnaraj Wadayar, Bahadur from 1811 to 1831, the assumption of the administration for political reasons by the British upto 1881, the rendition of the Kingdom by the British to the amiable father of the present Maharaja in 1881, the brilliant Regency of His Highness' beloved and talented mother and the Installation in August 1902 of His present Highness form events in the history of Mysore, round which are centered some of the most thrilling and romantic episodes in the progress of the human race. It has been the aim of the author to pourtray these and similar salient points in a clear and succinct style.

Mysore, or more classically Mahishasurapuri, is now a prominent figure in the annals of India. It is considered a model Indigenous State, and is classed as second only to Hyderabad, not only in point of population, revenue, and geographical position, but also in the various kinds of living and occupation it affords to the populations of the neighbouring regions. There are large numbers of Tamilians settled permanently within its extensive boundaries, and it is therefore essential that correct ideas should be disseminated among these classes and their *confreres* beyond the frontier regarding the land they live in and the royal line under whose ægis so many millions are sheltered. The claim of this little history for public favour has been generally acknowledged by a few acknowledged Tamil Scholars.

In conclusion, the author will feel amply compensated for his labours if his modest production succeeds in giving currency to exact conceptions regarding the history, rulers and people of Mysore.

இரண்டாம் பிரிவு.

முகவுரை.

'மைசூர் அரசு' என்ற இந்நூல் மைசூர் அரசர்களின் சரித்திரத்தை யுணர்த்துவது. இதன் முதற்பிரிவை யோதியுணர்ந்த சில அறிவாளர்கள் அது நன்கமைந்துள்ளதென நவிலக்கண்ட மகாராணியாரவர்கள் களிப்படைந்து மற்றதையும் பூர்த்தி செய்யப் புகன்றபின் இதனை யெழுதலானேன்.

முதற்பிரிவில் இவ்வம்சத்துக்கு மூலபுருஷரான யதுராயர் முதல் இராசவுடையா ரளவாயுள்ள அரசர்களின் கதைகள் அடங்கியுள்ளன. இதில் அவரது பௌத்திரராகிய சாமராஜவுடையார் முதல் இப்பொழுது ஆளும் மும்மடிகிருஷ்ணராஜவுடையா ரளவாயுள்ளவர்களின் கதைகள் அடங்கியுள்ளன.

இதுவும் மகாராணியாரவர்களின் பொருட்செலவாலேயே அச்சிடலாயது.

முதற்பிரிவிற்கு உதவிய மூதறிவாளர்களினுதவியை அவ்வாறே இதற்கும் பெற்றேனாதலின், அவர்கட்கு அப்பொழுது அளித்த வந்தனத்தை இப்பொழுதும் அளிக்கக் கடமை பூண்டுளேன்.

இந்நூலிற்கு இங்கிலிஷ் முகவுரை எழுதி யுதவிய கண்ட்ரோலர் ஸ்ரீ உ. வே. வி. யன். நரசிம்மையங்காரவர்களுக்கு "தலையல்லாற் கைம்மாறிலேனே" என்றபடி மனப்பூர்வமாக வந்தனஞ்செலுத்துதலன்றி வேறு கைம்மாறு யாது செய்யவல்லேன்!

சுபகிருத் ஹூ
மைசூர்.

இங்ஙனம்
கோ. வ. ஸ்ரீநிவாஸாசாரியன்.

இரண்டாம் பிரிவு.

விஷயசூசிகை.

	பக்கம்.	செய்யுள்.
க. ரணதீர கண்டீரவ நரசராசவுடையார் மல்லனை வென்ற சருக்கம்	க	எச
உ. ரணதீர கண்டீரவ நரசராசவுடையார் நாடு பெருக்கிய சருக்கம்	கஉ	அசு
ங. ரணதீர கண்டீரவ நரசராசவுடையார் கள்ளரைவென்ற சருக்கம்	உரு	ஙக
ச. சீர்திருத்தச்சருக்கம்	ஙக	ருஉ
ரு. சிக்குதேவராசவுடையார் ஊர்பெற்ற சருக்கம்	ச0	சுஎ
சு. சிக்குதேவராசவுடையார் மராடரை வென்ற சருக்கம்	ரு0	உஅ
எ. சிக்குதேவராசவுடையார் அறம்புரி சருக்கம்	ருரு	ருரு
அ. சிக்குதேவராசவுடையார் பேர்பெற்ற சருக்கம்	சுசு	ஙச
கூ. சிக்குதேவராசவுடையார் சற்கதிச்சருக்கம்.	எக	கரு
க0. தொட்டகிருஷ்ணராயச் சருக்கம் ...	எரு	உஎ
கக. இம்மடிகிருஷ்ணராயச் சருக்கம் ...	எகூ	அ0
கஉ. நஞ்சராசவுடையார் சருக்கம்... ...	கூஉ	க0
கங. பெட்டசாமராசவுடையார் சருக்கம் ...	கூச	ஙச
கச. காஸாசாமராசவுடையார் சருக்கம் ...	கூகூ	க0ச
கரு. மும்மடிகிருஷ்ணராசவுடையார் சருக்கம்	ககசு	உஉக
கசு. சாமராசேந்திரவுடையார் சருக்கம் ...	கருக	க0க

ஆக, செய்யுள்—க0ககூ.

மைசூர் அரசு.

இரண்டாவது பிரிவு.

முதலாவது

ரணதீர கண்டீரவ நரசராசவுடையார்

மல்லனைவென்ற சருக்கம்.

திருமலிதிரிகுணத்துத்திருமூர்த்திமுகமாப்பாத
மருவிலீலையையிழைக்குமலரவளிறைவாவிந்தத்
தெரிவிலிவயிறேயென்றுகரணமூன்றானுஞ்செய்யு
மருவினைக்ககற்றாதெம்மையருள்சுரந்தளிப்பாயையா. (க)

சாலிவாகனசகாத்தமாயிரத்தைஞ்ஞூற்றொன்றின்
மோலிமாமுடிபுனைந்தவிராசமாவுடையானெண்ணஞ்
சேலுமாண்டின்பமெங்குமிணையறப்பருகவாண்டு
கோலமார்திருவைகுந்தமிவ்வணங்குறுகமற்றும். (உ)

அவன்மகன்மகனஞ்சாமராயனுக்கவன்முன்சொற்ற
நுவல்வதுவழியினெண்ணிநுண்ணறிவுடையவுற்றா
ரவிருபொற்றவிசிருத்தியபிடேகம்புரிந்துநூலி
னவமணிபதித்துமிக்கநன்முடிமுடித்தாரன்றே. (ங)

பெற்றனமரசையென்றுபேதுறுஞ்செருக்கின்மிக்க
கற்றலில்கயவர்சில்லோரெனவிவன்கலங்காதீது
மற்றதோர்பெரியபாரமாமெனமனத்துட்கொள்ளா
வெத்திறத்தவருமின்பம்பருகுறவளித்தான்மன்னோ. (ச)

உழக்கினுட்கிழக்குமேற்குநோக்குமென்றுலகங்கூறும்
வழக்கெனச்சிலவூர்தத்தம்வயப்படுத்தரண்செய்தாரும்
விழிப்புறக்கலக்கும்வெய்யபாளையகாரர்வெம்பி
யழத்தொழவடக்கியவ்வூரனைத்தையும்படைத்துக்கொண்டான். (௫)

எறிவதுபுடைப்பதாதியேதிகளிவனென்றெங்கு
மறிவுறுவகைகளாருமளவிடற்கரியபல்ல
குறுகலர்செவியுற்றுள்ளங்குலைந்திடப்புதிதுகூட்டி
நிறைதரவமைத்தான்சாலையகன்றிடநிருமித்தின்னும். (௬)

கரிகளோபரிகளேயோகருதலார்கண்ணிற்கண்டே
யிரிதரும்படைகளேய்ந்தமறத்தகைக்காலாளேயோ
பெரிதவன்பின்னுஞ்செய்தபெருக்குநாம்பேசற்பாற்றே
திரைகெழுபுவனத்தெந்தத்திறலர்க்குஞ்செறிந்ததுண்டே. (௭)

மல்லலந்திணிதோளந்தமன்னவன்மறைவலோர்பாற்
சொல்லருமன்புகூர்ந்துசொலிக்குமம்மறைகட்கெட்டா
வெல்லவனுளிருங்கோயிலெழின்மடமுதலவின்னு
மெல்லையிறருமங்கோடியியல்புறவிழைத்தானம்மா. (௮)

இவனிளமுறுவன்மஞ்ஞையியைந்திடுஞ்சாயலில்லா
ளுவகையினொருகான்மேலக்கோட்டையினுளிருமாய
னவிரடிபணிந்துபாவமைந்தையுமகற்றுந்தூய
திவியபுட்கரிணியாகுங்கலியாணித்திறமுங்காணு. (௯)

மீண்டவண்மீளிக்கையமிசையுறையிமையோர்தாமுங்
காண்டுதங்கரிசுபோக்குங்கலியாணிமகிமைகண்டா
யாண்டகாயதற்குச்சுற்றுமரும்படியமைக்குமென்ன
வேண்டினளவடன்றாயவிழுத்தகைவியந்துதாழான். (௧௦)

ஆங்கருஞ்சலவைக்கற்களான்வினையகற்றியெட்டா
தோங்குவைகுந்தக்கேகுமுயர்குருவருளிற்சீவர்
பாங்குறும்படிகளென்னப்பகர்வருஞ்சோபானங்கள்
வாங்குறமுதியர்தாமும்வருந்தலின்றியங்கவாற்றி. (௧௧)

முத்திராசம்மையென்னுமுகிழ்முலையவளின்பேரா
ணித்தகைத்தருமமானதென்றதுபொறித்துவைத்து
மற்றுமம்மலைமீதின்னுமண்டபமுதலநானா
வித்தகஞ்செறியுநற்கைங்கரியங்கள்விளங்கச்செய்தான். (௧௨)

பின்னரும்பெருகுவிண்டுபதியினாற்பிறங்குசீர்மை
மன்னுசெஞ்சடையானஞ்சன்கூட்டினன்மகிழவாங்கு
மின்னணமியற்றியெங்குமின்புறவொழுகுநாளிற்
றுன்னியதொருநோய்வாட்டுந்துன்னலரெனவீடின்றே: (௧௩)

உணர்ந்ததன்றுயர்ந்தபாட்டனுரைத்தவாறவற்குப்பின்னை
மணந்தவளகட்டின்வந்துமகிதலம்புரக்கநின்ற
குணங்கொளிம்மடியிராசவுடையனைக்கொணர்வித்தன்னேற்
கெனுங்கருத்துடையோர்முன்னரிலங்குபொன்முடிபுனைந்தே. (௧௪)

பத்துடனொன்பதாண்டும்பருவரலணுகாதியாரு
மொத்துடன்பெருகக்காத்தேனொருவர்க்குநலிவொன்றின்றிப்
பத்தியிற்பதுமநாபன்பாரகமினிநீயாள்வாய்
சத்தியந்தவிராதென்றுசாற்றினன்பலவும்பின்னும். (௧௫)

நாளொருமூன்றுமற்றுமகன்றிடநனைகணாறு
நீளிருஞ்சினையினைந்துதருநிழனிவந்துசேர
வாளையேநிகர்த்தகண்ணாரவனெழின்மனைவிமாரக்
காளையினுடனேகட்டையேறினர்கலந்தாரங்கும். (௧௬)

இவனுமாண்டொன்றுதிங்களைந்திருந்திகலிற்காத்துக்
கவர்மனத்தவர்கள்சில்லோர்கரவடத்தொழிந்தானாகப்
புவனிமுன்புரந்தராசவுடையானின்புகலுந்தேவி
யவமவன்மடிவிற்காற்றாதாற்றிமற்றாய்ந்தேதாழாள். (௧௭)

தன்றிருக்கணவற்குற்றதமையனின்றனயனான
மன்றிருநரசராசவுடையானைத்திரைகணும்பி
யென்றிடுநகரினின்றுமேற்றமாக்கொணர்ந்தன்னேற்குப்
பொன்றிருமுடியையந்தப்பொழுதினேசூட்டினாளால். (௧௮)

வேறு.

பட்டமாகுமுனமிந்தப்பார்த்திவ
ணிட்டமாகவன்றீன்றவன்றன்னுழை
மட்டுறுமதமாவின்வளர்கையிற்
பட்டவாறொருபண்புபகர்துமே. (கசு)

அந்தனாளிலோரந்தணனெத்திறப்
பந்தமாயபவமும்பறந்திடுஞ்
சிந்துசீகரத்தென்கடற்சேதுவுக்
குய்ந்துபோகவெழுந்துடன்மீண்டனன். (உ0)

மீண்டவன்வெறுங்கையுடன்மேவுகை
யாண்டதேயரையன்முதலாருழை
வேண்டலன்றெனவெம்பலனுங்கொடு
காண்டல்செய்தனனவ்வெழிற்காளையை. (உக)

நீடுவாழ்கெனநேர்ந்துநிகழ்த்தவக்
கோடுயர்ந்தொளிர்குன்றுறழ்மன்மக
னேடமைந்தமறையவவெங்குபன்
னூடணந்துநடந்தனையென்னலும். (உஉ)

மும்மதக்களிற்றின்னெழின்மொய்ம்பினுய்
கன்மமுற்றுங்கழன்றிடக்காகுத்தன்
செம்மையிற்புரிசேதுவைக்காணயா
னம்மவித்தனைவைகலகன்றதால். (உங)

என்னமன்னவனேகுழியேதெனும்
பன்னரும்புதிதுண்டெனிற்பான்மையின்
முன்னமென்னமுதுமறைவாணனு
முன்னியுள்ளதுரைத்திடன்மேயினன். (உச)

கண்டநாட்டின்கவின்கணக்குள்ளதோ
வண்டர்நாட்டினழகுமதற்கிணை
கொண்டுநாட்டுங்குணமிலதேனுமொன்
றுண்டுநாட்டுவலுய்த்துணர்வாயதே. (உரு)

தென்றிசைக்குத்திலகமெனத்திக
ழின்றிருத்தலமொன்றுளதெங்கணு
மென்றுமன்னதினேவருங்காண்புரு
ரொன்றுநாமமரங்கமென்றோதுவார். (உசு)

பொன்கொழிக்கும்பொருதிரைக்கைகளா
னன்கிழைக்குநளிர்புனற்காவிரி
யன்பினிட்டவலங்கலினன்னதற்
கொன்றிரண்டுபுறத்துமொழுகுமால். (உஎ)

ஆழிமாமலையன்னவெழுமதில்
சூழவங்குச்சொலிக்குமோர்மந்திர
மாழுவார்களுமாரியருமதை
வாழும்பூதலவைகுந்தமென்பரே. (உஅ)

ஒட்பமுள்ளவுயர்பொனிற்கோபுரத்
திட்பமுள்ளதிருநிலைக்குள்ளொளிர்
புட்பவந்தரும்புக்கெழுவாரெனி
லெற்கதன்பகடெங்கிசைக்கிற்பதே. (உகூ)

கோயிலன்னதுட்கோமளப்பாம்பணை
மேயருந்துயின்மேயொளிரெம்பிரா
ஞயருமவனப்பத்திருப்பள்ளிவா
யாயிரத்துமறைதரற்காங்கொலோ. (௩0)

வீடணற்கருள்வேண்டினன்றென்முக
நாடிமேன்முடிநற்பதங்கீழதா
யாடலம்புயனுதியமரர்கள்
கூடிநாளுந்தொழத்துயில்கூருமால். (௩க)

இந்தமேலையரங்கத்தெழிறுயி
னந்தநாடுநலமுறச்செய்தொளிர்
சந்தமும்மதுவுஞ்சகசம்மெனக்
கொந்தலர்த்தொடைக்கொற்றவகோடியால். (௩உ)

வேறு.

அத்தலத்தினருகுகாவிரிக்கணப்புறத்தினு
மொத்துவெண்கயிலையனேகமோளியாயொளிர்ந்தெனத்
தத்துமாடமலியுமோரிடங்கொள்செய்யதடநகர்
நித்தவாழ்வுகுன்றலின்றிநிகருமின்றிநிலவுமால். (௩௩)

திரிசிரன்புரம்மெனத்தெரிப்பரெங்குமதனிடைப்
பெரிசரண்மனையிலிருந்துபேணுமாறளிக்குமோ
ரரசசிங்கமவனிடத்தொராடலாருமல்லுளன்
புரசனங்களுட்புழுங்குமாறுவீறுபுன்மையான். (௩௪)

உடலமென்னவுள்ளமுங்கறுத்துழன்றதிண்ணிய
னடலையெய்துமரனும்வீசிநடந்துசெல்லுநெறியினே
புடையகன்றகுருதிகாலும்விழிபுரண்டுநோக்குமே
லுடையுமந்தகன்விடுத்ததூதனேயுமுட்கியே. (௩௫)

தன்னைவெல்லவல்லனித்தராதலத்திலில்லையென்
றுன்னியென்றன்வாயினானுமுரைத்திடற்குறுதமோர்
சின்னவெய்யசெயலிழைத்துளானதற்குமன்னகர்
மன்னனுள்ளமொத்துளன்கேளன்னதும்வழங்குவேன். (௩௬)

அப்புரத்தெயிற்கமைந்தவாயிலாமிரண்டனுட்
டப்புறத்தனுடையையொன்றின்மீதுதாழநாற்றியே
யெப்புறத்துமேகுவோருமஃதவர்சிரம்பட
வொப்புறப்படர்ந்துமீளலொல்லுமற்றதிற்குளே, (௩௭)

பூமிதேவர்புகுதலொல்லுமென்னவாணைபுரிந்துளான்
றீமையாயதன்னுடைக்கீழேகுகின்றதிறலினர்
தோமுறுந்தனடியதன்கீழேகுகின்றதுணையர்க
ளாமெனத்துணிந்துளானவன்கருத்தினடலினாய். (௩௮)

அந்தவந்தநகரியங்குமெந்தவெந்தமாந்தரு
மிந்தநீதிகுன்றுமாணையெங்குநாமறிந்திலேஞ்
சிந்தமானமித்திறத்தசிவனஞ்செயற்குமிங்
கெந்தலைக்கணெழுதிவைத்ததென்னவென்றினைந்துளார். (௩௯)

என்றிசைத்தமாற்றமந்தவிணையொழிந்தபுரவலன்
பொன்றளிர்த்தசெவியினூடுபுகுதலும்புழுங்குறச்
சென்றடர்க்கவவன்றனைச்சினந்துளந்துணிந்தன
னன்றடுத்துளாரயற்கணலிவுகண்டிருப்பரோ. (சo)

சேதிசெப்புவேதபாரகனுமுடன்செறிதர
வேதிமுற்றுமேந்தியேய்ந்தவீரர்சில்லர்போதர
மாதிரத்தநாகமொன்றுமதமிகுத்தெழுந்ததொத்
தாதியற்றவன்றுயின்றவரங்கமுற்றெழுந்தனன். (சக)

திரிசிரபுரத்தருகுசெல்லுபோழ்துதிகழ்தரு
மரசகோலமாற்றிமல்லராண்டகோலம்பூண்டுயர்
வரைசெறிந்ததோள்கள்கண்டமல்லர்கள்விதிர்ப்புற
விரைசெறிந்துசென்றுயர்ந்தவெள்ளெயிற்கணுற்றரோ. (சஉ)

மைந்துடன்பிணித்தவந்தமலினமுற்றசல்லடஞ்
சிந்தவந்தவுழையர்கையினேசிதைத்துவீழ்த்தியே
யந்தவிந்தையரணவாயிலுண்ணுழைந்தகன்றுசீர்
முந்திராசவீதியின்முடுகுறப்படர்ந்தனன். (சந)

வேறு.

ஆங்கன்னவனடலிற்புரிசெயலந்நகரெங்கு
மோங்கிப்பரவுறவேயனைவோரும்மறுகிடையே
தாங்கற்கருமிறும்பூதொடுதாங்கண்டவனழகை
வீங்கிப்பெருகேமத்தொடுவிளம்புற்றனர்பலவாய். (சச)

விச்சாதரனேயோவிவனென்பார்சிலர்விறலார்
துச்சாதனன்முதலோர்முனந்தொலையப்பொருதடர்த்த
நச்சார்விடநாகம்மெனநனிசீறிடுங்கதைவாய்
மெச்சாருமன்மறமாருதியாமென்பர்கள்சிலரே. (சரு)

இனியிந்நகர்மல்லன்சிரமிழந்தானென்பர்சில்லோர்
முனியின்னிவனடியொன்றினின்மூவாயிரமறவர்
நனிவிண்டுயிர்சாய்வாரெனநவில்வுற்றனர்சிலர்பே
ரணிகங்களுக்கிறையேயிவனுமென்பர்கள்சிலரே. (சசு)

பூமன்மகன்போலேயிவன்பொலிகின்றனனென்பார்
நாமன்னியதவமேயிவனணுகுற்றனனென்பார்
காமன்னிவனெழில்கண்டுருகரந்தானெனக்கரைவார்
பூமென்முலேயாரின்னமும்புல்லாவிடையென்பார். (சஎ)

ஒருமாபொறையிருதாளுடனேதுங்கும்மெனவேகும்
பெருமானிவன்மல்வேலேயிற்பிழைக்கின்றவனல்ல
னிருமாநிலமன்னன்மகனேதோவுருமறையா
வருமாலஃதினியாம்வெளியென்றார்சிலவகையோர். (சஅ)

உற்றாருழையன்புந்தனேயுகவாருழைவன்புங்
கற்றூழடலாரும்புயக்கந்தானிவனகல
முற்றானனமுலவும்விழியுழையேயொளிர்கிற்கும்
பெற்றாரிவன்றனேயேபெரும்பேறுற்றவரென்றார். (சகூ)

இவ்வாறவரவர்கட்குளமியையும்வழிபுகல
வெவ்வாய்வடிவாளன்னவன்வேந்தன்சவைபுகுத
வவ்வாரழகூராள்பவனன்போடெதிரழையா
வொவ்வாவதிசயமுற்றனனுளிராதனமிட்டான். (ருO)

இட்டன்னவனெழிலுந்திறலியையும்புதிதுணராக்
கட்டம்மிவனதுவெம்பகையெனவுள்ளதுகருதா
விட்டங்கொளவதிகிற்பதுமெவ்வூரிவணடையப்
பட்டுள்ளதுமெதுவோவெனப்பரிவிற்பகர்வுற்றான். (ருக)

நாடேயிதுநனியாள்புரவலநானினிதுறைவ
தேடாரெழின்மேனுடனேதிடையேயெனதகமே
கோடாவகைமற்போர்புரிகுணமுள்ளவனுளனேல்
வீடாயவன்விறல்சற்றினிவெளியாம்வகையென்றான். (ருஉ)

இவனங்குநங்காற்சட்டையையிழித்தானெனமுன்பே
தவமெவங்துளமுளவம்மலன்றனேமன்னவனேக்கக்
குவவம்புயங்கொட்டிக்குதித்தெழவேயவன்குமா
னெவருந்திடுக்கிடவேகிளர்ந்தவனின்னுரத்திடித்தான். (ருங)

இடியுண்டவன்றுடியுண்டிளவேந்தன்மிசைமோதப்
படியின்றளவாயிச்சமர்பார்த்தின்றெனவெவருங்
கெடிகொண்டிடவவரன்றடல்கிளரப்புரிந்ததனை
முடிகண்டிடயாமிங்ஙனமொழியுந்திறமுளமே. (௫௪)

இடசாரியும்வலசாரியுமிடும்போதவரடியிப்
படிசாய்தருமெனவேநடுநடுங்கும்படிபதிப்பா
ருடுசாய்தரவானத்தொளிருரமிக்குறவுரப்பி
முடிசாய்தரமுதுகுட்கவுமோதித்திறன்மொழிவார். (௫௫)

தாளோடுதாடகையாவகலத்தோடுரந்தாக்கித்
தோளோடுதோடுதையப்பொருதொடியப்பழுவுதையாக்
கோளோடுபின்வாங்கிப்பொருகுவவுத்தகரெனவிந்
நாளோடிவர்முடிவென்றிடநனிமுட்டுவர்தலைபான். (௫௬)

சினம்விஞ்சியவிடையேறிருசெய்போரிதுவெனவும்
மனமஞ்சுறுமிருபோதகமற்போரிதுவெனவும்
முனமஞ்சலனன்சேய்பகன்முடியப்பொருதெனவே
யினமஞ்சனுமவனெஞ்சிடவிகலிங்ஙனமிழைத்தான். (௫௭)

வேறு.

இன்னணம்பயின்றவெல்லாமிருவருநெடும்போதாடிப்
பின்னரும்வடிவாளேந்திப்பிறங்கெரிப்பொறிகள்சிந்த
மன்னியவெகுளியோடுமொருவரையொருவர்மாய்ப்பான்
பன்னரும்பரியவாட்போர்பலபடப்பயின்றகாலை. (௫௮)

மற்றவர்வாளாநிற்பத்திரிசிரபுரத்தார்மன்னன்
சற்றிருந்தென்னநீவிர்சமரொழிந்தனிரோவென்னக்
கொற்றவன்சிறுவனுங்கேயிடக்கரங்குலவுஞ்செய்ய
பொற்றிருப்பிரம்பின்மல்லன்றலையிணைப்புவியின்வீழ்த்தான். (௫௯)

கண்டதுமதனையக்காவலன்முதலோராருந்
தண்டலில்வியப்புவப்புந்தளிர்த்தெழக்கிளர்ந்தேயம்மா
திண்டிறலிவன்றனத்தலாகவத்திறம்போலெங்குங்
கண்டிலேங்கேட்டிலேமென்றிரைந்தனர்கலிப்புமோங்க. (௬0)

அரிந்ததுதெரியாதிந்தவடன்மலன்சிரங்களத்திற்
பொருந்தியவணமேநிற்பச்சூழ்ச்சியிற்புரிந்தவிந்த
விரிந்தொளிரகலத்தான்றனவிறலெவர்க்குண்டோவென்னத்
தெரிந்தனன்றிரிசிரன்றனூரினன்றெரிப்பானீங்கே. (௬௧)

வயத்திருவயங்குந்தோளாய்வழங்குதற்கரியநின்றன்
புயத்திறலென்னேயொத்தபுரவலருழையேயொன்றிச்
செயித்திடிற்பகையையன்றேசேண்டிகழுலகமெங்கு
முயர்த்திடுஞ்சிகரியுச்சிச்சுடரெனவொளிருமென்ன. (௬௨)

நரசராசுடையான்கேளாநகையெழநகைத்துவேந்தே
யரசர்பல்லோர்கணின்போலங்கையென்வயத்தினிற்பார்
புரசைமால்களிற்ருய்வந்ததாயதுபோவதிலென்னப்
பரிசெனுமிறப்பப்பெற்றுப்படர்கெனப்பரிவிற்சொன்ஞன். (௬௩)

நல்லதுநாளைவைகனணுகுவலவைக்கணென்று
சொல்லினனிறைவன்மீண்டிச்சுருங்கியகுறும்பன்கண்ணே
புல்லிதுபரிசுகொள்வதென்றுளந்துணிந்துபோகி
யொல்லையிற்புறத்திருந்தவுழையரைக்குழீயாங்கே. (௬௪)

மல்லரின்கோலநீங்கிமற்றவன்கோலந்தாங்கி
வல்லவன்மைசூரானிவ்வகைமல்லைச்செற்ருனென்ருேர்
புல்லியமுறிவரைந்தேபுரிசையுட்புகுவார்காண
மெல்லெனப்பிணிப்பித்தந்தவாயிலின்மிசையின்மற்றும். (௬௫)

வேதியன்மருங்குபோதவியங்கொளுமரங்கம்புக்குக்
காதலார்கண்ணேயூடிக்கருங்கணர்கழற்றிப்பெய்த
தாதவிழ்தொடையுஞ்செய்யதொடைகளுந்ததைந்துமின்னும்
வீதிகள்கடந்துமுன்றும்விழுத்தகுநிலயஞ்சார்ந்தான். (௬௬)

பிரணவத்துருவாயங்குப்பிறங்குபொன்விமானங்கண்டே
கரணமூன்றவற்றுண்மூழ்ந்துகருத்தருந்தூய்மையாகி
யரணெனக்கரங்கனேயென்றங்காஞ்சிரமேற்கூம்ப
முரணுறுமுளரிசேர்ந்தவெண்ணெயினுருகியுள்ளம். (௬௭)

உள்ளடைந்துயர்ந்தவெள்ளிப்பொருப்பினதுயர்ந்தகோட்டில்
விள்ளருங்கரியமேகமொன்றுகண்வளருமாபோ
லெள்ளருமனந்தன்போகத்திருந்தறிதுயிலிழைக்குந்
தெள்ளருந்திருமணாளன்றிருவடிதொழுதெழுந்தே. (௬௮)

ஆதியுநினக்கொன்றில்லையந்தமொன்றிலையானு
மாதியந்தமுமாய்நிற்பாயருவுமன் றுருவன்றேனுஞ்
சோதிசேருருவுமாகிச்சொலற்கருமருவுமாவாய்
போதனேயுனதுசீர்மைபுகல்வரிதெனுமுன்வேதம். (சுகூ)

எண்ணெங்கும்பரந்தநெய்யினெங்கெங்குமிலகினுன்றன்
கண்ணொன்றுமுணராதுண்டோகருதிடாதிதனையந்தோ
புண்ணொன்றும்விழியதொன்றேபொருந்தியகயவரஞ்சா
தெண்ணொன்றுதரியதீயவினையிழைத்துழல்வதென்னே. (எ0)

மூன்றினுண்முதலாநிற்கேபிறவுநின்மூர்த்தியாயின்
றோன்றியவவைகட்கெல்லாம்பிறிதொருதொடர்புமுண்டோ
தேன்றலைபொழுகுந்தண்ணந்திருத்துழாய்முடியாயிந்த
வான்றமெய்யறியாவண்ணமலைவதென்புதுமையையா. (எக)

என்றுபற்பலவுமேத்தியிதயநெக்குருகுமன்பே
நன்றிருவிழிகளானேநனிபுறம்பொழுகிற்றென்ன
மன்றலந்தொடையன்மார்பமறைப்பவானந்தபாட்ப
நின்றிடவிதயமாங்கேமீண்டனனிருபன்மாதோ. (எ௨)

ஏறும்வலியமைந்தவீரத்தெலுவர்கண்மருங்குபோத
நறுமலர்ப்பொழில்களெங்கும்பொதுளியநதிபாய்பொன்னிக்
குறையறும்பொழிலைநீத்துக்குணநிறைதனதுநாட்டி
னறைவரும்வளங்கள்கண்டேயகமகிழ்ந்தியங்குமேல்வை. (எங)

படர்ந்திடுநெறியினட்டப்பட்டதோர்பரியகற்றா
ணொடிந்துதுண்டிரண்டாய்வீழவொளிர்வலத்தசியான்வீட்டி
நடந்தவரதரிற்காணுநனிவியந்துரைப்பவேகி
யடர்ந்தபன்மணிவில்வீசுமரண்மனைக்கணுகிவாழ்ந்தான். (எச)

ரணதீர கண்டீரவ நரசராசவுடையார்

மல்லனைவென்ற சருக்கம்

முற்றிற்று

ஆக, செய்யுள்—எச.

இரண்டாவது

நாடுபெருக்கிய சருக்கம்.

பின்னரன்னவன்பெருநிலஞ்சுமந்திடும்பாரந்
தன்னையேன்றுதண்கவிகையுட்டழைத்துளாரெவரு
மின்னலின்றிநன்குதவுமூவிரண்டினுளொன்றை
மன்னியெங்கணுமகிழ்தரப்புரந்திடுமமையம். (௧)

ஆருமின்றியவொருதனியரங்கினுட்டனக்கு
நேருமன்பருண்மூவரைநிலவுறுதழைத்து
நாருமென்னகரனியுளிர்வயதறிவதிகங்
கூருமொய்ம்பினீரொருமறைவினவுவன்குறையீர். (௨)

உள்ளதன்மையையொருதலையாயுணாத்திடுவீர்
வள்ளலெம்பியிம்மடியிராசுடையனென்மகிப
னெள்ளவிவ்வுலகேழுமூன்றாகியவயதில்
விள்ளரும்புணாவிளைந்ததைவிளம்புகென்றிசைத்தான். (௩)

சத்தியம்புகல்கெனவவன்சாற்றலுமவர்கண்
முத்தமாலைமின்முரணுரமுதுநிலக்கிறையே
யத்தராதிபன்சிறிதுடம்பயர்ந்திடுமளவி
லித்தளத்திறைவிக்ரமராயனென்னிகலோன். (௪)

வஞ்சமெண்ணியக்குரிசிலைவதைசெயக்கொடிய
நஞ்சமுன்னலின்மருந்தினினணியுறக்கலவா
வெஞ்சவூட்டினனிறையுநீயையுறேலென்ன
நெஞ்செரிந்துபுண்ணயினுழைத்தாலெனநிருபன். (௫)

ஏதமன்னுமித்திறம்பலவியல்புறுநெறியா
னேதலின்றரிப்பரித்துளந்துணிதலைநோன்மை
யாதலின்னினும்பொறைமணந்தாய்துநாமென்று
மாதர்வாழ்தருஞ்சந்தவாரந்தனுட்சென்றான். (௬)

சென்றவண்வதிமுதியனைவினவலுமவரு
மொன்றுமொன்றுமிவ்வுளத்தினுமுணர்வருமுறுக
ணென்றழுங்கிடவினைவுடனினுமவற்கந்நா
ளொன்றியோடதியுதவியோன்றனையுறுத்துசவ. (எ)

அம்மருத்துவன்குலகுலந்தளிக்கொருகடலை
வெம்மையித்தொழில்வலிந்ததின்வினையினேனிழைத்த
துண்மையுண்மையென்றுரைசெயச்சங்கைநன்றொழித்தே
யம்மவோவிடவரவெனவழன்றனன்மற்றும். (அ)

ஆளுமன்னரையருங்கொலைபுரிவரானனமென்
நாளுநோக்கலுநனிநவையிவர்தமக்கியைய
மாளுமாறுறுத்திடுவதேநலமெனமதியா
மூளுமாசினத்துடன்றனைப்பயந்தவன்முதலும். (கூ)

தேறியந்தவிக்கிரமனின்றிருவளர்தொழிலைத்
தாறுபாய்கவுண்மதமலைதருமிறைதகர்த்துக்
கோறவன்னவற்குதவியகொடியர்தம்முயிரு
மூறுசெய்தவிவ்வுடறணந்தொழிதரவொறுத்தான். (க0)

வேறு.

அந்தணரொழுக்கமகலாதவர்செழிக்கக்
கந்தரமுங்காலமதிலின்புனல்கறக்கச்
சந்தமுறுமானிரையளப்பிலதழைக்கச்
செந்திகிரியின்னணஞ்செலுத்தியொளிர்காலை. (கக)

நஞ்சரசனென்னுமொருநாமனதற்கேய்ந்த
வஞ்சனைமலிந்தவன்முன்வாழரசவுடையா
னஞ்செறியுமாளுகையிலன்னவற்கிணங்கி
யெஞ்சலிலிருந்திறையுமேய்ந்துதவிவந்தோன். (கஉ)

சிற்றரசனேபெரியபட்டணமளித்தே
மற்றதிலிருந்தவனம்மன்னரசவுடையான்
பெற்றதுமுதற்பெரியவின்பமிவன்பேணு
னுற்றதிறையொன்றுமுதவாதுளந்துணிந்தான். (கங)

ஒன்னலரதூன்புலவுநாறுமொளிர்வேலிம்
மன்னவனமக்கிறையிடுஞ்சிறியமன்ன
ரென்னருளமரென்றலகிடுஞ்சமயமோர்நா
ளன்னவனெடும்பகலளித்திலனென்றறியா. (கச)

வெம்பியுளமோரனிகவேந்தனைவிளித்தே
பம்புசிலவீரரொடுசென்றவனும்பண்ணு
ணம்பணமிடாதவவைபலவுமுடனல்கென்
றம்பெனவறைந்தவையடைந்துதிருகென்றான். (கரு)

அம்மொழிசெவிப்படுமுனந்தவனிகக்கோ
னிம்மெனவெழுந்துபெருபட்டணமதேகி
நம்மிறைவனுக்குநெடுநாளளவுநல்கா
தெம்மகிமைகொண்டுதிறையிருத்தியெனவுரைத்தான். (கசு)

அப்பெரியபேதைசிலராய்விலரிசைத்த
தப்பரியபோதனையினன்றகந்துணிந்தே
கப்பமுதவத்தருகருத்துடையனுகிற்
செப்பமுடனப்பொழுதேசேர்த்தனனிருப்பேன். (கஎ)

வந்தவழியெந்தவழியோவதுவயஞ்சேர்
சுந்தரவறிந்துபடர்கென்னவவன்சோர்வில்
சிந்தையினுணர்ந்திவன்செருக்கைமகிபன்னே
வந்திவணடக்குகெனவெண்ணினன்வழங்கி. (கஅ)

மீண்டுதிருநாகணையின்மேலறியுறக்கம்
பூண்டதிருவின்னரங்கபட்டணம்புகுந்தங்
கேண்டிகழரித்தவிசிருந்தவிறைவன்பா
லாண்டவனுரைத்திடுமனைத்தையுமறைந்தான். (கக)

கண்டதையடுந்திறலக்கண்டீரவனிந்தக்
கண்டனையினிப்படுகளத்துயிர்தொலைத்தே
கொண்டுவயமீள்குவலென்னக்குறுகுறுத்தே
யண்டையுளசேனையதிபர்க்கவைதறைந்தான். (உ0)

ஆணையிறையனன்னமிழைக்குமுனம்விஞ்சை
வாணனதுவன்மையின்னொரேலெனவேவயெங்கும்
காணரியபுதுமையெனக்கண்டவர்வியக்கு
மேணமரும்வெம்படையுமீண்டியதுமன்றே. (உக)

மங்கையர்குயத்தெழுதுமகரிகைதயங்கு
மங்கவினுரக்குரிசிலப்பெரியதானை
பொங்கியுடன்போதவுயர்பொருப்பெனவயங்கும்
வெங்கரியின்மீதிவர்ந்துவெய்துறநடந்தான். (உஉ)

ஒன்றெனவணிந்தபலவுத்தமகுணங்க
ளொன்றியவளப்பில்வுலப்பரியகாலும்
பின்றொடர்வரும்வயவர்பின்னுறவலித்து
முன்றிருநடங்கவினமுடுகியெழும்விசைய. (உங)

வேலையகமொன்றின்மிசையொன்றுறவிரைந்தே
யோலமொடமூந்திரைகளொப்பிடவுமுள்ள
நாலதுநுவன்றபடியைங்கதியமர்ந்த
நாலொருகுரம்படியினண்ணலுமகன்ற. (உச)

இன்னமுமியம்பரியவெம்பரியினீட்டம்
பின்னுறவெழுந்தபெருமாவணிகள்பேச
லென்னவெளிதோவவையியங்குபொறையென்றே
பன்னுவரதன்பகடுபார்க்குமறிவாளர். (உரு)

கந்தடுவபண்ணுவர்கரங்குலவுதோட்டி
மைந்தொடுகரங்கொடுபறித்தெறிவமாலை
யந்திநிறமன்னுசிறிதாடுகருமேகப்
பந்தியெனவந்தொளிர்முகப்படம்படிந்த. (உசு)

கருங்கடலருந்துபலகாளமுகில்பாரத்
திருங்ககனமேறுவலமின்றியடிநான்கின்
வருபம்படிமிசைப்பொழிவினென்னமதம்வாரப்
பரம்பொடுபடர்ந்தனபகைக்குலநடுங்க. (உஎ)

இட்டகவசத்துமிசையென்னணியெறிந்து
பட்டபலவாகியபடைக்கலமொலிக்க
வட்டவடிவாயவிடுகோடுவடிவாளை
விட்டகல்கிலாதகரம்வெந்தினவுகொள்ள. (௨௮)

செய்யகணனற்பொறிகள்சிந்தினவிழிக்க
வெய்யகுரலின்மொழியினண்டமும்வெடிக்க
மொய்யமருடற்றுமளர்மூளுசினத்தோடன்
றெய்யெனவெழுந்ததையுரைப்பவரிதம்மா. (௨௯)

வேறு.

தண்ணென்னிலவுதழைக்குந்தரளத்திறைய
வெண்ணின்கவிகைமுடிமீதுமிழற்றவேந்தன்
றுண்ணென்றயலார்துளங்கத்துணைத்தானைசூழப்
பண்ணென்றுமும்பன்மிசையூர்ந்துமன்பட்டணத்தை. (௩0)

சேரற்குமுந்தச்செருக்குற்றவெஞ்சிந்தையொன்னான்
றீரத்தைமீறிக்கிளர்ந்தேவரும்வேலைசேரு
நீரொத்தெழுந்தநிகரற்றவெஞ்சேனையார
வாரத்தைபுற்றஞ்செவியுட்கினன்வந்தோர்வான். (௩௧)

விண்டுஞ்சுமாடமிசையேறிவிரிந்தசேனை
கண்டஞ்சயாருங்கடிமாமுரசோதைமுந்நீ
ருண்டுஞ்சுமந்தமழையின்னிடியென்னவோங்கத்
தண்டஞ்செயத்தன்னகர்க்கேகுதருனறிந்தே. (௩௨)

நாகத்துருமேறுமற்றப்பிலநண்ணியஞ்சு
நாகத்தையொத்திந்நரசிங்கனைநாமெதிர்த்து
வாகைக்குளாகும்வகையின்றெமக்கென்றிழிந்தே
யேகத்துணிந்தானிகந்தூருயிரோம்பவெண்ணி (௩௩)

சொல்லாதெவர்க்குந்துரிதத்துடனேடிமுற்று
நெல்லாவிளையுமலையூர்தனைநேர்ந்தொளித்தா
னெல்லாருயிரொன்றிருப்பின்னினிதாயவுப்பை
யில்லாவலைந்தாயினுஞ்சீவிகைமேவலாமே. (௩௪)

கண்டீரவன்பின்கடுந்தானையினந்தவூரைக்
கொண்டேயுறமுற்றுகைசெய்துமக்கூடலானுந்
தண்டேதுவுமின்றெதிர்ப்பாராயுந்தான்பெருது
விண்டேபதியைவிரைந்தோடினனென்றுகேளா. (௩௫)

நன்றேயிருந்ததிதுவென்றுகனன்றுநக்குப்
பொன்றேயவன்றனெழின்மாளிகைபுக்கங்குள்ள
மின்றேய்ப்பணிகண்மணிமேவருமிக்கபொன்னுங்
குன்றேயனையகயமான்முதல்கூர்ந்தவெல்லாம். (௩௬)

ஒருங்கேதிரட்டித்தனதூர்புகவுய்த்துமற்றும்
பொரும்பேரணியிற்புறப்பட்டவணின்றுபோகி
மருங்கேமலையூரொழவத்தகையற்றமாற்றுன்
வருங்கேடுணர்ந்தங்கிருந்தும்விரைந்தோடிமன்னோ. (௩௭)

சீராருருத்திரபுரம்படர்ந்தங்குச்சேரக்
காராரடலங்கரமன்னவன்கண்டதந்த
வூராமதையுந்தனதுட்படுத்தோங்குமந்த
வேரார்புரக்குந்துடர்ந்தேகினனென்பமாதோ. (௩௮)

மற்றங்கிருந்துமவன்மாகணக்காலென்னூரைப்
பெற்றங்குறையவதற்கிம்மனன்பின்னமேரக
வெற்றென்றதையுமிகந்தன்னவன்சித்தூரேகக்
கொற்றங்குடிசேர்குரிசில்லதையுஞ்செறிந்தான். (௩௯)

இவ்வாறவன்போமெழிலார்நகர்தோறுமன்னன்
வெவ்வாகினியோடெழுந்தத்திருவேண்டுமூர்கள்
வவ்வாவரலும்வகையற்றவஙநஞ்சன்வெம்பி
யொவ்வாவறமார்குடகுக்கொளிந்தோடியிட்டான். (௪0)

அங்குப்பெரியவனிகத்துடனுடல்வேந்தன்
பொங்குந்துகளம்பரமெங்கணும்போர்ப்பவேகி
யெங்கெம்மிகலோனெனநேடலுமந்தநஞ்சன்
பங்கம்மிவற்குப்படுப்பேனிவணென்றுதேறி. (௪௧)

மாசூரராமக்குடகாருடன்மன்னிநண்பை
யேசாவளத்தாரவர்வெம்படையெண்ணலாகா
விசாவொளியைவிளங்குங்கழுமுட்களோடு
மாசாகரன்சூழ்வரவந்துமலைதலானுன். (சஉ)

வேறு.

அங்கவர்தானையுமங்நரசிங்கனளப்பருவெம்படையும்
பொங்கியெழுந்தடுபோரிணையேவர்புகன்றிடவன்மையுளா
ரங்கனிகைக்குறுகாமமெனுமுனடங்கியவேந்துசின
மிங்கிவனேர்ந்ததுமீறியதேமணமேய்ந்தவடன்னதென. (சங)

வெட்டுவகுத்துவவீசுவமோதுவவெம்பியெறிந்திடுவ
கட்டுவகாதுவவாதியனேகவிதம்படுமேதிகளா
லொட்டிவெகுண்டொருவர்க்கொருவர்பொருதூறெடொழிந்ததனை
மட்டவிழைந்தருமாலையர்கண்டுமகிழ்ந்துவியந்தனர்மேல். (சச)

அன்றிகல்செய்துயிர்பொன்றியவீரர்களவ்வுலகம்படர
மன்றலலங்கலவர்க்கிடவிண்ணுறைவெம்முலைமங்கையர்கள்
குன்றியவைந்தருவின்சினைமல்கியகொழுமலரென்னினிப்
பொன்றியவவயவர்கணக்கிதுவென்றுபுகன்றிடுவாரொவரே. (சரு)

ஒருகையொழிந்தவரேணையதானுமுடற்றுவரங்கதுவும்
பிரிகையிருள்கொடுபேணலராவிபிளப்பராறுந்தவையு
முருளுவரன்னவர்மேன்மறுகின்கணுருண்டதிரள்கலெனை
நிருதர்களன்றுநிகழ்த்தியபோரெனவாடினரின்றுமிவர். (சசு)

தாக்குமிரும்புகடம்மொலிவாதமறைந்தவர்வெங்கலிமே
ளேக்கியகைகொடிடித்திடுமார்ப்புமுரப்பியநோன்பிசையும்
பூட்கைகளிட்டபிளிற்றெடுவொம்புரவித்தொகையின்னியமு
மாக்கியவண்டமடங்கலிலப்புறம்விண்டுகிளம்பியதே. (சஎ)

பொன்மயமாயவிலங்கையிலேமுனம்பொய்யறுபூவைவணன்
கன்மயமாயவரக்கர்குலத்தையுழக்கியதன்மையென
நன்மையணுகியவிந்நரசிங்கனுநள்ளிரவும்பகலும்
வன்மையணுகியொரேழுதினம்பொருதழிதர்வாட்டினனே. (சஅ)

வென்னிடுவோரவரூர்செலவிட்டமர்வேண்டியெதிர்த்தவரி
ணின்னுயிரேமனருந்திடநல்விருந்திட்டிகனஞ்சரசன்
றன்னுயிரும்படவென்றுயர்வாகையந்தாமம்புனைந்துசயம்
பன்னுறுவெம்முரசோதையுடன்விறல்பாடொலியும்மிகவே. (சகூ)

பீதகமாமணியாழுயர்கோபுரமின்முடிபெட்புடனே
யாதரவோடுகண்டங்கைகுவிப்பினுமைம்பவமுந்தொலையு
நாதனரங்கனதின்னிலயத்தொளிர்நலமிகுதன்புரியை
மேதகுமேன்மையுடன்புகழ்மீறிடமீண்டடைவுற்றனனே. (ருo)

வேறு.

ஆங்கவனறங்களோங்கவவனியைப்புரக்குநாளிற்
பாங்குறுமிடபபட்டணந்தனிற்பரிந்துகாக்கும்
வீங்கியபுயத்தன்வீரத்தனுமநாயகனுமேலை
யோங்குமிக்கேரிவீரபத்திரனிகலையுன்னு. (ருக)

தனக்குறுமமைச்சனுயவேங்கடதேவன்றன்பா
லெணற்கரும்பொருள்களீந்துபீசமாபுரத்திற்கேகி
நினைக்கவுமரியவீரநேர்ந்தவணளிக்கும்வெய்ய
வினைக்குறுதுருக்கராசற்கிதனைநீவிழைவிற்றந்தே. (ரு௨)

கருதலன்கலங்கும்வண்ணம்படைத்துணைபுரிகவென்று
பரிவுடன்பகர்தியென்றன்பணிமொழியெனவிடுக்க
விரைவொடுமவனுமாங்கேயேகினன்விழுமிதந்தப்
பரிசினையுதவிச்சொன்னனரட்டனும்பணித்ததம்மா. (ருங)

வலமிகுமவனுமந்தவண்ணமேயுதவவுள்ள
மலமரவொருப்பட்டுள்ளதோர்ந்தவன்மலிந்தசேனை
நலமுறநடத்துஞ்சேனைநாயகனொருவன்வேந்தே
யிலகிடுமெனதுவாய்மையொன்றுகேளெனச்சொல்கிற்பான். (ருச)

கொல்லறஞ்சிறந்தகூர்வேற்றுருக்கர்தங்குலத்துவேந்தே
வில்லறஞ்சிறந்தமைசூர்வேந்தன்றன்படையையாளு
மல்லறஞ்சிறந்தவிக்கிரமன்றனைமடித்தவாற்று
னல்லறஞ்சிறக்கலின்றிநணிநவையயர்ந்தானென்னு. (ருரு)

அவனருஞ்சுற்றமெல்லாமரதியாயிருக்குமிந்தத்
தவல்வருமமையந்தன்னிற்றுக்கிடினவனேவென்று
கவர்வுறுமரங்கபட்டணந்தனைக்கடுகியென்று
னிவர்மனத்தவர்க்குநீதியெங்ஙனம்புலத்திற்கேறும். (ருசு)

துருக்கனம்மொழியையேன்றுதுன்னலர்துவளவாட்டு
மருக்கமழலங்கரேளம்மன்னனைவயங்கொண்டான்போற்
செருக்கினன்றனதுசேனைமன்னனிரணதுல்லாகா
னரக்கனுக்கிணையான்றன்னையழைத்தனனறையுமீங்கே. (ருஎ)

எண்ணஞ்சாயிரமாமாடன்மாவுமோரிலக்கமள்ளர்
கண்ணஞ்சாருடனேயேகியனுமற்குக்கருதலாரை
முன்னஞ்சாய்வுறவேவாட்டிமுகிலுறங்கெயில்கள்சூழும்
வண்ணஞ்சாரரங்கந்தன்னைவயட்படுத்ததன்பினென்றான். (ருஅ)

நண்ணலர்குருதிநாறுநாமவேலிறைவநின்றன்
கண்ணியமொழியின்வண்ணங்கவினுறப்புரிந்தேனென்றே
யெண்ணுகென்றிசையாவீரகங்கணம்புனைந்துதானே
திண்ணெனவெவருமஞ்சத்துருக்கனும்புறப்பட்டானே. (ருகூ)

ஓசனையிருமூன்றுயதலத்தின்யேலொருங்குசேர்ந்து
மூசியபெரியதண்டின்முரசொலியுலகம்போர்ப்பக்
கூசிடவெவரும்போகிக்குளிர்புனலரங்கமுன்னம்
பூசைகள்புலியைச்சூழ்ந்தபுதுமையின்வளைந்துகொண்டார். (கூ0)

அந்தியினளத்தற்கொல்லாவாகினியரணஞ்சூழ்ந்த
விந்தையைவேந்தன்காணுவிடிதலுமிதனைவீரஞ்
சிந்தியேயிரிதல்போகச்செய்குவநிசிபானீவிர்
முந்துறவளிக்குகென்றுமுரண்படைவலவர்க்கோதி. (கூக)

நம்புயவலத்திற்கிந்தநராதமத்தொகைகளெங்கென்
றும்பருமுவக்குமந்தவுத்தமன்றுணிந்துசாந்தக்
கும்பமென்முலையாரோடுங்கொழுமலரணையிற்கூடக்
கும்பரினவன்றன்வீரர்கோட்டையைவிழிப்பிற்காத்தார். (கூ௨)

மறஞ்செறிதுருக்கரோங்குமலைநிகரரணத்தின்கீ
ழிறங்கினவொலிகளென்னவகழ்தரவிடிந்துசாய்ந்த
திறந்தனின்மதின்மேனின்றுதிறம்படவளித்தசில்லோ
ரிறந்தனரிடிந்துவீழ்ந்தசிலைகளுக்கிடையிற்சிக்கி. (சுரு)

கண்டதைநரசராசன்கனற்பொறிசிதறக்கண்கள்
கொண்டனனிரணியற்குக்கூற்றுவனுருவமென்னத்
திண்டிறனரசிங்கமெனுமசிதிருக்கையேந்தி
மிண்டரினிடையிற்பாய்ந்தான்றடுப்பருமிடலினம்மா. (சுச)

படைத்துணைக்கெழுந்தோர்தம்மைப்பட்டணம்பதனஞ்செய்ம்மி
னுடைத்தெனக்குதவியிந்தக்கட்கமொன்றயையுமென்று
மடைத்தலைபடியுமாழைமணன்மிசையொளிரப்பொன்னி
யடைத்தலின்றொழுகுநாடனுடினன்சமரலீலை. (சுரு)

முன்னுதித்தரக்கர்தங்கள்குழாங்களைமுனிந்துசெற்ற
மன்னுரத்தனுமனேகான்மதலையாய்மற்றுந்தோன்றிப்
பன்னகத்துவசனுதிபகைவரைப்படுத்தானின்று
மின்னபொற்குரிசிலானுனென்றிடவெவருமாங்கே. (சுசு)

கறங்கெனவசியுந்தானுங்களமெலாந்திரிதல்கண்டார்
மறங்கிளர்நரசராசன்பலவுருமணந்தானென்று
ரறுந்தனகரிகடாள்களற்றனவயங்கள்கண்டந்
தறிந்தனர்தலைகளாட்கடயங்கினர்மிகுந்தோரெல்லாம். (சுஎ)

இன்னணமெயிலைச்சூழ்ந்தவெறும்வலித்துருக்கன்றானை
சின்னபின்னங்களாகச்செய்திடுமனையன்சேடித்
தின்னுயிர்பிழைக்கவெண்ணியிரிதருமவரைநீவிர்
தன்னமுந்தளர்தலின்றிப்படர்கெனவருளிமீண்டான். (சுஅ)

பட்டணம்பிடிக்கவந்தபடையெலாம்பட்டபாட்டைக்
கெட்டனமெனநன்குள்ளிக்கெடலருந்தானைநாய்கன்
மட்டவிழ்தொடையானிந்தமகிபனையமரில்வேறல்
கட்டமென்றவன்றனட்பைக்கருதினனிருந்தகாலை. (சுகூ)

நாகமங்கலத்துச்சென்னைநாயகன்றனதுவாய்மை
மோகமாயதுவென்றுய்ந்துதுருக்கன்றன்முகத்தைநோக்கி
வாகையுமழிவும்போரின்வலவர்க்குச்சதமதாமோ
நீகவன்றிதற்குச்சந்திநேர்வதுதகுதியன்றால். (௭௰)

கரந்தியானரங்கம்புக்குக்கண்டிராசியங்களெல்லாந்
திரும்புவல்பொறுத்தியென்னத்தெரித்துப்பின்னொற்றற்குற்ற
வரும்படிவத்தனாகியறிந்தவணிகழ்ந்தவெல்லாந்
தெரிந்தனனொருவற்கோதிவிடுத்தனன்றெரியாவண்ணம். (௭௧)

சென்றவன்சேனைவேந்தேசீரங்கபட்டணத்தை
வென்றனையாதியின்னேவினாகநம்படைகளாங்கே
பொன்றினர்கருதலாவொன்றுவப்புடனயர்ந்துபோற்றார்
நின்றனர்நிருபனுதிநிகரரும்வலவரென்றான். (௭௨)

வேறு.

என்றவன்மொழிதலும்மெழுப்பினான்படையைமுன்
சென்றவெஞ்சேனையுட்சேடமாய்நின்றதைக்
கன்றிவெங்கடுமையோடன்றகழ்ந்திட்டபேர்
குன்றுறழ்மதில்வழிக்குறுகியதப்படை. (௭௩)

கொற்றவன்படைஞருங்குறுகலார்வாகினி
மற்றுறுதூடுபேர்மறத்துடன்பொருகையிற்
பிற்றைநாளரண்மிசைப்பெரியதேர்நிருதர்க
ளுற்றவெஞ்சேனையவ்வொன்னலர்கண்டனர். (௭௪)

ஆவெனத்திறந்தவாயலையெனப்புரளுநா
தாவரும்பிறைகளோரிருபுறந்தயங்கிய
தோவெனும்படிகடையொளிருதந்தங்களுந்
தூவனற்பொறிகளிற்சுழலுபேர்விழிகளும். (௭௫)

ஓங்கிருங்கரும்பனையொத்தமாதாள்களே
யெங்கெமன்றாதருமிடியெனுங்குரல்களே
யோங்கலின்முடிநிகர்த்தொளிருபொன்முடிகளுந்
தாங்கினர்தானையுந்தளதளென்றொளிர்வன. (௭௬)

கண்பகனளினநாயகனிகரொளியுளார்
பண்பெலாங்கண்டவப்பகைவரிப்பான்மையா
ரெண்பருந்திறலுளாரிவருடற்சோதியே
திண்பெருந்திறலெமைத்தீயுமாசெய்யுமே. (எஎ)

இன்னுமீராறுமட்குறியிவரேய்ந்ததாற்
பன்னகசயலனிப்பட்டணத்தரங்கனின்
மன்னுவெம்மாயையின்மலிந்துளாரிவர்களே
யின்னைவெல்பவரெங்குளாரீங்கெனு. (எஅ)

துணிந்தனர்மீண்டுடன்றருக்கசேனைக்கிறைக்
கெணுந்திறமின்றியவிவையெலாமியம்பினர்
பணந்திகழரவணைப்பாயலானருளினை
மணந்தவர்மாட்டெவர்மாடுவார்பரிபவம். (எகூ)

அப்படைக்கிறையுநன்கதிசயித்தரங்கனின்
றப்பருந்தயையினைத்தகைந்தவித்தரணிபற்
கொப்பெவனென்றுளாவுறவுகொண்டவனுடன்
செப்பருந்தானையிற்சென்றுமிக்கேரிவாய். (அ0)

வீரபத்திரனொடும்வீரமிக்கிகல்செயப்
போரகத்தவனுமெய்த்திரிதலேபோகவே
யூரகத்துளவெலாஞ்சூறைகொண்டூர்செறிந்
தேரகத்துற்றவெல்லாமிறைக்கியம்பினன். (அக)

வேறு.

இங்கெழிலிறைவனெழுந்தமாற்றலர்க
ளெயின்மிசைக்கிளர்ந்தபேரரக்கர்
தங்கள்வெம்படையைக்கண்டனர்பனிப்பத்
தளர்ந்திரிந்தொழிந்ததுசெவியுற்
றங்கமம்புளகமரும்பநீர்வார
விருகணுமரங்கனைப்பழிச்சித்
திங்கள்வெண்சடையானருந்துயர்கெடுத்த
திருவடியிணைமலர்தொழுது. (அஉ)

பேணலார்மகிடன்புரியுமேதேனும்
பேதுறவிழைப்பரோவென்று
மாணிலாஞ்சிறிதுமறப்படைசூழ
வெழுந்தவணடந்தனவினவ
ரேணிலாம்வயவரிருந்தவர்சிலரோம்
மிறைவகேளிங்கெணற்கரிய
மாணலார்படைகண்மறமிகுத்தரணை
வயங்கொளமலிந்தனர்வளைந்தார். (அங)

வளைந்தவரயில்வாய்வாளமர்தொடங்க
விருந்தநம்வயவரோடியர்மேற்
றளந்தனின்முழுதும்பதணமாரெயிலிற்
றழைத்தொளிர்முகினிகர்குழலை
யுளைந்திடவெவரும்வியிரித்தனரெண்ணுன்
கொளிர்படைக்கலங்களுங்கையுமா
யளந்திடற்கரியவரக்கிகளனேக
ரழலெழவிழித்தனருரப்ப. (அச)

கண்களிற்காணுக்குலைகுலைந்தெடுத்த
கருவிகள்சோர்தரவலமந்
தெண்கருத்திலராயிரிந்தொழிந்தனரென்
றிசைத்ததுசெவிகொளாவிறைவன்
றெண்கடற்றுயிலுந்தேவனேதனது
மாயையைத்தெரித்திவண்புரக்கத்
திண்கழற்காலராயவணளித்தான்
றேர்பவராரவன்றிறமே. (அரு)

காசினிநலுழக்கரவடஞ்செறிந்த
கஞ்சனைக்காய்ந்திடக்கருதிப்
பேசருந்தனதுபிரகிருதியைமுன்
பிறந்திடவாயர்கோன்வளவி
லாசறவருளித்தேவகியுதரத்
தவதரித்ததன்பிறகயர்ந்த
மாசறுவினையாட்டவையெனவிதுவு
மொன்றெனமகிழ்ந்துளந்துதித்தான். (அசு)

ரணதீர கண்டீரவ நரசராசவுடையார்
நாடுபெருக்கிய சருக்கம்
முற்றிற்று.

ஆக, செய்யுள்—கசுo.

மூன்றாவது

ரணதீரகண்டீரவநரசராசவுடையார்

கள்ளரைவென்ற சருக்கம்.

தொண்டையங்கனிவாய்த்துடியிடைமகளிர்
துணைமுலைக்களிறுகளசைதல்
கொண்டுறப்பிணிக்குங்கந்தெனக்குலவுங்
குவவெழிற்புயத்தினக்குரிசில்
பண்டையமனுவினெறிப்படியெவரும்
பருவரலெய்துறாவண்ணந்
தண்டிருத்தரளத்தனிக்குடைநிழற்றி
யிவ்வணந்தழைத்தனனிருந்தான். (௧)

இன்னணமொழுகுமெல்லையிற்றிரிசி
ராப்பளியிருந்தரசியற்று
மன்னவன்மைசூராள்பவன்றுருக்கர்
வலிதொலைந்தழிதரமலைந்தா
னென்னுமம்மொழிகேட்டலுமுளந்திடுக்கிட்
டிவன்மணிமுடிபுனைவதற்கு
முன்னமேபடர்ந்திங்கெமக்குறுதுணையான்
முரண்மிகுமல்லனைச்செகுத்தான். (௨)

எமதுழையிருந்தானிகல்சொலற்கெளிதோ
வெவர்களுமவன்பெயரெடுக்கி
னமனெதிர்ப்பட்டநரனெனநடுங்கு
வார்களேயயர்தலொன்றின்றிச்
சுமனசங்கொய்யுந்தொழிலெனத்தொடலை
யாகவேயவன்சிரந்தொலைத்தான்
மும்மதமால்களிற்றினன்னவனினியிம்
மூதெயினக்ஷணாயும்வளைப்பான். (௩)

ஆகையின்வெள்ளம்வருமுனமணேசெய்
கென்றருளான்றவர்மொழியா
ஞகிளங்கமுகைநகைசெயுங்கழுத்து
நகைமதிமுகமுமாயொளிருந்
தோகையர்பெருமைதுலங்குமந்நகரத்
தோன்றலேவிரகினனின்றே
வாகைகொள்வதுவேவலமெனத்துணிந்தா
னவனுடன்பொருதிறலொழிந்தான். (ச)

பொருதிரைப்பரவைப்புடவையம்புடவி
போற்றுவோர்க்குறுநெறிதணந்தந்
நிருபனேயைந்துநிருதரைநிகர்க்கு
மல்லரைக்குய்யமாயழையா
வரிசுமந்தொளிருமாதனத்தாட்சி
யவனியுட்பெருகியமைசூர்க்
குரிசினம்மல்லேக்கோறல்செய்ததுமுன்
குறித்துளீருடற்றுமற்றெழிலீர். (ரு)

அத்தகையடலாரவனமதரணேத்
தாக்குதற்கடற்படையுடனே
யித்தலேயெழுதற்கெண்ணுளானென்ன
விசைத்தனர்வழியுரைப்போர்க
ளத்திறத்தேனுஞ்சூழ்ச்சியிற்படுப்ப
தெளிதெனுமியையுநீரறிவீர்
குத்திரத்தெவருந்தெரிவுருவண்ணங்
குறுகியக்கொடிநகரினிநீர். (சு)

தமியனுயுறையுமமையமெங்கேனுந்
தக்கவாநேர்ந்திடிற்காணுக்
கமையுடன்கூம்பிவாய்ப்பினிற்கடிது
கௌவுமீன்கொக்கெனப்பாய்ந்து
நமனகம்புகுத்திவம்மினேவெவரு
நாடிடாவகையெனநவிலா
வமையுமேயமையுமென்றவருவக்கும்
பரிசெலாமளித்தனன்விடுத்தான். (எ)

வள்ளலேயந்தக்கன்னடத்தரசன்
வலம்படுமுடியினைநினது
தெள்ளொளிமணிசேர்கங்கணப்புனைந்த
திருக்கரத்தளித்தனமென்றே
கொள்ளுகவென்றக்கொடியவரறைந்து
கொண்டனர்பரிசிலும்விடையும்
பள்ளநீர்ப்பழனங்கிள்ளிநாடகன்று
பருப்பதநிறைபொழிலணைந்தார். (அ)

அணைந்தவர்வேறுவேறுருவெடுத்தே
யலங்குளேயேழ்பரித்தேரோ
னுணங்குவெங்கதிரினுலேந்திடாவின்ப
மோங்குமங்நாட்டகம்புக்குத்
தணந்தனரொருவரொருவரோடிணங்கார்
தனித்தனிபடர்ந்துமேலரங்க
மிணைந்தரண்மனையினுளவெலாம்பன்னாட்
பயின்றறிந்திருந்தனர்படுப்பான். (கூ)

தாயெனவுலகந்தாங்குறுமவனைத்
தடிந்திடுந்தருணநாடியவம்
மாயவெங்கொலைஞரொருதினமிரவின்
மலிபுனற்கிடங்கினுளிழிந்து
வாயிலோரெவருமறிவுறுவகையே
வளரெயிற்குட்புகுந்தொளிருங்
காயிரும்புகளுங்கையுமாயமையன்
கண்வளர்மணியகம்புகுந்தார். (க0)

வேறு.

ஆங்கடன்மன்னவனயின்றுபாளித
மோங்கருங்கருங்கலினுஞற்றியூறினி
தாங்குளிர் தூலமுமைந்திணக்கிய
பாங்குறுமமளிமேலிருந்தபான்மையான். (கக)

அளித்திடுந்தொழில்களிலரியதொன்றினைத்
தளிர்த்தெழுமனத்திடைநினைந்ததன்மையா
னௌித்திடவுறக்கமுமொன்றியாயிருந்
திளைத்தவர்க்கெயிலனைதிரிநோக்கினன். (கஉ)

இடையெலாம்பசும்பொனுயிலகுமண்டப
முடையவோங்குயர்ந்தபேரொளிருதூண்களின்
படருமாநீழலிற்பதுங்கிநின்றவவ்
விடைநிகர்விறலனைவிழியிற்கண்டனன். (கங)

ஆரிவரடுபடையலங்குகையினர்
காரிருள்வெளுத்திடக்கறுத்தமெய்யினர்
போரிடத்தகுமுரமிருந்தும்பொய்யின
ராருவர்வயமமரிவர்கட்செய்யினர். (கச)

சுவர்ந்திடப்பொருள்வருகள்வரல்லரிங்
கவந்தனிற்பொருதெமையழிக்கவந்துளார்
பவந்தனதுருவெனப்பதுங்குமித்தகைச்
சவந்தமைச்சமன்றனக்களித்துமீங்கெனு. (கரு)

உய்த்துணர்ந்துளந்துணிந்துருத்துச்சிறுவெம்
பைத்தபாம்பெனவெழுந்தொளிரும்பாங்கரி
னித்தலும்பகல்வுறுநெடியவாளினை
வித்தகம்விழைவலக்கரத்திற்கொண்டனன். (கசு)

தன்பெயருடையதுந்தானேயன்றிமற்
றென்பெருவலத்தருமெடுக்கொணுதது
முன்புநூறுயிரவலவர்முந்தினும்
வன்புடனவர்சிரமெறியவல்லதும். (கஎ)

வளைகளின்சிறகளையரிந்தவச்சிரம்
புனையவெங்கல்லையும்போழவல்லது
மருவலர்படைகளான்மாய்க்கொணுதது
மெரிமிகச்சொரிதருமிடியையொத்ததும். (கஅ)

கந்தமார்சந்தமுங்கமழுமாரமு
மந்தமார்தன்கரத்தணிந்துபூசனை
வந்தநாடொறுந்துதித்தாற்றவல்லது
மிந்தமாமுடலைகளின்னுமேய்ந்ததும், (ககூ)

உண்டிடும்பொழுதினுமுறங்குங்காலினு
மண்டையினகல்கிலாதலங்கற்பாலதுந்
திண்டிறல்வயவருந்திடுக்கென்றேங்குறக்
கண்டிடிற்கருப்பமும்கலங்கப்பெற்றதும். (உ௦)

ஆகியவதனுடனெழுந்தவள்ளலைப்
போகியபுரையினர்பொருக்கென்றென்றுசேர்ந்
தோகையினெளிருமோரரியைச்சூழ்ந்தசெந்
நாய்களின்வளைந்துபோர்நடத்தலுற்றனர். (உக)

என்னைநாமிச்சிறுபுழுக்களோடுவெங்
கொன்னவில்கூரவாளெடுத்துப்போர்பொர
லென்னவவ்விளமழவிடையுமெண்ணினன்
மின்னலினொருமுறைமிளிரச்சுற்றினன். (உஉ)

சுற்றலுஞ்சிலர்சிரந்துணிந்துசோரிமேன்
மற்றெழப்பீறியேமண்ணின்வீழ்ந்தன
செற்றமீதூர்ந்திடச்செறிந்துமற்றவர்
கொற்றவன்மேற்பொரக்குறுகினார்களாம். (உங)

ஆடகப்பொருப்பெனவயங்குமன்னவன்
வீடுறச்சிலர்சிரம்விழுத்திமண்மிசை
நீடவர்கழுத்திடைநிறுத்தித்தாள்களை
நாடகக்கணிகையரெனநடித்தனன். (உச)

அவ்வியமவித்தவவ்வாயன்பின்னரு
மொவ்வொருதிரள்கலையொறுக்குந்தோள்களுங்
கவ்வையிற்சிலருடல்கசங்கச்சேர்த்தெழச்
செவ்வியகுருதிமேனசுக்கிச்சிந்தினன். (உரு)

புன்னகைபுரிமுகப்பொலிவினின்னண
மொன்னலர்க்கடந்தவாளுழவன்செய்கையி
னின்னுயிரிறந்தவரிகந்தவேனையர்
மன்னியபடைகளையெறிந்துமண்மிசை. (உசா)

தங்கரங்குவித்தனர் தரணிமன்னவ
னங்கழல்புனைதருமடியின்மேல்விழுந்
தெங்களின்புரவலனிகலிற்செப்பிய
பங்கமுண்மொழியினிப்பழுதுக்கேய்ந்தனம். (உஎ)

ஐயயாந்திரிசிரபுரத்தையாள்பவன்
வெய்யசொற்கொடுமுனைந்துனதுவெஞ்சிரங்
கொய்யவந்தவர்களக்குறும்பன்பொய்ம்மொழிக்
குய்யவிங்குரமிலேமொருப்பட்டேகினேம். (உஅ)

அளிக்கொருகடலனையளித்தியெம்மையென்
றிளைத்தவரிரத்தலுமிறைவன்றண்மையா
யளித்தவற்கபயநும்மரட்டன்பாற்செலீஇ
விளைத்தவையிவணினிவிளம்பிமற்றரோ. (உகூ)

குறும்பரின்குணங்களுக்கிணைந்தகொள்கையே
யறம்பிறழ்ந்தாற்றியநினதுவாழ்க்கையென்
னிறங்கிளரசிறுனிநிமிருமட்டுமென்
றறைந்ததாயறைமினென்றறைந்துபோக்கியே. (௩0)

பொன்றியசவங்களைப்புறப்படுத்துமி
னென்றுரைத்துழையரைவிளித்தேயின்மல
ரொன்றியவமளியினுவந்திவர்ந்தனன்
பின்றறிந்தவரெலாம்வியந்துபேசினர். (௩க)

ரணதீரகண்டீரவநரசராசவுடையார்

கள்ளரைவென்ற சருக்கம்

முற்றிற்று.

ஆக, செய்யுள்—ககூக.

நான்காவது

சீர்திருத்தச் சருக்கம்.

மாமனுவின்வாய்மைமண்டலத்தில்வீறடையக்
காமன்விரும்புமெழிற்கண்டீரவனடத்தித்
தூமென்மொழிமகளிர் துணைமுலையின்பம்பருகி
யேமமுடன்மற்றிழைத்ததீங்குரைத்துமின்னினியே. (க)

ஓராயிரம்பணமீதொண்மாமணிவிளக்க
மேராயிலையந்திலகமேவெய்ந்தவரவரசின்
சீராரும்போகமிசைச்செங்கண்வளர்ந்தருளுங்
காராரெழிலரங்கன்கருத்திற்குவப்புறவே. (உ)

சீரங்கபட்டணத்திற்சிந்திப்பினுஞ்செடிக
டீருஞ்சுகதீர்த்தமென்றெவருஞ்செப்பலுறும்
பேரின்பப்புட்கரிணிதன்னைப்பெரிதாற்றித்
தீரங்கண்மேனுளுஞ்செழிக்கும்பொழிலமைத்தான். (ங)

அம்மாவிருந்தடத்துளன்பின்மனமுருகிச்
செம்மாந்தெழிற்பெடையைச்சேர்ந்தேசுகித்தொழுகும்
பொன்மாமைச்சக்கரமும்புகுநற்கதியென்னி
னெம்மாலதன்பகடுமீங்கிசைத்தற்கேலுமதோ. (ச)

அம்புதமேலாடுகொடியவ்வூரரண்மனைக்குத்
தென்புறமாயோரகன்றதேவகுலமிழைத்தா
னும்பரிரவும்பகலுமொருவியொளிர்வதத
னம்பொற்சிகரிமுடியலங்குமணிச்சோதியினே. (ரு)

பொன்னனுரங்கீண்டபுனிதனவதரித்த
மன்னுதிருவோணாயினிற்றூன்பிறந்தமாட்சியினே
மின்னுநரசிங்கன்மெய்யுருவேவயங்கிலயத்
தின்னல்களைதரவேவெழுந்தருளப்பண்ணினனால். (சு)

அண்டங்களையீன் றளித்தருளுமன்னையெனும்
புண்டரீகம்பொலியும்பூமாதின்பொன்னுருவுங்
கண்டருளும்வண்ணங்கவினார்திருவிழவுந்
தண்டரளவெண்குடையானெழுந்தருளத்தானுற்றி. (௭)

ஆழ்வார்களாரியர்கள்விக்கிரகமும்விளக்கிப்
பேழ்வாய்நரசிங்கப்பெருமாண்முதலோர்க்குத்
தாழ்வாரானுனெறியிற்றக்கபருவங்களிலே
வாழ்வாருமுற்சவங்களெல்லாம்வளைவித்தான். (௮)

அஞ்சிரவினாசாரத்தடையநடத்துகைக்கு
மஞ்சுறழுங்கையான்மலியப்பொருள்வரவிற்
கெஞ்சலறும்பல்வளத்தவூர்களபலவேன்றளித்துக்
கஞ்சமலர்க்கண்ணன்மேற்கணக்கும்பொறிப்பித்தான். (௯)

ஆராதனமிழைக்குமருச்சகரேமுதலாய
வேராருங்கைங்கரியமியற்றுபவரெனைப்பலர்க்குஞ்
சீராரரசுகசீவனஞ்செய்யப்
பேராப்பெருவருவாய்பேணியவனுங்கமைத்தான். (௧௦)

பெருமாள்பிராட்டியர்க்கும்பெருகுந்திருக்குருகூர்
வருமாறனேமுதலாம்வண்மையருளாழ்வார்க்குங்
குருமார்க்குஞ்செய்தளித்தகோலமணிப்பொற்பணிக
ளிருமாநிலத்தெவரேயித்துணையென்றேதுபவர். (௧௧)

படிகமுதற்பாத்திரமுஞ்சேகுயர்ந்தசெம்பொன்னு
மடுகையடுங்கலமுமத்தகையவாடகமாம்
பிடிகளுயர்கவரிக்குமத்தகையபீதகமாங்
குடையினெளிர்காம்புமத்தகையகூழென்பர். (௧௨)

கோபுரமுஞ்செம்பொன்னுங்கொடிமதிலுஞ்செம்பொன்னு
மாபெரியமண்டபமுமலர்ப்படிபுஞ்செம்பொன்னுந்
தாபதர்கணன்குனாக்கத்தங்குமிடஞ்செம்பொன்னுந்
தூபங்கமழ்சந்தடுக்களையுஞ்செம்பொன்னும். (௧௩)

அப்பெருமாளின்பெரியதிருவடியினாலயமுஞ்
செப்பற்கரியசிறுதிருவடியின்சினகரமு
மொப்பற்றவாடியாரொளிருந்திருத்தளியு
மெப்புறமும்வில்லெறியுமோரரிரணியமாம். (கச)

வண்ணம்பலவாய்வயங்கெழிற்பட்டாடைகளு
நண்ணுநவமணிகணன்கொளிர்பீதாம்பரமும்
பண்ணும்பலபூத்தொழில்செறிந்தவித்துணையென்
றெண்ணம்புரிந்துழைக்கவேவருளரீங்கடைய. (கரு)

தண்டாச்சிறப்பித்தகையாயவெப்பொருளுங்
கண்டீரவமென்றேகவினப்பொறித்தனனு
மொண்டாரினான்புலவுநாறுமொளிர்வேலான்
கொண்டாடுநாமங்குவலயத்திற்கூர்ந்ததினே. (கசா)

நாடோறுமெம்பெருமான்சன்னிதியினற்றொழும்பர்
வாடாவரவுசெலவின்வகையெல்லா
மேடாத்தாம்வரையாவெல்லோருங்கண்டுவப்பப்
பாடாரும்பத்தியுடன்வாசிக்கப்பண்ணினனும். (கஎ)

நித்தம்பெருமாணிலயத்தாராதனையும்
புத்தம்புதுசுவைநிவேதனமும்போற்றியபி
னத்திவ்வியபிரசாதங்களைநீராடியெழிற்
சுத்தம்புனைந்துதொழுதுண்டுசுகித்தனனும். (கஅ)

வேறு.

எங்கும்பலமுத்திரையிட்டபணம்
பொங்கும்படிகண்டுபொருந்துவதன்
றெங்கண்ணரசிங்கனெழிற்பொறியே
தங்கும்பணந்தாரணியிற்செலவே. (ககூ)

செய்வித்தனனன்னதுசெம்பொனினான்
மெய்வித்தகமேவியருச்சனைசெய்
துய்வித்திடுகென்பவருய்வணமே
தெய்வத்திறலோடுதிகழ்ந்திடுமால். (உ0)

அரங்கம்மெனுமங்நகருக்கெதிரா
யிரங்கும்புனலின்னதியின்வடபா
னெருங்கும்மனேநேர்மையினேங்கவள
மரும்பக்கிரகாரமொன்ருக்கியதின். (உக)

முன்னூன்முதன்முக்கியநூலெவையும்
பன்னும்பலபார்ப்பனர்தங்களேயே
மன்னும்வகைவைத்தவர்கட்கடைவே
செந்நெல்விளேசெய்பலவிட்டனனும். (உஉ)

புரையில்லதுபொற்புறுகண்டிரவ
புரமென்றுபுகன்றிடுவாரெவரும்
வரையின்மகம்வைகலுமாற்றுமறை
யரவம்பகலல்லுமருதவனே. (உ௩)

வேறு.

நஞ்சனங்கூடுநதிபுனேசடையான்
 படித்தரநடப்பதற்கென்று
மெஞ்சலின்றெழுகுங்கௌண்டினிநதியி
 லிருஞ்சிறையிழைத்ததின்புனலே
செஞ்செவேலென்றுநிரம்பியெக்காலுஞ்
 சிறுகுருவேரியொன்றியற்றி
யஞ்செறிநரசாம்போதியென்றெருபே
 ரறைதரப்பணித்தனனதற்கே. (உ௪)

பொருதிரைக்கடலேப்பொருவுமத்தடத்தின்
 புனன்மிகப்பாய்தரும்புலன்கள்
வரிகளுமிலவாய்விளேந்திடுஞ்செந்நெல்
 வண்பழுக்காயருங்கதலி
பெருகுறுமிரதங்கன்னலங்தெங்கும்
 பேசுதற்கரியவின்னனவுஞ்
சொரிதரவவற்கேசுவணநற்றகட்டிற்
 சொலிப்புறுஞ்சாசனமிழைத்தான். (உ௫)

பானலங்கலந்தபனிமொழிச்சுவையும்
பானலங்கண்களும்படைத்த
நானவார்குழறன்போகினியொருத்தி
நவின்றசொற்கொடுநெனிமகிழா
வானவர்விழையும்வண்புனற்பொன்னி
யிரண்டினும்வழிச்செலும்பதிக
ரூனமொன்றின்றிப்படர்தரவென்று
முயர்சிலைப்பாலமொன்றியற்றி. (உசு)

தரங்கிணித்தென்பாற்றன்பவங்கழியத்
தண்கதிர்கௌதமன்சூழன்
மரங்களினடியினேற்றதின்முன்னஞ்
சந்திரவனமெனவறையும்
வரங்கிளர்தலத்தின்பாங்கரினெழுகும்
வண்புனற்சிறைப்படுத்ததனைத்
திரங்கிளரந்தவணைமிசைக்கொணர்ந்து
திருநகர்க்குட்செலவிடுத்தான். (உஎ)

அத்திருக்காலுக்கறைந்தனன்பேர்பங்
காருதொட்டியெனவதுசென்
றெத்தலம்பாயுமவைதரும்பலன்களி
யாவையுமரங்கனுக்கென்றே
வைத்தனனெழுதிநதிமிசைவாய்க்கால்
வழிதரும்புதுமையொன்றிதுவு
மித்தலத்தின்றுமிலகுவதெவருங்
காணுவர்பூணுவர்களிப்பே. (உஅ)

வேறு.

அரங்கநாதனிலயமதாதியாய்
விளங்குகோயில்களியாவையும்விம்மிதம்
பொருந்துமாறுபுதுக்கினன்பொன்னுல
கிருந்தவாறிவையென்றுலகாடவே. (உகூ)

பட்டணத்திற்பலம்படுகோட்டையு
மட்டறுந்திருமன்னுமைசூரது
மொட்டியொன்னலருறுசெயாவகை
வட்டமால்வரையென்னவளைத்தனன். (௩௦)

இந்திரன்னெழின்மாளிகையேய்ந்திடு
மந்திரந்தனினுடொறுமாடுறு
மெந்தவேலையுமேர்பெறவாகுமா
றிந்தமன்னனினேவருஞ்செய்திலர். (௩௧)

பொன்னிறைந்துபொலியுமறைகளு
மின்னுமொன்பதிரத்தினம்வேறறத்
துன்னிராசிதுலங்குமறைகளும்
பன்னரும்பணிப்பேழையறைகளும். (௩௨)

வேறுவேறுவிளங்குறவேயமைத்
தேறனனதற்கேய்ந்திடுந்தூயனை
யூறுறுவகைகாப்பவுஞற்றியோர்
மாறுறுவுளம்பொங்கிமகிழ்ந்தனன். (௩௩)

ஒக்கயாவையுநோக்குவதொண்புவி
தக்கவாழ்வுறத்தாங்குந்தரணிபர்
பக்கமென்றுபகருநெறிப்படி
யிக்கண்டீரவனெய்துமுளத்தனய். (௩௪)

இலங்கைவென்றவற்கேய்ந்திடுந்தாரக
வலங்கொளுமத்தறைவரும்வைபவம்
விலங்கலின்மகட்கன்றுவிளம்பிய
வலங்குழுக்கணனுதியந்தேவனா. (௩௫)

பூசைநன்குபுரிதரநிற்பினு
மாசறும்பரமபதமாயவன்
றுசரேமணப்பாமெனத்தானுணர்ந்
தாசறுந்திருவைணவனுயினன். (௩௬)

அந்தமாம்னுளத்திற்கமைந்தவே
யெந்தநாளுமேகாதசிநோன்பெனப்
பந்தமாயும்பனுவல்பகர்வதைச்
சிந்தையாரத்தெளிந்தனன்சீர்மையான். (௩௭)

உருக்குமாங்கதனென்னவவ்வுத்தமப்
பெருக்கமார்விரதம்புவிபெட்புட
னிருக்கமுன்னமெழுந்ததற்காதியா
மருக்கமழ்தொடைமன்னனுமேற்கொளா. (௩௮)

அன்றருந்தலுமம்புபருகலு
மின்றிராவணையெய்ந்துதுயிறலு
நன்றுணர்ந்தநலமுறும்வைணவர்
மன்றலந்துளவத்திருமாயவன். (௩௯)

சொல்லருங்குணம்பாடிடச்சோதிநூல்
வல்லபத்துடன்கேட்டுளம்வைகியே
யெல்லியம்பொழுதேகலும்வைகறை
புல்லவென்றுபுகுதருமுன்னமே. (௪0)

ஆறுமன்னுசுவையடிசிற்களு
மூறுதேன்சுவையுள்ளபழங்களு
நாறுகுல்லைமுடித்திருநாரணற்
கேறுமாறுநிவேதனமிட்டபின். (௪௧)

நானமாடிநகுவெண்மண்பன்னிரண்
டானவங்கத்தணிந்தம்பரீடனை
மானநீமமணந்தகந்தூயனு
யானமாமறைக்காற்றினன்யாவையும். (௪௨)

எட்டிணைந்தவீரைந்நூறுவைணவர்க்
கிட்டருத்தியிதயங்களிப்புடன்
றெட்டருந்துவன்றேமிற்றுவாதசி
விட்டிடாமலொவ்வொன்றினிவ்விதமே. (௪௩)

இன்னவாறிவனின்புகழ்பாடுவோர்
கன்னவிற்றிரடோளுடைக்காளையே
யொன்னலர்க்கரியேறென்றுரைபெறுங்
கொன்னவிற்படைகூடியகையனே. (௪௪)

கலியுகத்திற்கனம்பெறும்வீமனே
வலியமல்லரைவாட்டும்வலவனே
மெலியதாருவணைமிசைமேவுறிற்
புலியதாயதுபொன்றிடும்பூட்கையாய். (௪௫)

கல்லினுயவணைதனிற்கண்வளர்
வில்லினுமெனவீறுபடித்திடச்
சொல்லினீறடையாதசுகந்தனைப்
புல்லினுன்புவிகாத்தனன்போந்தனன். (௪௬)

வேறு.

அம்புவியைபின்னணநன்களித்தொழுகுங்காலவனை
யடையாரொன்றுங்
கம்பலைசெய்வலியிலராயொதுங்கிடினுமிறுதியினோர்
கடியநோய்வந்
திம்பருனையினிவிடுகேனெனநலியவிவனுமஃ
துணராவுள்ளத்
தெம்பெருமானெழிற்பதத்தையினிமணப்பதேகருமம
மென்றுதேறி. (௪௭)

குண்டலெனுமூதூரினுறைதருதன்றந்தையுடன்
கூடவந்த
திண்டிறலான்சிறுதந்தைபெற்றெடுத்தமகன்றேவ
ராசனென்பான்
மண்டலத்தையாள்வலியுமதிவலியுங்குணவலியு
மலிந்துநிற்பக்
கண்டவனையரசமரியாதையுடன்கடிதழைத்து
மகனுக்கொண்டான். (௪௮)

சாலிசகமாயிரத்தைந்நூற்றெண்பத்திரண்டிலவன்
றணையேமன்னற்
கேலுமரியாதனத்தேயிருத்திமணிமுடிசூட்டி
யெவருங்காண
நாலொடிரண்டிகல்களையும்புறப்பகையுநன்கடக்கி
நல்லோர்வாழ்த்தப்
பாலிரண்டினும்பொதுவாய்ப்பழுதறிந்துகடிந்ததனைப்
பனுவனோக்கி. (௪௯)

ஊனுறக்கமொருவினராயூரகன்றுபொருப்பினருகுழன்றுகானத்
தாணவமாதிகளடக்கியைம்புலனைச்சுட்டெரித்த
வடலார்தாமும்
வாணுதலார்கண்வலையிற்பட்டுழன்றுவருந்துவரே
னம்போல்வாரிக்
காணரியவின்பமெனும்படுகுழியினின்றுகரை
காண்பதென்னே. (௫0)

அவர்தவறின்மற்றுய்வரியாந்தவறிற்பிழைப்பதொரு
நாளுமாகா
துவரிநெடும்புவியின்பமொருகணமுமொருதலையன்
றென்றுதேறித்
துவரிதழின்பொதுவியரிற்றூரவைபிணைந்தவனடியே
துணையென்றுள்ளி
நவைசிறிதுநணுகாதுகாத்தியெனநவின்றுறுதி
நன்னூனுடி. (௫௧)

அருகாருமமைச்சர்முதலாயவருமுறவினரை
யழைத்துநீவிர்
முருகாருமிவ்வலங்கன்மொய்ம்பனதுமொழிப்படியே
நடமினென்னுக்
குருகாலென்மலரகத்திற்கொண்டமரர்முறைமுறையே
யெதிர்கொண்டாட
வொருகாலுமீள்வதிலாவும்பர்தொழும்பூவைவணு
னுலகமுற்றான். (௫௨)

சீர்திருத்தச் சருக்கம்

முற்றிற்று.

ஆக, செய்யுள்—௨௪௫.

ஐந்தாவது

சிக்குதேவராசவுடையார்

ஊர்பெற்ற சருக்கம்.

சிற்றின்பத்திற்கெத்தனையிந்தச்சிறுநாயேன்
பற்றுண்டிங்கேபண்ணினுமந்தப்பழியெல்லாம்
பெற்றுன்றொண்டென்றன்றுனதாளேபெரிதெண்ணுங்
கொற்றங்கோவிந்தாவடியேற்குக்கொடுத்தாள்வாய். (௧)

தொட்டதேவராயனெனுமத்தொடைவேலான்
பட்டங்கட்டிக்கொண்டனேவோரும்பரிவார
வட்டங்கொண்டதண்குடைநீழல்வளர்ந்தெங்கு
மிட்டஞ்செய்யவின்னலொன்றின்றியினிதாண்டான். (௨)

தன்முன்வையந்தாங்கியமன்னர்தமினின்னும்
பொன்மன்பூமிபோற்றுமரட்டர்களைவென்று
சென்மின்சென்மினென்றுதுரந்தச்செழித்தோங்கும்
பன்மின்னுடும்பல்குறவீட்டிப்பயனுண்டான். (௩)

பாலாராழிதன்னிலுதித்தபதுமத்தா
யேலாமின்னுமின்னெழின்மார்பன்றளியாதி
நூலார்கோயிலுள்ளனமுற்றுநுவலற்கிங்
கேலாவண்ணமுன்னினுமோங்கவிழைத்திட்டான். (௪)

பொன்னேவென்னேபொற்புறுமூர்களவையென்னே
மின்னேவாதேமின்னுமணிப்பூண்களுமென்னே
யன்னேனீட்டுமத்தனையுள்ளுமறப்பேறென்
றென்னேவென்னேபானதுணாக்கினெளிதாமே. (௫)

நேமம்வீயாநித்தியகன்மநிறைவேற்று
மோமம்வீயாமாமறைவாணர்க்குவந்தன்னோன்
சேமம்வீயாச்செந்நெல்வளருஞ்செழிப்பூர்க
டாமம்வீயாவத்தடந்தோளான்பலதந்தான். (௬)

கொண்டன்மானுங்கொங்களகப்பொற்குயகும்பத்
தண்டர்மானின்னங்கனேமாரின்பவன்போலெப்
பண்டிம்மாமைமண்டலமாண்டார்பயின்றுண்டார்
மண்டிண்மாமைமன்னவர்க்குற்றதிதுவன்றே. (எ)

பேணூரஞ்சும்பீடுறுமன்னன்பெரிதிவ்வா
றேணூரின்பமாறிரண்டோடொன்றினையாண்டு
நீணாகத்தாரென்னவருந்திநிகழ்போழ்தின்
வாணாளெண்ணுமாமயமொன்றின்வயமானன். (அ)

இச்சூர்தன்னின்றுருயிர்கவ்வாதிகவாதென்
றச்சூரன்கண்டப்பொழுதேதன்னருகாரு
மெய்ச்சூரன்றன்கான்முளைதம்மின்முனம்வந்தோன்
மெச்சூரெல்லாமேலுறுபண்பின்மிடலுள்ளான். (கூ)

சிக்குத்தேவராசவுடையானெனுஞ்சேயைக்
கக்குங்காந்திப்பன்மணியாழின்றவிசேற்றிப்
பக்கத்தெண்ணுஞ்சுற்றமுறையபலர்சூழ
வொக்கும்பூபர்க்கொண்முடிசூட்டியுணர்வூட்டி. (க௦)

ஆடும்மஞ்ஞையன்னவரம்பையவரின்ப
நீடும்வைகனேர்ந்தயிலப்பொன்னுலகேறப்
பாடுங்கிள்ளைப்பன்னியருந்தம்பதியோடுங்
கூடுங்கட்டையேறினர்கூடிப்படர்வுற்றார். (கக)

பின்னேமைந்தன்பெற்றவர்க்கேயுஞ்சடங்கெல்லா
மன்னேயத்தஞ்செல்லவிழைத்துமகிழ்வெங்கு
மென்னேயிந்தப்புண்ணியனாட்சியெனவோதி
நன்னேயத்தானன்குதுதிக்கப்புரவுற்றான். (கஉ)

வேறு.

அடற்குறைவிடமாமக்தவலகிடற்கரியசிலன்
மடைத்தலையுகளப்பாயும்பருவரான்மலிந்தநீர்நா
டடக்கினனயலார்தம்மைப்புரந்துபின்பெங்களூரைப்
படைத்ததுமுதலாமற்றப்பண்புமீங்குரைத்துமன்னே. (கங)

அற்றைநாளமரரூரினுன்றசத்தாராவென்னும்
பொற்றவெம்புரியின்மற்றப்போற்றலரழுங்கும்வண்ணங்
கொற்றவன்டில்லிகாறுங்கோறனிசெலுத்திப்போந்தான்
மற்றடந்திணிதோட்சம்பாசியெனுமறத்தின்மிக்கான். (௧௪)

அத்தினுபுரியென்றருமறைதருமவ்வூராள்வோன்
சித்திரச்செயன்மிலேச்சபதியிவன்செருக்கைநாடி
யித்திறத்தவனைவேறலரிதெனவிகலினென்று
வுத்தியினுணர்ந்துகொக்கினொடுங்கினனிருந்துசின்னாள். (௧௫)

பயம்படும்பருவம்வாய்க்கப்பருவரலணுகாதோர்நாள்
வயம்படுமவனைப்பற்றிவலிந்துதன்னரணக்கேகக்
கயம்படுவலத்தவந்தக்காவலனனுசன்காணு
நயம்படுநகரைநீத்துப்படர்வதேநலமென்றோரா. (௧௬)

ஈட்டியபொருளுஞ்சேனையீட்டமுந்திரட்டிக்கொண்டு
வீட்டுமோதுருக்கனம்மையென்றுளம்வெருவியேகித்
தீட்டருஞ்சிறப்பிற்பெங்களூர்செறிந்ததனையாளும்
வாட்டிறல்வயவனுமோரரட்டனையமரில்வாட்டி. (௧௭)

அவனுமக்கோலுந்தன்கீழடங்குறவயங்கொண்டெந்தப்
புவனமுமமரரென்னப்போகமேதுய்க்கற்பால
துவகையினொளிரும்பெங்களூரெனவுரைக்குமந்தத்
தவழ்தருநவிராரூரைத்தாங்கினன்றருக்கினம்மா. (௧௮)

நாமவேற்சிவாசியென்னுநாமமாரவன்பின்முத்துத்
தாமனேர்நரசராசன்றுங்கிமேலரங்கந்தன்னை
யேமனும்பணிப்பநின்றவெறுழ்வலியுணர்ந்துள்ளூட்கி
நாமிவனுறைதன்மற்றுநலமன்றென்றுணர்ந்துநைந்தான். (௧௯)

நைந்தவனுறையவிங்கேநவில்குதுநிகழ்ந்ததொன்று
பைந்தருவடர்ந்தநாடும்வெள்குறும்பகடுவாய்ந்த
சந்தனத்துணியும்பொன்னுந்தடவயல்சிதறப்பாயுஞ்
சுந்தரநதியின்றீரஞ்சொலிப்புறந்தஞ்சைதன்னில். (௨௰)

பேணலாரணுகலின்றிப்பிறங்குவன்பரணஞ்சார்ந்து
மாணிலாம்படியைப்போற்றிமாரனுமருளற்கொத்த
வாணிலாமுறுவலாரின்வாய்ப்பருங்கலவித்தேனு
மேணிலாம்வகையேமாந்தியின்பமோரிறைவன்றுய்த்தான். (உக)

றுய்த்தவனுறையும்போழ்தோர்துளபமாலடியைப்போற்று
மெய்த்திருவைணவன்றன்மிழற்றியவுபதேசத்தாற்
செய்த்தலைச்செந்நெலென்றுஞ்செழிக்குநாடளித்தலாற்று
னெய்த்தலைக்கமழும்வேலைநிலத்தலையெறிந்துமற்றும். (உஉ)

உலம்பொருபுயத்திற்சங்குசக்கரப்பொறியையொற்றி
வலம்படுபன்னிரண்டுமெட்குறிவயங்குமங்கத்
திலங்குமம்புயப்பொகுட்டினியைந்தமாமணியினாரந்
துலங்கவந்துளவத்தாருமாலையிற்றுதைந்துபூண்டு. (உங)

நாடொறுநளினைநாய்கனவிலுதற்கரியவாய
பீடுறுங்கதைகடம்மையாரியபுருடர்பேசக்
கூடியகரணத்தோடஞ்செவியுறக்குளிர்ந்தேயுள்ள
மேடுறும்பரமபாகவதர்களையிரந்துபோற்றி, (உச)

அவரருள்பாததீர்த்தமருந்துபுதிருந்துமுள்ளத்
தெவர்களுமிவனேவீரவைணவனென்றுபேசத்
தவமெனத்துணிந்துதேவதாந்தரபசனம்விள்ளாப்
புவனமுண்டுமிழ்ந்தோன்றனைபோற்றினன்போந்தானன்றே. ()

இன்னணமளிக்குஞ்செய்கையிகந்தவனிருந்ததன்மை
சொன்னமுற்சிவாசியென்பான்சூழ்ச்சியினுணர்ந்துதேறி
மன்னியசிறப்பிற்பெங்களூரினைமதுகையாள்கென்
றெண்ணுறுதொழிலனுமோரிகல்வலான்றனக்குச்செப்பி. (உசு)

பொங்கியகடலேமானும்பொருபடையுடனேபோகித்
தங்கியவளத்ததஞ்சாவூரினைத்துனைவினண்ணித்
துங்கமாமரணைச்சூழ்ந்துதொலைவறுவலத்திற்றுக்க
மங்கியமனத்தினந்தமன்னவனெதிர்க்கலாற்றன். (உஎ)

தண்டினர்க்கறுதியிட்டவேதனந்தருதலின்றி
யன்றணவகன்றிருந்தவநாதரத்தவர்களெல்லாம்
விண்டனர்கரந்தவாற்றால்விசயராகவநாய்கன்றான்
கொண்டவந்நாமங்கொன்னேதனக்குறக்குலைந்துபோனான். (உஅ)

வேறு.

விண்டுபூந்தாள்களைவிழைந்ததின்பயனிதென்
றெண்டராதியம்புவாருணர்வறும்பேதையார்
மண்டலத்தவரவர்மரபுறுந்தொழில்களை
விண்டகன்றிடினகம்வெம்புவார்திண்ணமே. (உகூ)

நாயகன்போயதுந்நண்ணலன்றஞ்சையை
யேயவெங்கோல்வயஞ்செய்திருந்திகலுடன்
றேயமெங்கணுமவன்றிகிரியேதிகழ்தரச்
சீயமிங்கிவனெனச்செய்தரசோங்கினான். (௩0)

அவனெடும்பகலளித்தண்டரூர்புகுதர
நவமணிப்பொன்முடிநனிபுனைந்தவன்மக
னுவகையிற்புரவுபூண்டொழுகினானமமு
மெவரும்வெங்கோசியென்றியம்புவாரென்பவே. (௩க)

நண்ணலாரூன்சுவைத்தொளிருமாநாமவே
லண்ணலாரவன்மகன்சாசியென்றறைகுவார்
மண்ணெலாம்புகழ்செலமகனுமீன்றவனுநா
டுண்ணலாம்படிசுகமுய்த்துணர்ந்தாண்டனர். (௩உ)

எஞ்சறும்பல்வளமியைந்தபொன்னகரினத்
தஞ்சையிற்றமனியத்தவிசிருந்தன்னவன்
கொஞ்சுபைங்கிளிநிகர்குவிமுலைக்கோதையா
ரஞ்செறிந்தொளிர்கரத்தசைக்கவெண்கவரியால். (௩௩)

செந்தமிழ்ப்புலவர்கள்செறியுமொன்பதிரதப்
பந்தமிக்கொழுகுதேன்கவிகளும்பாடவே
சுந்தரக்கொலுநடத்துகையிலோர்பகலொரு
மந்திரத்தலைவனோர்மாற்றமங்குரைசெய்வான். (௩௪)

பூவைபோன்மேனியின்பொலியுநாகணைமிசை
மேவியின்கண்வளர்மேலரங்கந்தனைக்
காவல்செய்காவலன்கழறருந்திறலினுக்
கேவருமிணையுறூரிங்ஙனிப்புடவியில். (ஙடு)

ஏதிலார்கண்டுமேயிதயமுட்கும்பல
வேதிவாய்தானையவ்வேந்தலின்ஞணையிற்
போதராமதுரையைத்திரிசிரன்புரமுடன்
காதியேகிழவரைத்தன்வயங்கண்டதால். (ஙசு)

அத்தகைக்கோலெலாமவனகப்படுத்தபின்
பித்தகைக்கோலவற்கென்னவேவார்மசகமே
யெத்தகைக்கோலருமிருங்களிப்போடுதா
ளற்றசைந்துறுவரேலழிவதுந்திண்ணமே. (ஙஎ)

நாளுமுண்முதமருநகுமறைக்கிழவனும்
மூளுமுண்முதமுடன்மயலுறும்மகிபனுங்
கோளுறுஞ்சுகமுமோர்நாளினுங்கொள்கிலார்
மீளியேகேளெனுமிழற்றினுனீங்கரோ. (ஙஅ)

வேறு.

மந்திரியிவையோதமன்னவன்செவிகொண்டான்
சிந்தையுமயர்வுற்றேசெப்பியதிதமென்றே
யந்தமைச்சூராள்வோனகமினிநண்பேயா
மெந்தவிதத்தேனுமிழைப்பதேயினிதென்றே. (ஙகூ)

உட்டுணிவுடனெய்தாவொருமொழிவலத்தோனை
விட்டனன்சிலசெப்பிவெய்தினினவனேகிப்
பட்டணமிடைந்தந்தப்பார்த்திபனருகெய்திக்
கட்டழகுறுகாளாய்கழறுவதிதுகேளாய். (சo)

பூத்தொளிர்தடித்தோடும்புயன்மிசைபொளிர்மாபோற்
றாத்துவரிதழ்மின்னார்துவன்றினர்மிசையாடுங்
கோத்திரகிரியென்னக்குலவுயர்முடிமாடத்
தேத்துறுநகர்தஞ்சைக்கிறைவனிங்கெனைவிட்டான். (சக)

அப்புரவலனின்னேரன்பொழுகுறுநட்பை
யிப்படியிடையெய்தவெண்ணினனினியேனு
மொப்பறுமுரமுள்ளாயொத்ததன்குறியாகச்
செப்புவதிழைக்கிற்பதொன்றதுசெவிகேளாய். (சஉ)

எங்களூரெனவுள்ளாவின்புறவினிதாளும்
பெங்களூர்தனைமுன்னம்பெலமுளவடுகெம்ப
னெங்கணுமிதனீடின்றென்னவுமிழைதந்த
மங்களகரவரணோடேன்றினிமகிழ்கொள்வாய். (சங)

இத்திருநகர்நாடுன்னிணையறுமிசைநாட்டிற்
கொத்துளதருகானேயுனதெழிலொருகோற்கீழ்
வைத்தனையினிதாள்வேவலமுளவகையன்றோ
தொத்துறுமளிபாடுந்தொடைவளாவறுதோளாய். (சச)

நாடிதுவரலாலேயெமதொருநரபாலற்
காடுறுமிரணம்பொன்னாயிரமறுநூறுண்
டோடியபகைமன்னாவுதவினையதுகொள்வாய்
பீடுறுமின்புகழாயென்றிதுபேசினனால். (சரு)

கேட்டதுமுடிமன்னன்கேட்டதையுடனல்கி
யிட்டருமதையன்றேயென்றுதன்கவிகைக்கீழ்க்
கூட்டினனுளம்பொங்கிக்குனிசிலைவளைமார்ப
னாட்டியதிருவுள்ளார்க்கேவருநனிசெல்வம். (சசு)

வேறு.

ஆறிலக்கமாயபொன்னளித்தடைந்தவரண்டனை
நாறலர்த்தொடைப்புயத்தனற்கரப்படுத்துமுன்
வீறடர்ந்தபெனகொண்டைக்குவேந்தனோர்துருக்கன்மண்
மாறெழுந்ததானைசூழமற்றெழுந்துபற்றினான். (சஎ)

பற்றுமுன்னரொற்றர்வந்துபணிவுடன்பணித்தலுங்
கொற்றமுந்துகொற்றவன்குலுங்கவேநகைத்துநா
மற்றுஞாளிபோடுசீயமாறடர்க்குமாறிவன்
மூற்றுலங்கிமுரணியற்றலெற்றெனாமொழிந்துடன். (சஅ)

பேரெனிற்பொருப்பெனத்தடித்துவீறுபுயமுளா
ஞரகன்றுநடுநிலைக்கணண்ணருங்குணமுளான்
வீரியந்ததும்பிமின்னுவீரனுயவொருவனை
மாரியன்னகையினுன்மனங்கொதித்துநோக்கினுன். (சகூ)

நோக்குமுன்னரவன்படைத்தலைவர்கட்குநுவலலு
மாக்குமாயவிஞ்சையென்னவவனியெங்கும்பரவிய
தாக்குமாடருனையோடுதானெழுந்துதுருக்கனின்
வீக்கமாயதளத்தின்மீதுவீழ்ந்துவெய்துடற்றினுன். (ரு0)

கருமுகத்தவிருகவெள்ளங்கலக்கவெம்பிமாய்தரும்
வெருவலுற்றுமானினங்களென்னவேண்டலன்படை
பொருதலற்றுடைந்துபோகப்புலம்பியுள்ளமற்றவ
ணிரிதலுற்றுடன்கரந்துபோகியூரையெய்தினுன். (ருக)

உருளையொன்றிஞேடுதேரவன்முஞேடுமிருளென
மருவலன்படைக்கணத்தின்மற்றழிந்துபோதலு
நிருபனுடுபெங்களூரைநேர்பெறப்பெருக்கியோர்
கருதலர்க்குங்கருதொணுதகாவலிட்டளித்தனன். (ருஉ)

பரவையிற்பரக்கமன்னுடபட்டணம்பரப்பிஞ
ணிரவைநூறுமணியிழைத்தவெயில்களின்னுமாக்கினுன்
குரவையாயமாதரோடுகோத்தவன்குலவுறும்
விரிவையாருபொன்மயத்தகோயில்பல்லவிளக்கினுன். (ருங)

ஆழிமால்வரைக்கணைந்துசூழுமாழியாமெனும்
பாழியாழ்கிடங்கெயிற்புறம்புபற்றவாக்கிஞ
னேழுமாவிணைந்ததேர்நுழைந்துபோகவோங்குமேல்
வாழுவோர்பொன்முடிகள்காணும்வாயிலும்வனைந்தனன். (ருச)

புருவவில்லியாருலாவுபொருவில்கந்தவாரமும்
மருவவந்தமாதரன்பின்மாகமோங்குமாடமும்
பருவமங்கையார்களாடல்பாடல்செய்யரங்குமப்
பொருவிதந்தவரணுமெங்கும்பொன்னினிற்புரிந்தனன். (ருரு)

வேறுவேறுவினையிழைக்கவேண்டுபுந்திநுட்பமும்
மாறுவந்தடர்த்தகாலைமாற்றமிக்கவூக்கமுங்
கூறுசெய்யினுந்தவாதகுணமுமுள்ளவினைஞனைத்
தேறிவைத்துவேதனந்தெரிந்துமிக்களித்தனன். (௫௬)

மண்ணளிக்குமன்னனுக்கடர்ந்தசேனைமாட்சியு
முன்னுறக்கிடந்தவற்றைமுன்னியாடமைச்சனுந்
தன்னிரண்டுவாகுவென்றுதானுணர்ந்துதரணிபன்
பின்னுமன்னுதானையைப்பெருக்குமாறுணர்ந்தரோ. (௫எ)

கவுளலைத்திழிந்துபாயுங்கடிமதத்தகளிறுக
ணவநவம்படப்படைத்தநாலொன்பதினாயிர
நுவலுநூலிலக்கணத்தநோன்மையார்புரவிகள்
குவையுறத்தொகுத்துவைத்தகூறினேரிலக்கமாம். (௫அ)

வெஞ்சினத்தெரிந்துகண்விழித்துநோக்கும்வேலையே
யஞ்சியுட்குலைந்துபேணலாரழுங்குமாற்றல்சால்
வஞ்சினத்தவயவர்மூன்றிலக்கமன்னவீட்டியே
யெஞ்சலற்றதோற்றமோடிலங்குமாறியற்றினன். (௫௯)

தானையின்னவாறவன்றமைக்குமாறமைத்துமற்
றேனைநாகரீகமியாவுமெங்குமின்றென்றேவரு
மானசைக்குளாயடைந்துமன்னவப்புரந்தனைச்
சோனைமாரிசோர்வுறுதநாடனுந்துலக்கினன். (௬0)

வேறு.

நாறியோசனைகமழ்தருநுவலருஞ்சந்தம்
வீறுமாவனவனாசெறிவிழுப்பொழிற்கிறைவ
னறிலொன்றுகொண்டிவ்வணமளிக்கவோரமய
மாறடங்கினர்வழங்கிருந்திறைக்கணக்காய்ந்தான். (௬௧)

மட்டவிழ்ந்திழிமலர்த்தொடைத்தோள்வலிக்கிணங்கி
யிட்டுவந்தகப்பந்திரிசிரபுரத்திறையும்
வட்டவெண்குடைமதுரையின்மகிபனும்வழங்கா
தெட்டிரண்டுவெற்சரங்களாயிருந்ததையுணரா. (௬௨)

உள்ளெழுந்தவெஞ்சினத்தினனுருமெனக்கனன்று
தள்ளருந்திறற்றளபதிகுமாரனென்பவனைப்
பொள்ளெனப்படர்ந்தவர்தமைப்புடைத்தவருடை
யெள்ளருங்கரப்படுத்தனைமீளுகென்றிசைத்தான். (௬௩)

அந்தவாய்மையவ்வனிகினித்தலைவனள்ளுறலுஞ்
சிந்தமாற்றலர்செருக்கிருஞ்செருச்செயுஞ்சேனை
சந்தமாப்பொலிவுடனளவிடற்கருந்தகவி
னிந்தமாநிலநெளிதரப்புடைவரவெழுந்தான். (௬௪)

ஆடலோடெழுங்குரகதமளவிடற்கெளிதோ
தேடருங்கரமலைகளின்றிறன்சொலற்பாற்றோ
கூடலாருளங்குலைதரும்பதாதியின்பகடு
நாடலாவதோநவிறரலாவதோநமக்கே. (௬௫)

பம்பைசல்லரிகுணில்பொருபருமுரசுடுக்கை
கொம்புதண்ணுமைகுடமுழாமுதலனவியம்ப
வும்பர்நாடருஞ்செவிடுறவுலம்பொருதோளா
னம்புராசிநேரனிகினியொடுநடந்தன்றே. (௬௬)

பாயுமாமதப்பகட்டுவெண்மருப்பொளிர்கனக
மேயசந்தகிற்றுணியெனுமுழுப்பைகளென்று
தோயராசியாங்கணவனைத்தொடருகாவிரியின்
வாயிலங்குமத்திரிசிரபுரத்தரண்வளைந்தான். (௬௭)

சித்துதேவராசவுடையார்

ஊர்பெற்ற சருக்கம்

முற்றிற்று.

ஆக, செய்யுள் - ௯௧௦.

ஆ ஸ்ரீ வது

சிக்குதேவராசவுடையார்

மராடரைவென்ற சருக்கம்.

அங்கவன்வளைத்தடங்கலாருடனமருடற்றப்
பொங்குமுத்தரமராட்டிரப்புரவலன்பொருவிற்
சிங்கவேறனன்சேனைமன்னன்செயனென்பான்
பொங்குதானையிற்போந்தனன்மகிசூரபுரிக்கே. (௧)

ஆறஞ்சாயிரமடல்செறிபுரவிவெம்படையும்
வீறெஞ்சாதநூறாயிரம்வெம்பதாதியுமற்
றாறஞ்சாதமும்மதமொழுகொருத்தலின்குழுவுங்
கோறுஞ்சார்பிலார்தமையெனக்கொடுபுறப்பட்டான். (௨)

திருவரங்கபட்டணந்தனைத்திருகுவேமென்னு
மருவலார்வருமறந்தனைச்செவியுறுமன்னன்
கருகமீசையுங்கடுஞ்சினக்கனலினனுயிரா
வருகிலுள்ளவோரொற்றனையரியெனநோக்கி. (௩)

அம்பெனப்பறந்தங்குசில்படையொடுங்குமரன்
கம்பமுற்றிடக்கருதலார்பொரவவன்மதலை
வெம்புமற்றபல்படையொடும்விரைந்திவண்வருகென்
றெம்பெரும்பயத்தானையையிசைக்கென்விசைத்தான். (௪)

இந்தவாசகங்கேட்டவன்கதுமெனவெழுந்து
பிந்தவெம்புகைச்சகடமும்பெருவிசையொடுபோந்
தந்தமார்திரிசிரபுரமணுகியங்கவற்கண்
டிந்துமாமரபினனதவ்வாணையையிசைத்தான். (௫)

ஆணையன்னதையறிந்ததுமனிகினித்தலைவன்
வாணயந்தொளிர்வலக்கரப்புதல்வனைவயமார்
கோணைவெம்பலபொருபடைகொடுத்துடன்போகி
யேனைவெய்துசென்றியம்புபுவிடுத்தனனிகலான். (௬)

வேறு.

பெரியனென்றிசைக்குமந்தப்பெருந்திறல்வயவன்பேசற்
கரியவெம்படைகள்சூழவகன்றுகீழலங்குநாட்டைக்
கரிகளும்பரிகடாமுங்கணக்கிடற்கரியகானக்
கிரிகளேபொதுளுமேனுடைடைந்தனன்கிளர்ந்துமன்னோ. (எ)

அடைந்தவனரங்கந்தன்னையரசனதவைக்கணெய்தக்
கடைந்தமாவயிரத்தூணேர்கவின்பெறுபுயத்தகாளை
யுடைந்திடாவூக்கத்தந்தவொண்படைக்கிறைவன்காதின்
மிடைந்தவரறியாவண்ணமொருமறைமிழற்றிவிட்டான். (அ)

அகவலிபுறத்துவன்மையதிகரித்திடுமவ்வீரன்
பகலவன்பட்டபின்னர்ப்பார்த்திபன்பகர்ந்தவண்ண
நிகரறுமிடபமாருயிரங்கொணர்ந்தவற்றினீண்டு
நகுமிகுபெரியகொம்பினலமுறக்கிழியைச்சுற்றி. (கூ)

நறுநெய்யினனைத்துத்தீபநலிவுறுவகையேயேற்றிக்
குறுகலாரிறங்கியுள்ளகொத்தத்திவெளியையண்மி
யறிவருமிருளிமேலேற்றின்பண்ணையயவர்மீதேவி
யெறுழ்வலிப்படையினுங்கேகொக்கரித்திரைதல்செய்தான். (கo)

நள்ளிருட்பொழுதினுன்கியோசனையகலந்தத்தம்
வெள்ளையம்படமாடத்துள்விழிப்புலனொடுங்கத்துஞ்சு
மெள்ளரும்பகைவரண்டமுகடுடையிசையினுலே
பொள்ளெனவிழித்தெழுந்துபுற்கெனும்விழிபிற்கண்டார். (கக)

கண்டனர்சுடருமொண்டீக்கடவுளேபடிவம்பல்ல
கொண்டெழுந்தனன்கொலென்னக்குலவுதீபிகைகடம்மை
யொண்டலருருத்தெழுந்தாரென்றுமற்றுணர்ந்தேயொன்றுந்
திண்டிறலிதயந்தேற்றார்திக்கெனவுடற்றப்பாய்ந்தார். (கஉ)

போரினுக்குரியகோலம்பூண்கிலாருடையுந்தாங்கார்
கூரினக்கலங்கும்பல்லகொலைபடைக்கலமுங்கொள்ளார்
பேரிகைக்கணமுழுட்கத்தெழித்திடுதிறமும்பேணர்
காரினக்குறழும்வேகக்கறையடிகளையுமேரூர். (கங)

கொய்யுளைக்கலினப்பாய்மாக்குலங்கள்பண்ணுறுத்தலாற்றார்
வெய்யவெம்பகைவரோச்சும்வேலுடற்புகுதாவண்ண
மெய்யடற்கவசமேவார்மேவலரியல்புந்தேறார்
செய்வகையிதுவென்றோரார்சிக்கெனப்புறப்பட்டாரால். (கச)

அன்னவாறவர்கைப்பட்டவடுபடைக்கலங்கொண்டார்த்தங்
கின்னலாரலகையாட்டமெனப்பலபடியினோடப்
பன்னலாம்புகழார்சின்னதேவனின்படைஞரந்த
வொன்னலார்திரளிற்பாய்ந்தேயுடற்றினருருத்துமன்னோ. (கரு)

ஊக்கமேவலமென் றுன்னுவொளிரயிற்படைகொடோச்சித்
தாக்கவேவடபான்மன்னன்றானைவெஞ்சுழல்காலோங்கி
யேக்கறவுலகம்வீசவெழில்குலைந்தழிந்துபோய
காக்கருங்கதலிக்கானங்கடுத்தழிந்தொழிந்ததம்மா. (கசு)

அளவினிற்பெரியதேனுமடன்மலிமராடன்றானை
யுளவழிந்துடற்றுமைசூர்தானையானுலந்ததன்றே
வளமுறுமிறைவன்காலம்வாய்ப்புழியடர்க்கலொல்லுங்
குளறுவெங்கூகைதன்னைவாயசம்பகலேகொல்லும். (கஎ)

பட்டணத்திறைவன்சேனையதிபனிப்படியேயொன்னார்
பட்டுடைந்தொழியவாட்டிப்படையதற்கதிபராய
மட்டறுந்திறனிம்பாசிசயாசியென்மறவர்தம்மை
யட்டவர்சிரமுங்கொண்டானூர்ப்பரித்தடலினம்மா. (கஅ)

மற்றவர்தளத்தினேற்றமன்னியபொருள்களுங்கைப்
பற்றுபுபடைத்தவெற்றிமுரசொலியுலகம்போர்ப்ப
வெற்றிசேர்விலோதனங்கள்விண்ணெலாமறைப்பப்போந்து
சுற்றிலும்புனிதப்பொன்னிசூழுமேலரங்கஞ்சார்ந்தான். (கக)

சார்ந்தவன்சதுரயூகஞ்சகமருளரவமோங்கப்
பேர்ந்தெழும்பெருமைகாணுப்பெருமிதத்துடனேயன்பர்
சூழ்ந்திடவரிசுமந்தவாதனந்துலங்கவுள்ள
கூர்ந்தனத்திறைவன்வீறுசூலவியவவைக்கணெய்தி. (உ0)

உலகெலாமுனைக்கலுற்றவுரத்தினப்பொருநர்தங்க
டலைகளைத்தரணிபாலன்றுளிலிட்டளத்தற்கொல்லா
விலையறுந்திரட்டிப்போந்தவிழுப்பொருட்குவையுஞ்சேர்த்தி
நலமுறநடந்தயாவுநவின்றனன்வணங்கிமுன்னம். (உக)

கண்டதுநரனும்பொன்னங்கழலவன்கனையைப்போழ்ந்து
கொண்டெழுபரவையென்னவகத்தினுட்கொள்ளாதாகி
மண்டியவுவகைமீறமலர்முகத்தினனுயந்தத்
தண்டினுக்கிறைவன்றன்னைத்தக்கவின்முகமன்கூறி. (உஉ)

அவன்முதற்படைஞர்க்கெல்லாமவரவர்க்கியன்றவண்ண
முவகையிற்சாலுஞ்சாலுமென்றவருனைக்குமாற்று
னவிர்மணிப்பணிகளாதியளித்தனனருளிற்போக்கித்
தவலருமறத்தினந்தத்தானைமன்னவனைநோக்கி. (உங)

தலைகளிவ்விரண்டிலொன்றித்தண்புனலரங்கஞ்சூழ
மலைநிகர்மதிளின்வாயிலொன்றுமற்றென்றுமைசூ
ரிலகுபேரெயிலின்வாயிலிடத்தினும்பிணித்தியென்று
நலமுறநவின்றேயின்பநண்ணிவீற்றிருந்தானன்றே. (உச)

ஆங்குமாமராடமன்னனனீகினிதனிலழிந்து
நீங்கியார்நீங்கவென்னிட்டிரிந்துயிர்பிழைத்தசில்லோ
ரோங்கியதமதுவேந்தற்குனைத்ததுபுலம்பவன்றான்
றுங்கருந்துயரினெஞ்சம்புண்படத்தவிக்கலானான். (உரு)

கூடலார்குருதிக்கோட்டுக்குஞ்சரநகனையானும்
பீடறுத்துருக்கவேந்தன்பெட்புடனிதனைக்கேளா
வீடுறுப்பெருமிதங்கொண்டிவ்விருதளத்துநாய்க
ராடலார்படையினம்மீதன்றுருத்தெழுந்தாரன்றே. (உசு)

மும்முறைநமதுதானைமுரண்டபவடர்த்தும்வெல்லுந்
திண்மையின்றகன்றுரேனுந்தெரிப்பருந்திறலாரன்னர்
தம்மிருதலையைத்தானையுடன்படத்தகர்த்துக்கொண்ட
செம்மைசேர்மைசூராளுஞ்செல்வனேசிறந்தானன்றே. (உஎ)

மருதிறவுரலினூர்ந்தமாயவன்குலத்தில்வந்த
நிருபனைமதனனிந்தநிகரறும்வலத்தினெங்கும்
பிரிவருமிவன்றனட்பேபெறலுறுமெமக்கென்றங்கு
மருவியதமர்க்குச்செப்பிமகிழ்ந்தனனவைக்கணமாதோ. (உஅ)

சிக்குதேவராசவுடையார்

மராடனைவென்ற சருக்கம்

முற்றிற்று.

ஆக, செய்யுள்-ருருஅ.

ஏழாவது

சிக்குதேவராசவுடையார்

அறம்புரி சருக்கம்.

வஞ்சனையின்வந்துமலர்வாயினிடைவைத்த
நஞ்சமுலையானலகைநண்ணுயிர்குடித்த
மஞ்சுறழுமாலடியைமன்னுமெழின்மன்ன
னஞ்செறியறம்புரிந்ததன்றினிதுரைப்பாம். (க)

அத்திருமணாளனெளிராலயமதொன்று
பத்தியினிழைத்திடவுளந்துணிவுபற்றி
நித்தமெழினீரறுதலின்றியொழுகிற்குங்
குற்றமறுகௌண்டிணிநதிக்கருகுகூடி. (உ)

மனக்கினியதாயழகுமன்னுமொரிடத்தி
னினைக்கவரிதாயவொருநீணிலயமென்றுந்
தனக்குவமையின்றியொளிர்தன்மையினிழைத்தா
னெனக்கதனிரும்பகடிசைக்கவெளிதாமோ. (௩)

என்றுமலையேயெயிலிருந்தலையிடத்தே
யொன்றியகல்வின்றியேயுறங்குமுகிலீட்டங்
குன்றுகுடைகொண்டுமுனங்கோதனமளித்தோ
னின்றதிருமேனியெழினேர்ந்திடநயந்தே. (௪)

நீளமணிவிட்டிடிஞெரோசனையைநேருங்
கோளமாகுன்றநிலைகொள்ளுமதனத்தம்
வாளமலையன்னமதில்வாயிலுளருக்க
ஞளுநுழையுஞ்சமயநாடிடுவனென்ப. (௫)

அப்பெரியதேனுமதனுட்புறமடர்ந்த
வொப்பரியகோதைமுதலோரொளிருகோயி
லெப்புறமுமுள்ளவதினெங்கும்வெளியின்றே
செப்பலுறுமோவெழுதுசித்திரவகைக்கே. (௬)

செஞ்சுடர்முதற்பலசெறிந்தசுடர்வீசு
மஞ்செறியுமொன்பதுமணித்திரள்களானும்
விஞ்சுபுடமிட்டொளிருவித்தமதனுனு
மஞ்சனவணற்குமுழுதாயததுவென்ப. (எ)

குண்டுலுவெனும்பெயர்குறித்தநகர்வாயப்
பண்டமயமாயநிலயத்துணரபாலன்
வண்டுணவலர்ந்துகமழ்வண்டுளபமாலைப்
பண்டைமறைபாடுபரவாசுதேவன்றன்னை. (அ)

செங்கமலவல்லியெனுஞ்சீர்பெருகுநாமந்
தங்குதிருமாதினையுந்தானிலகுவித்தே
யங்கவினுசீவனசமுத்திரமதாரும்
மங்களகரத்துபயநாய்ச்சிமார்கடமையும். (௯)

கொண்டிலகுவித்தபனரன்முதலகொம்மை
மண்டமரமன்னருமனத்தினுநினைத்தற்
கொண்டரியவொண்பதமுபாயமதினெய்தப்
பண்டருள்பயந்தகுருகைப்பரமனாதி. (௧0)

ஆரியரின்மூர்த்திகளுமங்கிலகுவித்தே
வேரியொழுகுங்கமலவேதனைநிகர்க்குஞ்
சீரியர்கள்சென்றுதினந்தீர்த்தமுதலேற்க
நேரியபுரோக்கணையுநேர்ந்துபொருளாற்றி. (௧௧)

பஞ்சபருவத்திருவிழாமுதலபண்பி
னஞ்சிரவினன்னெறியினாற்றுவதற்கென்றுங்
கஞ்சமலர்மீதெகினங்கண்வளருமூர்க
ளஞ்சலறுபல்வளமியைந்தனவிடுத்தான். (௧௨)

என்னவவையின்வசாமியம்பவெளிதாமோ
யன்னவயலின்வளருமைம்பதுமுழத்துக்
கன்னலுயர்ந்தோங்கியெழுவேய்நிாகடுக்கின்
மன்னவிளைமற்றவைவழங்குதலெதற்கே. (௧௩)

பத்தினுறழ்நூறிலுறழாயிரம்பொன்பத்தோ
டொத்தவிருதிங்கடொறுமோடிவருமதுவே
குத்தகையினிப்பணமேகூடிவருமாயி
னெத்தகையவாமவைகளெண்ணியுணர்வீரோ. (கச)

அச்சினகரத்தெதிரகன்றகுளமொன்று
வைச்சகைவழுக்குகல்வனைந்தபடியோடு
மெச்சிறுமையும்படியினைகழுததோய
நிச்சலுமறுதவகைநேர்பெறவனைந்தான். (கரு)

நாளமணநாறுகமலத்தவளுதித்த
நீளகலநேருகலசாம்புதிநிகர்த்த
வாளமருவும்பெடையின்வைகுமதனற்பே
ராளுகலியாணியெனவாளழகனிட்டான். (கசு)

வேறு.

மற்றுமத்தெரியன்மழவிடையனையான்
மகிழ்வுறவுயிர்த்திடுந்தந்தை
பற்றொழிந்தவணிப்பயில்வுறுஞ்சுகத்திற்
பரிந்துயிர்துறந்தபின்பவற்கு
மற்றவெப்பதமுமிணையுறுப்பதமா
மாதவனுயர்பரம்பதமே
பெற்றிடவதற்கோர்பேரறமிழைக்கப்
பேணினன்வாணிலாமணியான். (கஎ)

வரைபுரையிரதங்கடகடென்றோடு
மறுகெழிற்குண்டலுநகரி
னுரைசெயுமுன்னமுவணகேதனன்ற
னோங்கிருங்கோயிலுக்கெதிரி
னிரைநிரையெனவேநிலவந்தொளிர்மாட
நேர்பெறவிழைத்தவோர்சதமும்
விரைமலர்த்திருவின்கணவனைவிளம்பும்
வேதியர்க்குதகமோடளித்தான். (கஅ)

ஓரொருகுடும்பக்கைந்துடல்வருந்தா
துண்டுடுத்தணிந்துயர்வாழ்வார்
நீரருவளத்தவூர்களுமளித்தங்
நிகரிலாமனைசெறிந்ததற்குப்
பேருமேதேவராயனக்கிரகாரம்மெனப்
பேசிமற்றின்றுஞ்
சீருறுமுதலாஞ்சதகமாமென்றுஞ்
செப்பிறுனெப்பருந்திறலான். (கக)

பின்னரும்பெரியதந்தையப்பெருவீ
டடைதரப்பேணியங்நிலயங்
துன்னியவடபானூறுயரகமுந்
துவன்றிடத்துலக்குவித்தவற்றை
மன்னியமறையோர்க்குதவிமூன்னுாைத்த
வகைவளம்பெருகுமூருடனே
பன்னினனிரண்டாஞ்சதகமென்றதன்பேர்
பகைவருக்கசனியேறனையான். (உ0)

புகலருஞ்சீர்த்திப்புரவலன்மற்றப்
பொன்னெயிற்கோயிலின்றென்பா
லகலமார்மறுகோரக்கிராரஞ்செய்
தனைதயுநூறந்தணர்க்களித்து
நிகரறவிளையும்பாடிகளுடனே
நீரொடுநிகழ்த்தினனுமை
மூவகையின்மூன்றுஞ்சதகமென்றெவரு
முனைக்குமாறுலம்பொருபுயத்தான். (உக)

ஈங்கிவணியம்பற்கரியபேரறங்க
ளெனைப்பலவிழைத்தனனிருக்கக்
கோங்கிளமுலையார்குயிலெனப்பாடுந்
தஞ்சையிற்குறைவுறுதளிக்கும்
வீங்கியபுயவெங்கோசியின்புதல்வன்
விறன்மிகுஞ்சாசியென்மகிபன்
பாங்கினமைச்சராதியோர்சூழப்
பன்மணித்தவிசிருந்தொருகால். (உஉ)

புரந்திடுந்தொழிலைப்போற்றுழியெமது
பொன்கொழித்தொழுகிரும்பொன்னி
நிரந்தரம்பாயுநிகரிலாநாட்டி
னீண்மதிளேழுசூழரங்கம்
பரந்தவண்குடந்தைபல்வளஞ்சுரக்கும்
பகர்வருந்திருமணர்கோயில்
வரந்தரும்வராகன்வைகருந்திருமுட்
டினமுதற்பலதிருத்தலமும். (உந)

தில்லையின்மறைக்காடாதியாம்பிறைசேர்
செஞ்சடைப்பண்ணவனிடமுஞ்
சொல்லரும்பகட்டிற்பலபலதுதைந்து
சொலிப்பதிங்கெவர்களுந்தெரிவார்
கல்லடர்வரையுங்கானமுங்கழுமுங்
கன்னடத்தரசனுடைதனின்
மல்லலந்திருநாராயணபுரமொன்
றன்றியேமற்றுமொன்றுளதோ. (உச)

என்றவன வைக்கணிசைத்தலுமதனை
யீர்ம்பனிப்பொழிலினுக்கிறைவ
னென்றுவதியம்புமொற்றரானுணரா
வுள்ளகம்புழுங்கிமற்றுங்கே
நன்றுறுமிவ்வெள்வராககற்பத்தே
நவிறருவெள்வராகனையே
பொன்றரும்பூசைபுரிவதேநலமப்
புல்லியற்கெதிரெனத்துணிந்தான். (உரு)

அத்திருத்தஞ்சைக்கதிபனுட்செருக்கி
னடியவளமருடிருவார்
முட்டினத்திலகுமூர்த்தியைத்தானே
கொணர்குவலிவணெனமுன்னி
வித்தகத்தருகிலுறைதருஞ்சிலரை
விளித்ததுவிளம்புபுகரப்பி
னெத்திறத்தேனுங்கொணர்மினென்றியம்பி
யேவினன்பொருள்பலவருளி. (உசா)

வேறு.

சென்றாரவருமிறைவன்னுரைசெய்தவண்ணங்
குன்றாவளத்ததிருமுட்டினங்கூடியாங்கே
நன்றாரமையமணுகச்சிலநாள்களாய்ந்தே
நின்றார்நிமலன்பதமாமலர்நெஞ்சினெண்ணி. (௨௭)

ஓரேரிரவிலொளிர்பொன்னியைத்துளெம்மான்
சீரேயுமாராதனஞ்செய்தபின்பூசைசெய்வோர்
வாரேறுவாயிற்கதவங்களைவன்பின்மூடிக்
காரேயிருந்தாழ்கடினம்படவிட்டகன்றார். (௨௮)

முன்னேபெருமாண்முளரிக்கழற்சேவைசெய்வா
னன்னேயமன்னிநணுகுற்றனரென்னவூடே
சின்னேரநின்றுசிடுக்கென்றொருமூலைசேர்ந்தார்
மன்னேயிருண்டவிருளிற்பதுங்குற்றுமற்றும். (௨௯)

வகுற்றபின்பூசகருள்ளகத்திட்டபூட்டை
வாகைக்கரத்தங்குலியிற்றிறந்தூடுவந்து
பாகுற்றசொல்லின்பதுமத்தவனுதன்றன்னைக்
காகர்த்தவென்றுபரவிக்கழல்கண்டுகொண்டார், (௩0)

வஞ்சஞ்செறிந்தமனமொத்திருளெங்குமூடி
விஞ்சந்தவேளைவிரகிற்பெருமானையன்னார்
தஞ்செங்கரங்கொண்டகன்றார்மதிசான்றநீரார்
நெஞ்சம்விழைந்ததெதுதானுடனேர்கிலாதார். (௩௧)

பாராமையாரும்பரந்தாமனைக்கொண்டடைந்து
வாராருமாரவனமாமுலைமாதரின்ப
மேராயருந்துமெழிலாருமைசூரினேந்தல்
காரார்கனககடகம்புனைகையிற்றந்தார். (௩௨)

கொண்டந்தகோமான்குலவுந்திருக்கொண்கன்றன்னை
மண்டுங்கரியவறுமைக்குளநொந்துமாய்வோன்
பண்டம்பெருகும்பணக்குப்பைபடைத்ததென்ன
வெண்டங்கலின்றிபெருமுட்களிப்பெய்தியாங்கே. (௩௩)

எல்லாவளமுமியையுங்கடலேயுமீது
செல்லாடவோங்குமெழின்மாளிகைசேருமாரூர்
வில்லாருபொன்மாநிலயம்புரிவித்ததற்கு
ணல்லார்க்கருளத்திருமூர்த்தியைநாட்டினால், (௩௰௪)

நீலச்சுடரினிலவுந்திருமூலமூர்த்தி
கோலத்தமைத்தம்புயவல்லியென்றெங்குங்கூறு
மாலுற்றதாயார்தனையும்புரிவித்துமற்று
மேலுற்றவாழ்வார்முதலேவருமின்னவைத்தான். (௩௰௫)

பிரமச்சிறப்பேதலையாவையும்பேணியாற்றுத்
தரமற்றபொன்கள்வருடந்தொறுந்தாமேயெய்தத்
திரமுற்றதாயநிதியும்பலதேர்ந்துவைத்தா
னிருபர்க்குமென்னவரிதோநினைவொன்றுநேர்ந்தால். (௩௰௬)

தோகைக்கிணைசேர்துருக்கன்மகடோய்ந்தசெல்வ
னேகித்திகழுமெழில்யாதவசைலமாதி
யாகைக்கிருந்ததலமுள்ளனவற்றுளாரும்
வாகைக்கடவுணிலயங்களுமற்றிலங்க. (௩௰௭)

பொன்னும்மணியுங்கொடுநன்குபுதுக்குவித்து
மின்னும்பணிகடலையாவையுமிக்களித்துப்
பின்னும்வருவாய்களையும்பெருகப்பெருக்கிப்
பன்னுஞ்சிறப்பும்பலபண்ணுறப்பண்ணினால். (௩௰௮)

வேறு.

வாரணசிராமேசுரமேவளரும்
    பிரயாகைதுவரை
யேரார்கச்சிதென்னரங்கம்பிணையில்
    வேங்கடங்குடந்தை
சீரார்செகநாதந்தருப்பசயனஞ்
    சங்கமுகிமுதலாம்
பேரார்தலங்கடொறுநறுநெய்பெருகு
    நந்தாவிளக்கிடவும். (௩௰௯)

பொங்கற்புலியோரைதலையாம்புகலற்
கருபல்லோரைகளும்
வங்கக்கடல்வாய்வருமமுதும்வாரா
திவைநேரெனவெவருந்
தங்கப்பெரியகலங்களிலேதகவிற்
கடவுளமுதுசெயக்
கொங்கிற்கமழுநறுந்தொடையான்குறியா
நாளுங்கூர்ந்திழைத்தான். (௪0)

ஆடற்கரியவண்ணமெலாமங்கங்
கிவ்வாறுற்றுகினும்
பாடற்கரியபலவளமும்பயிலுந்
திருவேங்கடத்தாற்குத்
தேடற்கரியமணிமயமாத்திகழ்பொற்
றுகிலுமணிகலமு
நாடற்கரியபூசனைகணடத்தற்
குரியபொற்கலமும். (௪௧)

மதியின்கலையினிலவுமிழ்வெண்மணியின்
கவிகைமலர்கவரி
வதியும்வகைசெங்கதிரெறிக்கும்வகைசேர்
தபனீயத்தவிசு
மதிகம்படவின்னணம்பிறவுமவனன்
றளித்தவவையன்றே
சிதைவின்றின்றுந்திருப்பதியிற்றிகழுஞ்
சேமத்தெனுமுலகம். (௪௨)

நஞ்சம்புரையுங்கஞ்சன்முதனலியுந்
தநுசர்குலங்களைந்த
கஞ்சம்புரையுங்கண்ணழகன்கரமா
மலர்கொண்டருச்சித்த
வஞ்சங்கழலுமெதுவரைமேல்வாழுந்
திருநாராயணற்கு
நெஞ்சங்கருதும்வகைபலவுநேர்ந்தவ்
வணமேநிகழ்த்தியபின். (௪௩)

கரணத்தலையாங்கருத்ததினைகருதும்
மெனினும்பவங்கழலு
முறைபெற்றெருளிருங்கலியாணிமுதலாம்
புனிததீர்த்தமதிற்
கரிகட்கிறைவன்மோக்கமெனக்கழறும்
விழவேமுதலாய
திருவிற்பொலியுஞ்சிறப்புகளைத்திறம்பா
தாற்றுந்திறமுணரா. (சச)

மணிமாமண்டபம்விளிம்பின்மன்னுஞ்
சிலையும்பித்திகையு
மணிமாமுதலவடைதருசெந்தவமே
தனமாயாற்றுபவர்
மணிமாலுறையுஞ்சாலைகளுமகிழ
விழைத்துத்தன்பெயர்விண்
மணிமானவைகடொறும்பொறித்தான்மையன்
மதமாவெங்களிற்றுன். (சரு)

கலைமாமகளின்கணவனதுகரமார்
குண்டிகையினிழிந்த
வலைமாவிண்டுபதியகலாதமர்செஞ்
சடைநஞ்சனங்கூட்டின்
மலைமாமகளின்மகிழ்ந்துறையுமழுவெங்
கரத்துமுக்கணற்கு
மிலைமாறெங்குமெனுமிடலானிழைத்தா
னிணையிலறமென்ப. (சசா)

மீனூடாடும்வேலையுலகளிக்கும்
பாரமேவுமுனந்
தேனூடாடுந்தெரியன்முடிதிகழுஞ்
சிரத்தித்தினமென்று
கானூடாடுங்கஞ்சனிகர்கழறு
மறையோனெருவன்கலை
தானூடாடுந்திறலோனேதகவி
னுணர்ந்துவழங்கினனும். (சஎ)

அம்மா மறையோனறைந்ததினத்தலங்கள்
மௌலிபுனைந்ததினே
செம்மாந்துளமச்சினக்கதிர்வேல்செறியுங்
கரத்துச்சிலையுழவ
னிம்மாநீராரும்பழனத்தெழிலா
ரூரையேற்றிடுகென்
றம்மாவிளையுண்மும்முறையாமழகார்
பதியொன்றளித்தனனால். (௪௮)

தானக்களிற்றுத்தரணிபனின்றண்ணஞ்
சந்தத்தருபொதுளும்
வானக்குயரும்பொதியவரைமிசையே
வைகுந்தனதகல
மானப்பொழிலுள்வறிஞர்களாயலையு
மறையோர்நிலையுணராத்
தானத்தகவினனேவோர்க்குந்தருமா
னியங்கள்பலதந்தான். (௪௯)

கூனுங்குறளுந்தொழுநோயிற்றுறையுங்
கைகான்முடங்குருடு
மூனுந்தளர்ந்துதிரைந்துபடுங்கிழமு
மாகியுணவின்றி
யீனம்படநின்றினைவுறுமித்தகையோ
ரெல்லாமிடும்பையகன்
றூனந்தங்கொண்டுறவுணவேமுதல்
வளித்துப்புரந்தனனும். (௫0)

தன்னின்குடியிற்கொண்டுகொடுத்தென்றும்
வதுவைதகவினிழைத்
துண்ணும்படியருமையொருங்கேயொருமூன்
றிணைந்தபதின்மரெனப்
பண்ணும்பழுதின்றிவர்மரபென்றுணர்ந்துள்
ளாய்ந்துபகர்ந்தவர்கள்
கன்னன்கடைசென்றறமிரந்தகமலக்
கண்ணனடியவராய். (௫௧)

தம்பேர்மரபிற்கெழிற்குருவாய்த்தாங்கும்
பாகாலாரியர்பா
லம்பேரருளியாராழியுடன்வயங்குஞ்
சங்கப்பொறியேன்று
மம்பேரொளிவெண்மட்குறியீராறங்
கங்கடமிலணிந்து
வெம்பேய்முலையினுயிருண்டான்விளங்கெட்
டெழுத்தொன்றேபுகலா. (௫௨)

சந்திக்கன்மமுதலாயசதுரப்
பாடார்கன்மமெலா
மந்திப்பொழுதினவுணனுடல்கீண்டா
னடலார்வாகுவினில்
வந்திப்படியாள்பவர்க்குரியவழுவா
தியற்றிமறைவழியே
யெந்தத்திறத்ததெனுமிதரதெய்வந்
தொழுவதிகந்தொருவி. (௫௩)

ஒழுகலொல்லுமறுதலையாமொழுகு
பவரிவ்வுயர்நெறிக்கு
வழுவினமதுசூழநின்றும்வரைதற்
பாலாரெனவலித்து
தழுவவறுதியிட்டவருந்தம்முண்
மகிழாவிழைந்தேற்கச்
செழுவண்பழனத்திருநாடன்செய்தா
னென்பசீர்பெறவே. (௫௪)

தேருந்துணைவனாகுதிருமலையா
சிரியனெனுமொருவ
ஞரினவின்றவுபதேசநலத்தா
ணிந்தநன்னெறியைச்
சேருஞ்செல்வஞ்செருநர்வலஞ்சிதைக்குஞ்
செம்மல்சேர்ந்தனனே
ராரும்பெரியோருண்மைபயின்றார்க்காகா
தனவுமுளகொல்லோ. (௫௫)

சிக்குதேவராசவுடையார்
அறம்புரி சருக்கம்
முற்றிற்று.
ஆக, செய்யுள் — ௫௫.

எட்டாவது

சிக்குதேவராசவுடையார்

பேர்பெற்ற சருக்கம்.

மந்தியிற்கடுவனொடுமலையினின்றிழியுந்தேன்பாய்ந்
தெந்தநாள்களினுமவண்மையிடையறுவயலினூடே
ணிந்தவாறெவருமின்புகூர்தரப்புரந்துமற்றுந்
தந்திமாபுரியன்சீர்மைமணந்ததுந்தகவிற்சொல்வாம். (௧)

செருக்குறுமரட்டர்தம்மைச்சிமிழ்ப்புண்டுசிதையும்வேங்கை
யிருப்பினிலிருத்தியெங்குமிகலறவிருந்தவேலை
வெருக்கொளுமவர்களெல்லாம்வெல்வலியிலராய்வேந்தன்
பெருக்கினிலழுக்காறெய்திப்பேதுறக்குழுமியொன்றாய். (௨)

மகரவாரிதிசூழிந்தமண்டலத்திவற்குமாற்றா
ரிகல்செயவெழுவரேலங்குதவுவாரெவருமின்றா
லுகவலமொருங்குகூடியுடற்றினும்வேறறிண்ணந்
தகருநின்றுடைந்துசாம்புநரிபலததைந்துநூக்கின். (௩)

ஆகையினினியாமந்தவடுதிறற்படையினானை
யோகையினூரறியேலாவடுகளத்துடன்றுவாட்டித்
தோகையர்பவனமீதிற்றுலங்குறுஞ்சபலையென்ன
வாகைசேரரங்கந்தன்னைவயங்கொடுமகிழ்துமென்றார். (௪)

என்றிவரிதயந்தேறியிருத்தலுமயநாடி
வன்றிறலிறைவனந்தவடுவுறுஞ்சதியைக்காணூ
நன்றிவர்நடலையெய்தநாடருமுறுதிநண்பு [கே. (௫)
மொன்றுதுமினியாமொன்றென்றுணர்ந்துளந்துணிந்தானூங்

துணிந்தொருமதிவலோனைத்தூமணிப்பணிபொன்னூடை
யணிந்தமருடற்றங்காயவாடகக்கவசமாதி
யெணுந்திறமரியவின்னுமேற்பனவுதவிவிட்டான்
றிணிந்திடுதிருவினோங்குமத்தினபுரத்திற்கன்றே. (௬)

போயவன்புகலலொல்லாப்பொருபடைக்கடலும்பொங்கி
நேயமாங்குறிகளோடுநெருங்குபுமருங்குபோதச்
சேயதன்டில்லியென்றுசெப்புமப்புரத்திற்கிப்பா
லாயமேதாரிடையிலேலாரோசனைதனிலறிந்துநின்றே. (௭)

தன்வரவுணருமாறுதன்மையினொருவற்போக்கப்
பொன்வரவுடையவந்தப்புரவலன்மதர்விற்பொங்கி
முன்வருகவனிங்கென்னுமொழிதரச்செவியுற்றன்னான்
பின்வரவரிசைமுற்றுமபெருமகனவைக்கட்புக்கான். (௮)

புக்கவனிறைவற்குற்றநெறிப்படிதொழுதுபோற்றித்
தக்கதன்னிறைவன்றந்ததிருமுகத்துடனேயாவும்
வைக்கமுன்னவனுமேமன்றுவந்தவற்கிருக்கையீந்து
மிக்கவின்முகமன்கூறிமிளிர்ந்தலர்முகத்தின்மற்றும். (௯)

தண்ணிலவுமிழுமுத்தந்தாமரைப்பொகுட்டினுள்ள
தெண்ணுபுவடைகிடக்குமண்டமென்றெகினநாளுந்
தெண்ணறும்புனலினுடன்றெரித்தனுப்பியதுங்காணா
வுண்ணிறைமகிழ்வினோடுமவன்முகமினிதுநோக்கி. (௧௦)

கோனுடனுமதுகோமான்குசலமாயுளனேயென்ன
மேலுறுமெமதுமீளிமிழற்றிநின்புகழேயென்றுங்
கோலமோடொளிர்கின்றானென்றவன்பணிவுடனேகூற
வாலிதினுவந்துமற்றும்வழங்கியதொடங்கினானால். (௧௧)

ஆடகம்விளையுநுந்தமம்புவிக்கிறைவன்வஞ்சக்
கூடலார்குழாங்களஞ்சிக்குலைகுலைந்திரியவீட்டி
யாடவினகலங்கொள்ளவகற்றியம்பொழிலைமற்று
நாடுநலத்தாரென்றுநலிவுறுதிலகப்போற்றி. (௧௨)

நல்லறம்பெருகவெங்குநானிலம்புரக்குநாள்வாய்
வில்லறம்பிறழ்ந்தவீரமராடர்களிருவர்மிக்க
கொல்லறம்பெருகுநூறாயிரம்படுகுதிரைத்தானை
வெல்லறம்விளங்குமிந்தப்பொழின்மிசைப்படாவிட்டு. (௧௩)

மும்முறைநெறியையுன்னுமுரண்படுகரவரென்ன
வெம்மையிற்குடிகளீட்டும்விழுப்பொருள்கவர்ந்துவெய்ய
தெம்முனையடர்க்குமென்றன்றிறல்படுகரத்திற்சிக்கா
தம்மவோகரந்துபோகியரங்கபட்டணத்தையண்மி. (௧௪)

அலங்குமப்பொழிலுங்கொள்ளையாடுவானடைந்ததோரா
வலங்கிளர்படையோடன்னார்வதமுறப்பொருதுமாய்த்தீர்
நலம்படுகைமைகேளாநமதுளங்களிப்பிற்பொங்கத்
துலங்கியதுமதுகோமான்றோள்வலிக்கிணையுமுண்டோ. (௧௫)

அடையலர்க்கசனியன்னானுநம்மிறையும்யாமு
முடைமையுஞ்சிறிதும்பின்னமுற்றிடேமொன்றேயாவே
மடைதரினெதுவேயானுமறிவுறுத்திடின்மற்றாங்கே
மிடைதரவுதவுகிற்பேம்வயமெனமிழற்றிப்பின்னும். (௧௬)

நண்ணுதற்கரியராசகசதேவனெனும்பேர்நாமம்
பண்ணுறப்பகர்ந்துவேந்தற்கனுமனேகனுழன்சங்கே
யொண்ணிறத்திகிரியோடுங்குடாரமேமகரமீன
மெண்ணருஞ்சரபங்கண்டபேரண்டமுதலவின்னும். (௧௭)

பொறித்தொளிர்விருதுந்தந்துபொருந்துந்தன்மரபினுக்கு
மறித்தெழுதிரையம்போதிமலிதருமிசையும்வெள்கக்
குறித்தினிதிசைக்கும்வேறுவேறுறுங்குணத்தவாய
மறுத்திடற்கரியதூரியம்பலமகிழ்ந்துதந்தான். (௧௮)

செஞ்சுடர்முதலாம்பல்லசெழுஞ்சுடரெறிக்குநான்கு
மஞ்சுமாமணிகளார்ந்தவணிகலமெழுவாயாய
விஞ்சுபல்பொருள்கண்முன்னம்வேந்தளித்ததற்கிரட்டிப்
பஞ்செறிந்தனகண்மீளவளித்தனன்களிப்பின்மிக்கான். (௧௯)

தன்வயிற்குசலமெல்லாந்தகவுறவரைந்தளித்து
மென்வயினிடையறாதும்மிறையவன்விடுகவோலை [ப்
பொன்வயின்வயின்றோறோங்கும்பொழிலதுபெருக்கிற்கென்ன
பின்வருமவற்குப்பேணிப்பெருஞ்சிறப்புகந்துசெய்தான். (௨௰)

பணிபதிபணத்தினுடுபெண்ணவனுவக்கவைவர்
மணிமுடிபுனைந்துவையமகிழ்கொளவிருந்துகாத்த
விணைதபுதவிசினீண்டுவதியுநும்மிறைவர்க்கீடார்
மணிலெனப்புகன்றுவிட்டான்மல்லடுபுயத்தம்மன்னன். (உக)

வேறு.

ஒற்றையந்திகிரியையுருட்டிப்போற்றுமக்
கொற்றவெண்கவிகையான்கொடுத்தவேன்றவன்
மற்றவன்விடைதனைமணந்துமீண்டுபோந்
தெற்றுவெம்முரசுடனிணைந்துதன்பொழில். (உஉ)

காவதக்கப்புறமிறங்கிப்பட்டணக்
கேவினனொருவனையியம்பக்கேட்டவன்
காவலன்களித்துளங்கருதியாவன
தாவருநகரினையணியச்சாற்றியே. (உங)

மந்திரத்தலைவருமகிபச்சுற்றமுந்
தந்திரத்தலைவருந்தரணிபாலரும்
வந்திடினுதவுதிண்வணிகரீட்டமு
முந்தியவினும்பலமுறையர்யாவரும். (உச)

சென்றெதிர்கொளுமெனவிசைக்கச்சென்றவ
ரொன்றியவுவகையினெதிர்க்கவவ்விரு
துன்றியதிரள்களுந்துதைந்தமேதாற்றமா
லின்றிருக்கடலிரண்டிணைந்தமொத்தமே. (உரு)

இருதிசைப்பறைகளுமிசைக்குமோதையால்
விரிமிசையுலகமுஞ்செவிடுவெய்துறத்
திருநகர்த்தெருவெலாந்தெரிக்கொணுதபேர்
முருகிதுவெனச்செலீஇமுதத்தின்முந்தினர். (உசு)

நாகமென்பள்ளியைநணுகுநாயகன்
மேகமுந்தவழ்முடிநிலயமேவியே
வாகையினிலவுமிப்பகட்டின்மன்னவ
னோகையினரங்கனேலக்கத்தொன்றியே. (உஎ)

வடதிசைத்தரணிபன்வழங்கவந்தன
வடையவுமரங்கனின்சமுகத்திட்டவ
னடைவுடன்விடுதிருமுகத்தைவாசியாப்
படமுடியவனிமேற்பணிந்தெழுந்துபின். (உஅ)

அத்திருப்பொருளெலாமரங்கனின்முகத்
தொத்தருள்சுரந்தவனுதவப்பெற்றதாய்ப்
பத்தியினுணர்ந்தவைபரித்துமீண்டனன்
சத்திரநிழன்முடிதயங்கத்தன்னகம். (உகூ)

ஆறுமூன்றுறுறவளிக்குஞ்செய்கையைக்
கூறுசெய்ததத்தினபுரத்துக்கோமக
னூறுறுதளிப்பதையுணர்ந்துகாத்தனன்
மாறுறுவகைதனதகன்றமண்டலே. (௩0)

குறும்பரையொறுக்குபுகுவலயங்களிப்
புறும்படிபுரக்கையிலுவர்கடஞ்செருக்
கறும்படியவர்சிரத்தடிவைத்தாண்டிடுந்
திறந்தனையுளந்தனினயந்துதேறியே. (௩க)

அதற்கிணையெனவவரலங்கன்மௌலியிற்
பதித்தொளிர்மணிகளைப்பறித்தழுத்திய
மிதித்தெழற்குறுமிருகுறட்டைமேம்படப்
பதத்தினிறெடுத்துபுபடர்தன்மேயினன். (௩உ)

வளர்தருமணியெழுவணையதோள்வலத்
திளவெயிலெறிக்கும்பூணுரணீட்டிய
வுளபொருளனைத்தையுமளவிட்டோர்பக
லொளிர்தரக்கண்டனன்கோடியொன்பதாய். (௩௩)

கண்டபின்கதிர்மணித்தவிசில்வீற்றிருந்
தெண்டிசையிலகிரும்புகழையேத்துவோர்
திண்டிறறிகழ்நவகோடிநாரண
னென்றெடுத்தோதவுமியைந்துகேட்டுளான். (௩௪)

சிக்குதேவராசவுடையார்

பேர்பெற்ற சருக்கம்

முற்றிற்று.

ஆக, செய்யுள்—௪உஎ.

ஒன்பதாவது

சிக்குதேவராசவுடையார்

சற்கதிச் சருக்கம்.

ஈங்கிவணிசைத்தற்கருமிடனுடனே
யிணையறுந்திகிரியையுருட்டிப்
பாங்குறவெவரும்புரந்துபல்லாண்டு
பருகருமின்பமேபருகி
யோங்கியவுவகையுடனமர்தரலு
முடறளர்ந்துயர்பதம்புகுதற்
காங்கருத்தொடுமோராமயமவனை
யணுகியதடல்செறிந்தம்மா. (க)

கண்டனனதனைக்கருதிமேனிகழ்தற்
காயதைக்கனங்குழையவரு
மெண்டிருக்கருத்தோராதியராய
வின்புறுஞ்சுற்றமுமருகின்
மண்டுறவிளித்துத்தனதுமேல்விளைவை
மனத்தளர்வெய்துறுமொழிந்து
பண்டையதொருசங்கதியினையினிமே
னடத்துவான்பகர்தரலானன். (உ)

என்மகன்கண்டீரவன்பிறந்தைந்தாண்
டெல்லையாய்மொழிந்திடாமூகத்
தன்மையினிருந்ததகவினையுணராத்
தவித்துளமொருவழிதேறிப்
பின்மலிகலைஞர்பிறங்கியவவைக்கட்
பேசிடமதலையைப்புரிவோர்க்
கின்மையையிலக்கும்படிபதிமுதல
வீதுமென்றிசைத்தனமாதோ. (ஈ)

பகர்ந்திடுமெமதுபண்புறுமொழியிப்
படியெலாம்பரவலுங்கேட்ட
நுகர்ந்திடும்பொருள்கண்மலிந்திடுந்தேவன்
கோட்டையென்றுபர்பெயர்நவலு
மிருந்தனக்குடிக்காடதிலுறைதருகோ
பாலனென்றெழிற்பெயர்மேவுந்
தருந்திருமறையோதந்தணனொருவன்
றரணியையருச்சனைபுரிவோன். (௪)

ஒருபகலேழுபரியொளிரிரதத்
துதயனையுளமுறப்போற்றி
யிரவினிற்கண்டுஞ்செல்வையிற்கனவி
லெழுந்தினனேந்தலின்மகனை
யுளசெயவிழைக்கவெமதொருவரத்தி
னென்றுரைத்தருளினன்கரக்கப்
பரிவுடனவனுந்துயிலுணர்ந்தந்தப்
படியுடனெமதகம்படர்ந்தான். (௫)

படர்ந்தவனரசமகவினைப்பகரப்
பண்ணுவலீங்கெனப்பகரத்
திடம்படமொழிந்ததறிந்துளமகிழ்ந்து
திருமகன்றனையெதிர்விடுக்க
மடந்தபுமறையோன்றினமணிக்கடவு
ளடியினைமனத்தினல்வழுத்தி
யிடம்படுநயனத்தெழின்மகன்முகங்கண்
டியம்புவாய்திறந்தெனவிசைத்தான். (௬)

இசைத்தலுங்குழவியெழில்செறிபவளந்
திறந்துமுற்பவப்பயனெண்ணிக்
குசைத்தலையிருந்துதவம்புரிமறையோய்
கூறுவலொன்றுகேண்முன்னை
யிசைத்திடுபிறப்பினிழைத்திடும்யோகப்
பயிற்சியின்வழுவியபயத்தான்
விசைத்திடச்சுழற்றுஞ்சக்கரக்குயவர்
விழுப்பமார்மரபினுற்பவித்தேன். (௭)

உற்பவித்துவணகேதனன்பதத்தி
னெழுகுறுஞ்சானவித்தடத்தி
னெப்பவத்தொகையுமெண்ணினுங்கழலு
மியன்மணிகருணிகையிடத்தில்
விற்பனயோகிகிருட்டினபட்ட
னென்னுமோர்வேதியனுழையே
முற்பவந்தொலையுமாறவன்றூழும்பு
முதம்பெறவிழைத்தனன்போந்தேன். (அ)

யோகியின்பணிகளுளுற்றுபுபோத
வொருபகல்விழைந்தவனேது
நாகிளம்பூவைவண்ணனுமுய்வா
னவின்றருள்கீதையின்சுவடி
யேகலுமறப்பினிருந்திடத்திருக்க
வென்மனப்புன்மையானதீனே
யாகுவதறியாதபகரித்தந்தோ
வளித்தனன்விலைப்பொருட்கயலே. (கூ)

வீற்றபொன்றனக்கான்விழுச்சுவைப்பயங்கொண்
டவன்றனக்கேவிழைந்தளித்தேன்
மற்றதன்றீமைவிளைவினினிங்ஙன்
மாற்றமின்றாமனுயுதித்துங்
கொற்றவனுதரத்துதித்தனன்பழைய
கூறரும்புணியமிக்குளதா
னற்றவனவனுநாடுறுஞன்காம்
வருணனுக்கதைநவின்றதனல். (க0)

இனியெனதகட்டையாறுறுவருட
மிகந்தபினுதித்திடுமவற்கு
நனிமகிழ்ந்திடுவார்கிருட்டினராய
னென்னுமின்னுமமுநிற்க
தனியுருளாழித்தேரரியுருவாந்
தவனனதருளினுனீண்டும்
மூனமினிதுரைத்தேனினிமொழிபகரேன்
முன்னையவினைவலிமுதிர்வான். (கக)

ஆயினுந்தமர்காளலக்கணுற்றிடன்மி
னவுணருமரக்கருஞ்செறினுங்
காயெரிகதுவுங்கைப்படையதனாற்
கலங்கியேசிதைவுறப்புடைப்பேன்
சேயவித்தேயஞ்செறிதரவின்பஞ்
செய்யகோனடத்துவேனுண்டு
வாயிலனேனுங்கைம்முகநயனக்
குறிப்பினல்வழங்குவலாணை. (கஉ)

கலைபயின்ஞானங்கையுறுமதுவே
கலங்கலிர்காசினியளித்தற்
இலகியமதிநுட்பமுமியைந்திடுவே
னென்றுரைத்தியம்பிடான்மற்று
மலர்நிகர்வாயைத்திறந்திடாதுறைய
மாயவன்சித்திரச்செயல்க
ளலகிடற்கரியவவற்றுளுமிதுவோ
ரற்புதமெனவகந்துணிந்தேம். (கங)

குழவியைப்பகர்தற்கித்துணையேனு
முதவியகுவலயத்தேவற்
கிழைகளேழுதலபலசிறப்பியற்றி
யிரும்புனலிடையறுவயல்சூ
ழுழவர்கண்மலிந்தவூர்களுமளித்துப்
போக்கினேம்புகலுதுங்கேண்மின்
மழவிடையனேயமைந்தனுமிவற்கே
மணிமுடிபுனைந்தினியடைவின். (கச)

நந்திசைநடந்தயந்தனையொருவா
திவன்கணுநடந்தொருநவையும்
வந்திசையாதவகையுளிக்காமின்
வையகந்தனையெனவழங்கி
முந்திசைத்தனகண்முழுதையுமறந்து
முராரியின்பதமலர்தனையே
சிந்தைசெய்துடனேசிரம்பிளந்தெழுந்து
சேர்வரும் பரம்பதஞ்சேர்ந்தான். (கரு)

சிக்குதேவராசவுடையார்
சற்கதிச்சருக்கம்
முற்றிற்று.

ஆக, செய்யுள் — சசஉ.

பத்தாவது

தொட்டகிருஷ்ணராயச் சருக்கம்.

தாரம்பலவிருக்கத்தானித்தியபிரம
சாரியெனச்சூளுறவுசாற்றும்பெருமானி
னேரின்றிருளிர்மகிமைநேர்ந்தறியாமானிடர்க்
ணூரின்றவனடியைநண்ணார்பழித்தொழிவார். (க)

ஆண்டுகளோராறஞ்சாயாண்டுகழித்தவற்குத்
தூண்டும்பரித்தேரத்தேதாமறுகண்டரவனும்
வேண்டும்படிபொருளைவிட்டிறைத்துத்தந்தைகடன்
தாண்டும்வகைசரமகைங்கரியந்தானிழைத்தே. (உ)

வாயாலுரையாடும்வண்ணமவரைந்திருந்துங்
காயாமலர்வண்ணன்றன்னருளிற்காசினியைத்
தாயாமெனவெவருந்தாமின்புறவளித்து
வீயாவறங்கள்பலவிழுப்பம்பெறவிழைத்தான். (௩)

மஞ்சாடுயர்முடியின்மன்னுமேருகிரிமே
னெஞ்சானினைந்தவர்க்குநீளின்பந்தருளுங்
கஞ்சானனத்திருமால்கண்டருளப்பல்பணிக
ளெஞ்சாதிலகவிழைந்தெத்தனையோசெய்தனனும். (௪)

ஒன்னாரைத்தானடக்கியொன்பதுயராண்டளித்துப்
பின்னாலேபெற்றெடுத்தபெருகுமிடலார்ந்த
நன்னாமந்தொட்டகிருட்டினனென்றுடலுறும்
பொன்னாரும்புத்திரற்குப்பொன்மாமுடிபுனைந்தே. (௫)

புந்திபலபுகன்றேபூபாரந்தாங்குதற்கு
முந்திமுறைமுறையேமுன்னோர்வழிகாட்ட
விந்திரையாணாதனேராரடிநினைந்தே
யிந்தியழியாதபேருலகமெய்தினனால். (௬)

தந்தைபரலோகந்தானடையப்புத்திரனு
நொந்துகடைக்கிரியைநோன்மைபெறவிழைத்துப்
பிந்தியுலகாளும்பெருஞ்சுமையைத்தோள்சுமந்து
சந்தமணங்கமழுந்தண்பொழிலைத்தாங்கினனே. (௭)

இன்றளவுமூராண்டவெல்லவர்க்குளித்திறல
னன்றுபுரந்தானென்றுநானிலமெங்கும்புகழ
வொன்றியுரவோர்களுடனோர்ந்தூறடையாமே
வென்றுபகைத்திரளைவீறுபெறவிழைத்தான். (௮)

வேண்டார்கள்விம்முறவும்வேண்டியவரின்புறவு
மாண்டார்மகிழ்வுறவுமைந்தினிதாளுகையிற்
காண்டார்கலங்குறுமார்க்காடாண்மறத்துருக்க
னேண்டாங்கமாத்திபன்சித்தோசியெனுமிடலான். (௯)

பல்லாயிரம்படைஞர்பைம்பொனொளிப்பேரணியி
னெல்லாப்படைக்கலமுமேந்தியுடன்போதரமுற்
செல்லாவடன்மிடுக்கிற்சிரங்கபட்டணஞ்சென்
றொல்லாதொளிரடத்தற்கோரரணைத்தாக்கினனால். (௧0)

மன்னனறிந்ததனைமானக்கொதிப்பினுடன்
கன்னெஞ்சங்கொண்டளவிற்காலனயர்தானையொடும்
பொன்மதிலின்மீதிவர்ந்துபொங்கியுரறிப்புடைக்க
வன்னெஞ்சுடையவனர்வாய்வெரீஇவென்னிட்டார். (௧௧)

வென்னிட்டவரோடவென்றிமுரசார்க்கப்
பின்னிட்டெழுந்தவரின்பெறற்கரியபேறனைத்துந்
தன்னிட்டமாய்ப்பறித்துத்தன்னகரமீண்டனன்றன்
முன்னட்டார்க்கோடுபவன்முற்றுமிளைத்தானென்ப. (௧௨)

வேறு.

ஏகச்சிலபகலெல்லைவையுமெய்தும்மராடத்தை
யாகப்பலவின்பந்தனதடல்கொண்டினிதாளும்
பாகற்றவர்பாடும்புகழ்ப்பாசீராயனென்பான்
மோகித்தனனரங்கம்மெனுமுயர்மங்கையைமுயங்க. (௧௩)

திரையுங்கடலேழும்புழுதியினையளறெய்த
விரையுங்கடலிசையுங்கெடவெழுதானையினேகி
வரையுங்கெடவளரும்மதிலரங்கந்தனைவளைத்தான்
றெரியுங்கொலோமுறைகாமுகர்திரியுங்கருத்திடையே. (கச)

எரிகான்றிடவிழிகாவலனிதுதற்செவியேறி
யருகார்ந்திடுமடருனையினதிபர்முகநோக்கத்
திருகார்ந்திடுமதமாபரித்திரளெண்ணிலதுடனே
முருகார்ந்திடுதும்பைத்தொடைமுழுவீரர்கள்பாய்ந்தார். (கடு)

பதணத்திடையிவரிக்கொடிமதிளின்மிசைபம்பி
மிதமற்றிடுமவர்தண்டெயின்மீதேறியமீறல்
கதமுற்றனர்கண்டார்சதக்கினியாதிகள்பலவு
மதமுற்றிடவவர்வாகினியங்கைக்கொடுபுடைத்தார். (கசு)

வீரங்கொடுவேந்தன்படையுயிரிற்பெருகிசையே
நேருந்நிலையெனநின்றமராடப்பொருநேரார்
பீரங்கியினழிதந்தனரின்றுங்கரிபெரிதுந்
தீரங்கிளர்வெண்மாமுகந்திகழ்கின்றவராவார். (கஎ)

ஆரும்பொருமடலின்றழிதந்தார்நமதாள்க
ளோரும்பொழுதிச்சூரரையுளதாகுமிந்நகரஞ்
சீரங்கபட்டணமன்றுமன்பீரங்கிபட்டணமே
யாரிங்கிதைவெல்வாரெனவயன்மன்னவனையா. (கஅ)

உயிரொன்றுறினுப்பாயினுமாறிப்பிழைத்திடலாஞ்
செயிரின்றுறுமினியிங்குறினென்னுவவன்சிந்தித்
தயிலுங்கரங்களுமாயுயிரடைந்துள்ளவருடனே
மயிலன்றனக்கிரிந்தோடியமாற்றாரெனப்பறந்தான். (கக)

சனிவீட்டதென்றவனோடலுஞ்சலமற்றுளமகிழா
வனிகத்துடனரணம்புகுந்தயலார்குலைகுலைய
வினிதுற்றுறவெவரும்மிசைபெருகத்துறைபிறழாத்
துனிவித்தகரொடுகொத்தனனுயர்மேதினியென்ப. (உ௦)

எண்ணிப்பெரிதிவன்செய்தபேரறமெத்தனையென்பேன்
மண்ணிற்பொலிதிருவேங்கடமலைமாதவன்றனக்கே
பண்ணித்திகழ்பணியன்னவன்பாயற்குமுரைக்கத்
திண்ணூற்றிலதெனின்மற்றதுதெரிவார்திறத்ததுவே. (உக)

பரகாலகுருவினற்பதம்பணிந்தன்னவருழையே
நரகாரியினறிகிரிப்பொறிபணிலப்பொறிநல்குற்
றிருகாலினுமவனெட்டெழுத்தெழின்மந்திரசெபமே
விரகாமுயர்கதியேறிடவெனமாடினன்விழையா. (உஉ)

எம்மானுளமகிழுந்திருவேகாதசிவிரத
மிம்மாநிலத்தெவரன்னவனென்னத்தகவிருந்தா
ரம்மாவிவனைவீரவைணவனென்றிடவாரு
நம்மாயவனடிநாடொறுநாடிப்புகன்றிருந்தான். (உங)

அவ்வாறவனைம்மூன்றுடனிரண்டாண்டுகளளியா
வெவ்வாழ்வுநுகர்ந்திவ்வுலகின்பந்தனைமுனியா
வெவ்வாணிகர்விழிநாயகியமைச்சர்தமைவிளியா
விவ்வாசகஞ்செவியுற்றிடுகென்றேயினிதிசைப்பான். (உச)

இனியாரியனருளிற்பெருவீடேறுவலிந்தத்
தனியாழியையுருளப்புரிதனயன்னமக்கின்று
னனிவாழுமங்கனகள்ளியினண்ணுந்தேவராசன்
மணியாமெனமகவொன்றுயிர்த்துள்ளானவன்ஞாதி. (உரு)

அப்பேரழகாளன்றனையமையாமுடிபுனையா
விப்பார்முழுதாளும்வணமிழைமின்களென்றியம்பி
யெப்பாலருமிசைதற்குறுமெழிலாருயர்கதியை
யொப்போதருநெறியிற்புவியொருவிப்புகுதந்தான். (உசு)

புகமாவுலகவனின்மயில்புரையும்முதன்மனையாண்
மிகமாழ்குபுகருமந்தனைமேன்மைப்படவாற்றி
நகுமாமுடிகொண்கன்பகர்நரபாலனின்மைந்தற்
குகவாவுளமொளிரப்புனைந்தூராள்கெனவுரைத்தார். (உஎ)

தோட்ட கிருஷ்ணராயச் சருக்கம்

முற்றிற்று.

ஆக, செய்யுள்—சசுகூ.

இம்மடி கிருஷ்ணராயச் சருக்கம்.

சாமராயனென்னுமத்தடம்புயத்தரணிப
னுமவேலைசூழுமிந்தநானிலங்களிப்புறத்
தேமலர்த்தொடையலங்கற்றிண்புயத்திறல்கொடு
நேமமுற்றுநீதியுள்ளிநேர்மையிற்புரந்தனன். (௧)

அந்தவண்ணமாகவாண்டிரண்டவன்புரத்தலும்
மைந்தமைந்ததீயவாமனத்தனுமோர்மந்திரி
நந்தமுள்ளமோடுமாறுநண்ணியேநடக்கில
னிந்தமன்னனென்றவற்கிடும்பைசெய்யவெண்ணியே. (௨)

தேவராயனென்னுமத்திருகமைந்ததீயவன்
காவலாயவாகினிக்குநாதனாயகாரணத்
தாவராவோராணியத்தயர்ந்திருந்தவரசனைப்
பாவராயவீரராற்பருந்தளைப்படுத்தினான். (௩)

அண்ணலுக்கன்றரசுதந்தவரசியுள்ளமும்வெறுப்
புண்ணுமாறுமிக்கவூறுரைத்தருஞ்சிறைப்படுத்
தெண்ணரும்பணிக்கபாளமென்னுதுர்க்கமெய்தியாங்
குண்ணலிந்தொடுங்குமாறுகாவலிட்டொதுக்கினான். (௪)

நரகினுக்குநாற்றங்காலாய்நண்ணுமந்தநன்றிலான்
விரகின்மற்றும்வேந்தனுக்குஞாதியாகுமொருவனின்
னரசிலக்கணத்துதித்தவழகமைந்தமைந்தனை
மருவிடத்தனயனாகமன்னன்றேவிமாடியே. (௫)

இக்குழந்தையரசனென்றிருக்கினேகதேசமாய்
மிக்கவிந்தநாடனைத்துமேவியாமேயாளலா
மொக்கவென்றுணர்ந்துணிந்துவயதுமூன்றுடையவா
மக்குழந்தைகிருட்டினற்கலங்கன்மௌலிசூட்டினான். (௬)

வட்டவெண்குடைக்குளெந்தவாழுநாடும்வைகியுட்
பட்டிருக்கநீடுமுந்துபார்த்திவர்புரந்தவிக்
கட்டமைந்தகாவலுக்குநாசகாலனுமெனப்
பட்டவைதரல்லிபண்புபகர்துமிங்குதன்னமே. (எ)

வேறு.

காசினிதிலகமாகும்பரதமாகண்டமென்று
பேசுறுமிதற்குமேல்பாற்பெருமிடன்மிலேச்சர்வாழுந்
தேசநின்றொருவனன்னாட்செந்நெலுக்கிடையிற்றிண்மைப்
பாசிலைப்புற்கணெல்லப்படர்ந்தெனப்படர்ந்தானீங்கே. (அ)

போந்தவன்முதலிற்பீசாபுரந்தனிற்புகுந்துதன்னைச்
சேர்ந்திடுகுடும்பத்தோடுஞ்செறிந்தவட்புரந்தவேந்த
னுந்தகவுழவனாகிநாள்கழித்தனனன்னான்பின்
காந்தடன்மரபின்வந்தானொருவனங்குணவுங்காணான். (கூ)

உயிர்த்திடும்புதல்வர்மூவருடன்வரக்கோலாறெய்திச்
செயிர்த்திடுநமன்கைப்பட்டான்சிலபகலகலவாங்கே
பயித்தியம்பிடித்தோரென்னமூவரும்பரிவினுள்ள
மயர்த்தனர்பிழைக்கலாற்றாரகன்றனரதனின்மாதோ. (க0)

அலைந்தலைந்தலகையென்னவகங்குழைந்தவரின்முன்னோன்
மலைந்திடுதிறத்துச்சீரியத்துறைமகிபன்றன்பாற்
கலந்தவனளித்ததொண்டுகைக்கொடுபிழைக்கலுற்று
னுலந்திடவிடுப்பன்கொல்லோமரத்தினுக்குரிமைபூண்டான்.

துரங்கமப்படைக்குஞ்சில்லபதாதியின்றொகுதிகட்கு
முரங்கிளரதிபனாகுமுடைமையைப்படைத்துச்சின்னா
ளிருந்தனனிருந்தகாலையிருந்தனம்விளையுமோரூர்
திரங்கொளவரசற்கியுந்திறையுமில்லதனைப்பெற்றான். (கஉ)

இன்னணமிருந்தவன்றாற்கிருவர்மெய்ம்புதல்வருண்டு
முன்னவன்சாகியென்பான்முரண்படவுடற்றும்வெய்ய
பின்னவன்பெயரேயைதரல்லியென்றுலகம்பேசு
மன்னவன்றானேயிந்தவாட்சியையடித்துக்கொண்டான். (கங)

ஈன்றவனிறந்தபின்னரிருவருங்கடனேவிஞ்சி
றோன்றிடாததனினுய்யநுவலுமோர்நெறியுங்காணு
ரோன்றமருணராதூரைத்தணந்தனர்குலைப்பிற்சென்று
கான்றருபொழில்சேர்பள்ளாபுரந்தனைக்கடுகியெய்தி. (கச)

தந்தையினனுசனுயகுலாமெனுந்தறுகணாளற்
கிந்தவெங்குறையைச்சாற்றவிவனுமப்புரியின்மன்னன்
றந்தமுற்கடனைத்தீர்க்குந்தடஞ்சிறிதுணரான்சிந்தை [றுன்.
நொந்தனன்மீண்டுங்கூர்வேனுழைந்தபுண்ணுடையன்போன்

துணிந்தொருவழியின்மற்றும்புதல்வரைத்துணையிற்கொண்டு
திணிந்தபேரிருளினூரைத்தீர்ந்தெழுந்தகன்றுபோகி
மணங்கமழ்பொழில்சூழ்மத்துகிரியெனுநகரையண்மி
யிணைந்துடன்பிறந்தானங்கேயிருப்பவற்கிதனைச்சொற்ருன். ()

தம்பியுந்தனயர்தாமுமொழிந்தததுதகவிற்கேளா
வெம்பியமனத்தினந்தக்குலாமல்லியெனுமவ்வீர
னும்பலினுயருமைசூரிறைவனுக்கொடுங்கியாங்கே
நம்புறவரசனுணைநடத்துவாற்குரைக்கலானன். (கஎ)

கட்புலக்கடவுளென்றேகழறுறுநிருபனுணை
பெட்பொடுசிரமேற்கொண்டுபிழையறச்செலுத்தும்வெய்ய
திட்பமார்புயத்துமல்லாராயனேதெரிதியிந்த
நட்பினுக்குரியனெம்பிநவில்குவலவராரென்னின். (கஅ)

பிறிதொருதுணைவன்பெற்றபெருந்திறல்வாய்ந்தமைந்த
ரறிதியிவ்வயவரந்தோவயலவர்கடனுக்குள்ள
முறிதரவுடைந்துசாம்பிமுரணழிந்திரங்கலானு
ருறுதியொன்றுளதோமற்றுங்கடந்தனினுலகினம்மா. (ககூ)

இரணமும்பெரிதொன்றன்றேவெண்ணிணைந்திலக்கந்தாணு
நிருபனுமிதனைநல்கினேனந்தவற்கடிமைபூண்டு
கரணமூன்றுனுங்கள்ளங்கரந்தவன்காலாலிட்ட
திரணமுந்திறம்பலாற்றேம்வாய்மையிற்றெரிப்பலன்றே. (உ௦)

இத்தகையெமக்குளிந்தவெறுழ்வலித்தடந்தோள்வீரன்
மத்தவெங்கயத்துக்கொப்பான்மலைநிகர்மனமுமார்பும்
பெற்றவனைதரல்லியெனும்பெயர்பெற்றானிந்த
வித்தகன்விரகால்வேந்தன்வினையெலாமுடியுமென்றான். (உக)

தொனிபடமொழிந்தமாற்றஞ்செவியுறத்துணிந்தேயண்ணா
னணியிவரமரிலேற்றநண்ணலர்செருக்கைவாட்டுந்
துணைவினரதனானீங்குப்புரிவதேதொழிலென்றுள்ளித்
தனிமையினிறைவற்கோதத்தகுமெனவவனுங்கொள்ள. ()

ஒவறவுதவினாலுங்குறைபடாதிறையுமோங்கு
மேவருங்கோசந்தன்னின்மிகுபொருளவற்குத்தந்து
மூவருமரசற்காமென்றவர்கையின்முறியுங்கொண்டான்
றாவரும்பொருளைத்தந்துகரங்கொண்டதகவினம்மா. (உ௩)

பெண்டுபிள்ளைகளைமுன்னம்பெருங்கடன்காரர்கொள்ள
விண்டொளிந்தெழுந்தவன்னார்விழுப்பொருளதனைமீட்டுங்
கொண்டடைந்தளித்துமக்கள்குடும்பினியுடனேமீண்டு
தொண்டுமத்துகிரிதன்னிலிழைத்திடத்துவக்கினாரால். (உ௪)

ஆனியஞ்சிறிதங்கேகவப்பனுநமனூரெய்தக்
கோனருண்மொழியாலைதர்முன்னவனுடனேகூடி
நானிலத்தவருநாடும்பெங்களூர்நணுகியாங்கே
மேனிலையதிபனேவன்மேவரவயர்ந்துபோந்தான். (உ௫)

திங்களோரொன்பதாகத்தேவனள்ளியெனுமூரைத்
தங்களுக்கதிபன்கோபாலன்பெருந்தானையோடும்
பொங்கிமுற்றுகையிழைத்துப்பொருதுமோர்பயனுமின்றி
மங்கியமனத்திற்சாம்பமறங்கிளர்ந்தெழுந்தானேதர். (உ௬)

இனைவுறீரினிநீரென்றுவிதுகாறும்பொருதிளைத்த
தனிவிறற்றனையனோடுமதிபனைத்ததைந்துதேற்றி
நணிகிளர்படைகள்சூழநாகிளம்புலிப்போத்தென்ன
முனைவருமுனையிற்பாய்ந்துமுறிதாவயலார்போழ்ந்து. (உ௭)

பேணலாரரணத்தன்கைப்பற்றுபுபிறங்குமைசூர்
வாணிலாமுறுவலார்தம்வாயெனவயங்குசெங்கே
ழேணிலாங்கொடியைநாட்டவியம்பினமுரசநாய்கன்
றூணிலாம்புயத்தினந்தத்துருக்கனைத்துதித்தானன்றே. (உஅ)

வேறு.

மற்றும்மற்றுங்கொற்றம்வளர்ந்தம்மறவீரன்
சுற்றுஞ்சூழுந்தானையினைகிச்சுடர்வாளால்
வெற்றங்கொள்ளாவேண்டலரூரையறவவ்விப்
பொற்றிண்டோளப்பூபனுவக்கும்படிபோந்தான். (உகூ)

பின்னேமன்னன்பேரனிகத்திற்கிறையாய
கன்னேர்தேவராயனும்வியக்கருந்தானை
யென்னேயெங்கள்வேதனமீகிற்றிலரென்னக்
கொன்னேகோவங்கூர்ந்துகலங்கிற்றுடனன்றே. (௩0)

கூடாரூனைக்கூட்டுணவீறுங்கொலைவேலா
ஞடாவந்தவாகினிசெய்கைநலமற்ற
தோடாவீரத்தோங்கியவைதர்முகநோக்கி
நீடாதேகிநீக்குதிசேனைத்துனியென்றான். (௩க)

கூருங்கள்ளச்சிந்தையனந்தக்கொலையஞ்சா
ஞருங்காணுதங்கமொடுங்கிக்கரங்கூப்பி
நேருஞ்சிந்தைகொண்டுநீயையநிகழ்த்தெந்தச்
சீருஞ்செய்யச்சிற்றறிவுள்ளேனியைந்துள்ளேன். (௩உ)

நன்றுந்தீதுநன்குணர்ந்தானுநரபாலா
துன்றுஞ்சுற்றந்தொன்மையனேகமுடனிற்கக்
கன்றுந்தானைக்காவலுமிங்ஙனளியற்கே
யொன்றும்போழ்திங்குள்ளவருன்கட்டுனிகொள்வார். (௩௩)

வள்ளாலெற்கிவ்வண்மையளிக்கிவினிவையங்
கொள்ளாவின்னல்கூருமெனக்கொற்றவனக்கு
நள்ளாரஞ்சநன்கிகலாற்றுநனிதீரா
தள்ளாநேயந்தங்கியதுன்கட்டலையயானே. (௩௪)

பொன்னிற்கெந்தம்புத்திரனாகிப்புகுதந்தா
யுன்னிற்பின்னரியாரையுநம்பற்குளமொவ்வேன்
மின்னிப்பொன்னிறாழியைமேவுகெனவன்னான்
முன்னிற்கள்ளக்கும்பிடளித்துமொழிகிற்பான். (௩௫)

தாயாயானுந்தாரணிமன்னாதயையிதே
னீயேதண்டிற்குற்றவனென்றுநிருபந்தந்
தாயேயாகிலண்டுதலின்றிப்புரையொன்றுந்
தீயேனுள்ளித்தெற்றெனவாற்றுந்திடமார்வேன். (௩௬)

என்னாவன்னானுடுறவேந்தலினியிந்தப்
பொன்னார்கோயிலென்றமரேனும்புரையாற்றி
னுன்னாதொன்றுமோர்ந்தரினீயேயொறுக்கிற்பி
னன்னாரேன்றென்னணையதென்றேயமைவொல்லும். (௩௭)

தானைக்கொல்லும்வேந்தனுநீயேதரையாளற்
கேனைப்புந்திசொல்பவனீயேயிறையெல்லாங்
கோனுக்குற்றநீதியினுள்ளிக்கொடுவெந்தென்
மானக்கோசமன்னநிறைப்பவனுநீயே. (௩௮)

எல்லாநீயேயென்றுபொறித்துக்குறியிட்டு
மல்லார்திண்டோண்மன்னனளிக்கமனம்பொங்கி
வெல்லாநின்றேன்மேதினியெல்லாமினியென்னாக்
கல்லாவந்தக்கண்டகனெண்ணிக்களித்திட்டான். (௩௯)

வேறு.

சாந்தமுழ்கியதடமுலைக்கோதையரின்ப
மாந்திவைகலுமகிழ்வொடுமந்திரத்திருந்த
வேந்தனைதரைத்தலைமிசைவிழைந்தனன்வைக்கப்
போந்துமன்னவன்பெருஞ்செருக்குறைவிடமானான். (௪௦)

கோடியொன்பதுபடைத்திடுங்கோமகன்முன்ன
நாடிநானவகோடிநாராயணனென்று
பீடுபேசியபெறலருமிப்பெருங்கோனு
மாடலார்நமதாயதென்றவனகங்கரித்தான். (சக)

சேனையெண்ணிலசெருச்செயுந்திறம்படச்சேர்த்தான்
வானையாறெனவொழுகிருங்கிருட்டினைவளாயு
மானமண்டலமகப்படவடர்த்தனனீட்டி
யேனைமுக்கடலளவெழுந்தவற்றையுமியைந்தான். (சஉ)

பொங்குதானையிற்போகியங்கங்கமர்பொருது
சிங்கவேறெனச்செருக்குடனிறைவனுந்தமரும்
பங்கறெய்துறப்பணிப்பதுதெரிவுறுவமைச்ச
னிங்கிதற்கொருவிரகிழைத்திடுதுமென்றெண்ணி. (சங)

கண்டெராயனென்றறைதருங்கருதுமத்தொழிலன்
கண்டுமன்னனைக்கழறுவலொன்றுகேளிறைவ
மண்டலத்திறைமந்திரிதந்திரியாதி
தொண்டிழைப்பவர்க்கரசன்றன்றொழிலினைத்தொகுப்பின். ()

வல்லிமெல்லவேபடர்ந்திருந்தருவினைமறைத்துக்
கொல்லுமாறவர்கும்பிடுநயம்படுமுனையுஞ்
செல்லநாடொறுஞ்செய்தடுமமையமுஞ்சேரிற்
கல்லெனக்கழுத்தறுப்பர்கள்கண்டுளேமன்றே. (சரு)

ஆதியிற்புவியனைத்தையுமடங்குறவளித்த
கோதறுங்குணச்சச்சந்தன்கொடுங்கொலையுண்ட
சேதிகட்டியங்காரனாற்றெரிந்தனையன்றோ
காதுமைதருமவன்றனக்கதிகனீகாண்பாய். (சசு)

தாழ்த்திடாதவன்றனைவிளாந்தடக்கலேதகுமால்
காழ்த்திடாதமுன்முண்மரங்களையுமாறைய
போழ்த்தவன்றனைப்பொருதழித்திடுவலிப்போழ்தே
வாழ்த்துமாறெனக்கருளுகவரமதற்கென்றான். (சஎ)

என்னவண்ணனுமியம்பலனென்றெனுமிருக்க
வன்னவன்கிளர்ந்தடுபடைசிலதனதுடனே
துன்னியேபெருந்துழனியோடைதரைத்தாக்க
வென்னவீதெனவவன்சிலபடையொடுமெதிர்த்தான். (சஅ)

ஆயிரங்கரன்குடகடலழுந்தியவளவு
மேயமந்திரியுடற்றியுமிகன்மிகுமவனை
மாயுமாறடர்த்திடுதலின்றயர்ந்தனன்மற்றுந்
தீயவத்துருக்கனுமுடன்றெரிவுறுவிருளில். (சகூ)

தாரமக்களைத்தணந்தனன்விரைந்தனன்போகிச்
சீரகத்துறும்பெங்களூர்சேர்ந்தனனீங்கு
வீரமிக்கவல்லமைச்சனும்விடம்புரைதுருக்கற்
காருமக்களில்லாளையுமருஞ்சிறைப்படுத்தான். (ருo)

ஐயன்மாட்டுளவன்பிலனமைச்சனிவ்வரிய
செய்யயாவரும்வகைபெருச்செய்கையைச்செய்தும்
பொய்மையென்றவப்புரவலன்குரவனைவெறுத்தான்
வெய்யவூழினைவிலக்குதற்கார்வலியுள்ளார். (ருக)

வேளைவென்றவவ்வேந்தனுமைதருக்குரிய
வாளைவென்றகண்மனைவியைமக்களைப்பரிந்திவ்
வேளைவென்றவன்விரகிலானெனவுபசரியா
நாளைவென்றுநுங்நாயகன்புகுமெனநவிலா. (ருஉ)

வன்கணுளனதுழையவர்தமையுடன்வரிசை
நன்கயர்ந்துபெங்களூர்செலநயந்துபோக்கினனு
லங்கவன்றனதலகிலாப்படையுடன்சிவணி
மன்கணோர்முறிமறம்படத்தீட்டுவிடுத்தான். (ருங)

விட்டவோலையைவேந்தனும்விழைந்தனன்படிக்க
மட்டிழிந்தொழுகலங்கலந்தொடைபுனைமகிபா
சிட்டனென்றுநீதெள்ளியதீயநின்னமைச்சன்
கெட்டசெய்கையையெற்றெனத்துணிந்தியான்கிளப்பேன். ( )

ஒன்றுகேளென துரைப்பரும்வளப்பெருநாட்டி
னென்றவெங்கணுமுளுற்றியகடிகைகடோறுஞ்
சென்றிரண்டுமூன்றிலக்கமாம்பணங்களைச்சேர்த்துக்
குன்றுபோற்பணக்குவியலைகுவித்தனன்கோடி. (ருரு)

கையணுகுமக்கண்டெராயன்முனமெனது
கையகம்படிந்தென்பணிபுரிந்தவன்காண்டி
பொய்யனன்னவன்றனையினிப்பொருக்கெனப்பற்றிச்
செய்யவென்னுழையிடுபணிமீண்டிவண்சேர்த்தி. (ருசு)

வெல்லருந்திறன்மராட்டரேயாதியாம்வினைஞர்
புல்லநின்புவிபோந்தவர்புறந்தரப்பொருது
சொல்லலின்றியகடமெனக்குற்றதுதொலைப்பான்
மல்லடும்புயமன்னவவழியெனக்கருள்வாய். (ருஎ)

நீதியாயிதற்கொருப்படநினக்குளமிலதேற்
பேதியாதவென்பெரும்படையுடன்பிழைத்திடுவான்
காதியாடமர்க்காவலரிதரர்பாற்செல்வ
லோர்தியென்றதிற்பொறித்துளதுணர்ந்துளம்பதைத்தான். ()

வேறு.

உற்கைதனைக்கொண்டுணராதுத்தமாங்கஞ்
சொரிந்ததெனவுணர்ந்துரைத்தகுரவர்பேச்சை
யற்பமெனவிழித்திகழ்ந்தேனந்நாளந்த
வறிவின்மைக்காயபயங்கண்டேனிங்கு
வெற்புநிகர்த்துருள்பெருந்தேர்க்கச்சாராணி
யெனப்படுவர் விழுமியவரெனலுந்தேர்ந்தும்
பொற்புறுமிப்பொழிலளிக்குந்திருவிற்கந்தோ
வொருபொழுதுமகலாதபுரைசெய்தேனே. (ருகூ)

நச்சரவைநலிவுறுத்திவிடுத்ததென்ன
நாடெங்குநடுங்குமிந்தத்துருக்கன்றன்னை
யிச்சைநெறியேகுகெனவிசைக்கினென்னு
ருழையெய்தியிறைப்போழ்திலெதிர்ப்பானென்னை
யச்சதியினவன்கருத்திற்கிசைந்தளிக்கி
னல்லவினிச்சிலபகலேயானுந்தள்ளும்
பச்சைமுகிற்பாம்பணையானருளானன்றிப்
பயனெதுவுமணுகாதென்றுய்ந்தேதேறி. (சு0)

கண்ணகன்றநாடதனிலிறைவன்காலங்
கழிப்பதற்குச்சிறிதுபகுத்தங்கைக்கொண்டு
தண்ணிலவைவெறிதரளநகைசேர்வாயா
டன்மனைவிதனையீன்றான்றனக்குந்தன்ன
மெண்ணியளித்தெண்ணரியவிரணக்கெல்லா
மிணையில்லாமற்றதெலாமவற்கேயீந்து
புண்ணெழுந்தமனத்தினனாய்ப்பொருமினானற்
கடம்பட்டார்கடைகெட்டார்புவியினென்ப. (சுக)

தன்மரபின்முன்னோருந்தானும்வைத்த
தருமமெலாந்தடையின்றியொழுகுமாறும்
பொன்மலியும்புவியடையவாண்டுதோறும்
புகுதுவனவெவ்வற்றிற்கும்புகலுமாறுஞ்
சொன்மலியவமராடிவயங்கொண்டொன்னார்
சூழரியபொழிலின்னுந்தொகுக்குமாறுங்
கன்மமிவைநினக்கென்னவலிந்துநாட்டிக்
கையொப்பமவன்கரத்தினெழுதிக்கொண்டான். (சுஉ)

ஆட்சியெலாமாயதுநம்வயமென்றுள்ளத்
தடங்கரியசெருக்கினொடுத்துருக்கனங்கே
மீட்சிபெறமுன்னடர்த்தவமைச்சன்கண்டே
ராயனைமுன்மிடுக்குடனேபிடித்துத்தாளி
ணீட்சிபெறுநிகளம்பெய்தென்றுநீங்கா
நெடுஞ்சிறையிலிட்டவற்குநிகரினண்பாய்
மாட்சிபெறமுன்னிருந்தோர்தமையும்வாளா
லூனம்போனபடியொறுத்துமறத்தின்மற்றும். (சுந)

வந்தவருக்கனவரதம்வரையாதீயு
ணைந்தருவின்வயங்கமரர்வளநாடென்னச்
சந்தநறும்பொழிலெங்கும்பொதுளவோங்குந்
தண்டமிழைத்தந்தருண்மாமுனிவன்வாழுங்
கந்தரங்கள்சூடியகலாப்பொருப்பின்மீது
கவின்பெருகுநாடெங்குங்களிப்பிற்சென்று
பிந்தியவனீட்டியபொற்குவியலெம்மாற்
பேசலுறுந்திறத்தனவோபெரிதும்பாவம். (சுச)

வேறு.

மற்றுமந்தமறம்படுமிலேச்சனுஞ்
சுற்றும்வாகினிசூழவெழுந்துபோந்
துற்றசெல்வமுறுங்களிக்கோட்டையைப்
பற்றவந்தப்பரும்பொழிலெய்தினுன். (சுரு)

எய்தவந்தவிறையவனப்பெரும்
பொய்திணிந்ததுருக்கன்பொருபடை
வெய்திருந்தவிதங்கணிற்கண்டினி
யுய்திறம்பிறிதின்றெனவுட்கியே. (சுசு)

சந்திகொள்வதுசந்தமெனத்துணிந்
தந்தவெய்பகையாளியருகெழ
வந்தவன்றனையன்னவன்வாய்மொழி
யந்தமாயறைந்தன்புடனுங்கரோ. (சுஎ)

மாணவிக்கிரமாநினதாட்சியை
யானனீதமிழைக்கிலனுயினு
மானவைந்துநூறுயிரம்பொன்றரின்
சேனையோடகல்வேனெனச்செப்பினுன். (சுஅ)

செப்பவிக்கிரமன்படுசிந்தையி
னுப்பவோர்பகன்மூன்றினளிப்பதா
யப்பெருந்திறலானவன்றன்னையோர்
திப்பியம்படுகோயிலிற்சேர்த்தியே. (சுசு)

காவலிட்டதுகண்டவன்மூன்றுநா
ளோவவப்பொனுதவுந்திறனிலான்
பாவியாரும்பணிந்துயுங்கோயிலின்
வாயிருள்செறித்தூடுவலிந்துளம். (௭0)

மூளுதீயினைமூட்டிடக்கோயிலு
நீளுதீயினெரியகிருபனு
மாளுமாருயிர்நீங்கினனென்றுறின்
ருளுவார்களோதம்முயிர்மானிகள். (௭௧)

அள்ளுறுவதைதயைதருஞ்சிக்கெனக்
கொள்ளுறுவயங்கள்ளியென்கோட்டையை
யெள்ளுறுதமைசூரினிறையவன்
விள்ளுறுதவிலோதனநாட்டியே. (௭௨)

சிதிலமாயவச்சேணரண்டன்னையு
மதிவினேதமுறும்வணமாக்கியே
மதிசிறந்தவோர்மைந்துடையானையங்
கிதமுறும்படியாளவியற்றினன். (௭௩)

வேறு

அங்கவனிற்கவரங்கநகர்க்கட்
டங்கியவிம்மடிகிட்டினன்றனு
மிங்கிறுமின்பமிகந்தழிவின்று
யங்குறுமின்பமவாவியகன்றன். (௭௪)

அம்மலையாளமடைந்ததுருக்கன்
செம்மலுமாலடிசேர்ந்ததுகேளா
விம்மினனுள்ளம்விழுந்துபுரண்டே
மம்மரின்வாய்திறவாவிரங்குற்றன். (௭௫)

மற்றுமனந்தெளிவுற்றுமரங்க
முற்றவமைச்சனுக்கோலைவிடுத்தான்
கொற்றவன்வீடதுகூடியகன்மம
பொற்றிரள்கொண்டுபுரிந்துநெறிக்கண். (௭௬)

காவலனுக்கிளையாளதுகாளை
மேவிடமௌலிமிலைச்சிநகர்க்கண்
யாவரினும்புரையாகுதலின்றி
நீவிழிகொண்டுநிகழ்த்துதியென்று. (எஎ)

கண்டதமைச்சனுங்காவலனன்பிற்
கொண்டவர்தம்முளுமுந்தியகோதைக்
கொண்டிறலைதரிஞேலையைநீட்ட
வண்டணிகோதைபடித்ததுவாங்கி. (எஅ)

பொற்கலைபோகியபூம்பிணையென்ன
வற்பினமுங்கினளாவிவனெந்தங்
கற்பகமொன்றியகாவலளிக்க
முற்பவமுண்டுகொலோவெனமுன்னி. (எகூ)

வஞ்சகனுயதுருக்கன்வரைந்த
வஞ்சினவேளையுமவ்வணமாற்றி
நஞ்சனெனுந்நரபாலன்மகற்கே
யெஞ்சலிலென்மணிமௌலிபுனைந்தாள். (அ0)

இம்மடி கிருஷ்ணராயச் சருக்கம்

முற்றிற்று.

ஆக, செய்யுள்—௫சகூ

பன்னிரண்டாவது

நஞ்சராசவுடையார் சருக்கம்.

வாகைசேர்கிருட்டினனொருமுப்பதுவருடமிப்புவியாண்டு
பாகையேன்மொழித்திருமணாளன்வளர்பரம்பதமினிதேற
வோகைசேருரநஞ்சராசுடையன்பின்னொளிர்முடிபுனைந்தாளத்
தீகையார்துருக்கனும்பினும்பகைத்திரடெறவமர்செயவெண்ணி. (க)

பல்லியங்களுந்தெழித்திடப்பகரரும்படையொடுபடர்ந்தேகி
மல்லலந்திணிதோண்மராடர்க்கிறைமாதவராயன்றன்
சொல்லருந்திறற்சேனையோடிரும்பகற்சூழருஞ்சமராடி
வல்லியம்பலவயத்திரள்வாட்டியவகையெனப்படவாட்டி. (உ)

அன்னநாடெலாங்கொள்ளைகொண்டடன்முரசறைதரமீண்டேகிப்
பொன்னுநாடெலாம்பொலிதரும்புகழூபல்லாரியைப்பொருதூக்கித்
தன்னதாகவத்தடமதிற்புரியையுந்தானிழைத்தகன்றாகாத்
துன்னுமாவிழைந்தேகினன்றுருக்கர்களளப்பிலர்துதைந்தேக. (ந)

பொற்புறுந்திருப்பொலியும்பூணநகர்போற்றுறவினிதாளு
மற்பெரும்புயமாதவராயனுமனக்கொதிப்பொடுதானை
யற்பணுகுமத்துருக்கனையடர்க்கெனவறைதலுமளப்பில்லா
வெற்பெனுங்கரித்திரணிறைதானைகளெழுந்தனவிறலோடும். (ச)

சேதியன்னதுசெவியுறத்துனைவினிற்செழிப்புடைத்தனதூரைப்
போதுநாமெனப்போதருநெறியினிற்றுங்கபத்திரையென்னும்
பாதகங்களைக்கழுவுமின்பயநதிகரைமிசைபுரண்டோடக்
கேதமோடவன்வெருவினன்கடந்தெழுங்கெதிசிறிதுணராதான். (ரு)

நன்றெனத்துணிந்துளமுடனாரணனவிலரும்வலமாதை
மன்றனுறிரும்புனனதிமங்கையுமனமுறநினைந்தேத்திக்
குன்றுநேரிருகிம்புரிக்கோட்டுடன்குலவுமோர்களிற்றின்மீ
தொன்றுபொன்மணிச்சுடர்விடம்பாரியினூக்கமோடிவர்ந்தன்றே.

முந்தியுந்தியிற்றுணிவுகொண்டிழிதலுமுரண்பெருநிருஞ்சேனை
பிந்தியென்னுடன்படர்கெனவழங்கியப்பெருநதிபெருமாளின்
சந்தமார்திருவுளத்தினத்தகையனுற்றரணியிற்பலவாய
விந்தையாகலுமிருந்ததிற்சமழ்ப்புடன்விட்டதுவழியம்மா. (எ)

தானுமெண்ணருந்தானையுஞ்சிறிதெனுந்தவறுறுதகைத்தாண்டிப்
போனதும்பெருவருபுனல்பொங்கிமற்றிருகரைமிசைபோக
நானிலங்களுநடுங்குறப்பின்வருநண்ணலர்படைவீர
ரானவித்திறங்கண்டதிசயித்துடன்மீண்டனரவரூர்க்கே. (அ)

தீர்கிலாதநெஞ்சிற்கருந்தெய்வமேகதியெனப்புகல்வண்ணம்
பேர்குலாவுமப்பெருமிடுக்குடையனப்பெருகுறுநதிதன்னை
யேர்குலாவுபன்மணிப்பணிதுணிமுதலிட்டிருகரங்கூப்பி
நீர்துலாவியபுகழினைப்பரவிமீண்டெழுந்தனனெடிதென்ப. (கூ)

நஞ்சராசனும்வருடமோர்நான்கிருந்தவனியினலநீத்தே
யஞ்சொலாரரம்பையர்முகிழ்நகிலமேயார்தரவவணைக
னெஞ்சினுனினைந்தைதருமிம்மடிகிருட்டினநிருபன்சே
யஞ்சுறுமலைச்சாமராயன்றனக்கணிமுடிபுனைந்தானே. (க0)

நஞ்சராசவுடையார் சருக்கம்

முற்றிற்று.

ஆக, செய்யுள்—நிறுகூ.

பதின்மூன்றாவது

பெட்டசாமராசவுடையார் சருக்கம்.

தினஞ்சிலகழிந்தபின்னர்த்திருமலிமராடமன்னன்
கனஞ்செறியரங்கந்தன்னைக்கைக்கொளக்கருதிப்போரின்
மனஞ்சலிப்புறுதலில்லாவாகினிப்பரவைநாப்பண்
வனஞ்செறிதுளபமேலைக்கோட்டைவாய்வந்திறுத்தான். (௧)

திரியம்பகனும்போர்வேட்டுத்திறல்படைவெழுந்தமாற்ற
மெரியும்புண்ணிடையிற்காய்ந்தவேனுழைந்தென்னக்கேளாப்
பரியும்பல்பதாதிவெள்ளம்பகருதற்கரியசூழக்
கிரியுங்கண்டயருந்தோளவ்வைதருங்கிளர்ந்துசென்றான். (௨)

சேறலுமிருவர்தானைவெள்ளமுஞ்செருக்கிற்பொங்கிச்
சீறுபுபரவையொன்றினென்றுசெய்செருவேமானக்
கூறருமமரிழைக்கநெடும்பகல்வடபாற்கோமா
னூறியவிழுமியோரினுளைபலசெவிகளொன்றில். (௩)

சேரலாரிகலினெய்தசிறுவெடிக்குழையின்தூண்டு
கூரநோய்கொடிதுவீழக்கொலைபுரிமறலியென்ன
நேரலார்குலங்களியாவுநீறுபட்டொழியப்பொங்கிச்
சூரநாந்தகத்தின்வீட்டிக்குவித்தனன்குணபக்கும்பர். (௪)

ஆயிடைத்துருக்கவீரனகன்படைக்கிடையிற்சேர்த்து
மேயவெவ்வெடிமருந்துக்குவியலிற்புலிங்கம்வந்து
பாயவேயெவருங்காணாதவுடன்பற்றிச்சூழத்
தீயினையிறைப்பத்தீந்தாரெஞ்சியதிறத்தின்மிக்கார். (௫)

நெறியலாநெறியிற்சேர்த்தநீணிதியழிவதேபோற்
பொறியிலார்துருக்கன்சேனையாவையுமவியப்புந்தி
மறுகிமாழ்ந்தெஞ்சிநின்றமறவர்கள்சிலரின்மீண்டு
சிறுகுறுச்செல்வம்வாய்ந்தபட்டணஞ்செறியச்சென்றான். (௬)

புகழ்பெறும்பூணுமன்னன்போயவற்ருெடர்ந்துபோகி
மகிழ்பெறுமரங்கபட்டணந்தனைவளையவைத
ரகழ்பெறுமரணஞ்சூழுமப்பெரும்படையினேடு
மிகழ்பெருதிரண்டுதிங்களென்றடர்த்திரியச்செய்தான். (௭)

ஓடியபகைவர்மைசூர்க்கொன்றியவுலகமெங்கும்
கூடியபொருள்களெல்லாங்கொள்ளைகொண்டுறவன்ஞர்க்கு
நேடியநுகர்வவெல்லாநேர்ந்தளப்பரியசேனை
நீடியபுகழ்சேர்பூணுநின்றெழுந்தனகண்மாதோ. (௮)

தெரிவுறுவதனையைதர்திப்புவென்மகனையந்தத்
தரியலார்படையைவந்துதம்மினந்தனையுமுன்னே
முரிதரமுனைந்துதுய்த்தற்குளவெலாமுகந்துகொண்டு
வருதியென்றடலார்பல்லவாகினியுடனேவிட்டான். (௯)

தென்னிலங்கையர்தங்கோமான்றிறன்மகனனையவன்ஞன்
பன்னரும்படையினேகிப்படர்தருநெறியினந்த
வொன்னலருடையத்தாக்கியுவருழையிருந்தயாவுங்
கன்னவிறிரடோளார்ந்தவயங்கொடுகவர்ந்துமீண்டான். (௧௦)

மீண்டவன்கவர்ந்தமுற்றும்விலைப்படுத்தடைந்தபொன்னைப்
பாண்டிலிற்கொணர்ந்துதந்தைக்களித்திடான்பகராதொன்று
மீண்டினிதிருத்தலோடுமிவன்கரவறிந்தவன்ஞன்
மூண்டிடுசினத்தினந்தமுழுமகன்முகத்தைக்காணு. (௧௧)

தன்னமுமறிவொன்றில்லாய்தரணிபர்நெறியுந்தேருய்
மன்னவன்பொருளுந்தெய்வமன்னியபொருளும்வவ்வு
நன்னயமுணரான்வீழுநரகிடையெனலும்பாராய்
பன்னருங்கலைகள்கற்றுங்கரந்தனையரசன்பங்கை. (௧௨)

ஆதலானதற்குத்தண்டமளித்தியைந்திலக்கமென்ஞக்
காதலாமெனவும்பாராதிறுத்தனன்கறுத்துமற்றுந்
தீதெலாமிதரர்தேயத்திழைத்திடுமவர்க்குந்தம்முட்
கோதெலாமுணர்ந்துநீதியிழைத்திடுங்குணமுண்டன்றே. (௧௩)

ஆனியஞ்சிலவாங்கேககவரம்பையரனையதீஞ்சொன்
மானினமருளுங்கண்ணார்மலிதரும்பூணுவாண்ட
கோனெழிற்சீமந்தன்மாதவராயன்றுறக்கங்கூடத்
தேனிமிர்தெரியனாராய்ணனெனுமவற்குப்பின்னோன். (௧௪)

செய்யகோலதனையேன்றுதிகிரியைச்செலுத்தச்சின்னாள்
வெய்யவன்சிறியதந்தைவிரகினினிரகுநாத
னையகோவவனைக்கொன்றவ்வாட்சியையடித்துக்கொண்டான்
மையல்சேர்மனத்தினார்க்குநீதியுமணப்பதுண்டோ. (௧௫)

கோலதுபுதிதுகொண்டகொற்றவனிரகுநாதன்
மாலதினரங்கம்வெல்லுமனத்தனாயிருத்தல்கேட்ட
மேலதேதுணியுமுள்ளத்துருக்கனுமிடுக்கனந்த
வேலதுவிளங்குங்கையன்சந்தியைவிரும்பியாங்கே. (௧௬)

முற்றுறவினைகளெண்ணுமுரண்படுமிராமராயன்
மற்றொருவேங்கடையனெனுமிந்தமதிவலோரைக்
கொற்றவெம்படைகள்கூடப்போதரப்படர்கவென்னா
வுற்றதையுரைத்துவிட்டானவர்களுமுவந்துசென்றார். (௧௭)

சென்றவர்மிலேச்சவீரன்செப்பியதியம்பக்கேட்ட
வன்றிறன்மராடமன்னன்வகையுறத்தெருண்டாராய்ந்து
துன்றியதுரிதமைந்துந்தொலைவுறுங்கிருட்டினைக்குத்
தென்றிருக்கரையின்காறுந்திகழ்பெரும்புவிகளெல்லாம். (௧௮)

மாதவனவதரித்தமகிமைசேர்மரபின்வந்த
கோதறுமைசூர்க்கோமான்கொண்டுதன்கவிகைநீழ
லாதரம்பெருகவாள்கவமையமெற்கடையவாங்கே
மோதுபோர்த்துணையுஞ்செய்கவென்றொருமுடங்கறீட்டி. (௧௯

வந்தவர்கரத்திலீந்துவரிசையுமுகமனோடு
தந்தனனதிகம்போக்கத்தடங்கொளாவவருமீளக்
கொந்தலர்த்தொடையானந்தக்கொற்றவன்குளிர்ப்பினுள்ள
மிந்திரனெனவேயெண்ணியிருந்தனன்புரந்தானென்ப. (௨0)

வேறு.

கூடப்பிறந்தகுரவன்மகன்றன்னைக்கொன்ற
நாடற்கரியநரகிற்குளவந்தவெய்யோ
னீடெற்குளாராரெனவெண்ணியிருத்தலோடும்
பீடற்றவன்கோலிழந்திட்டதும்பேசுகிற்பாம். (உ௧)

நாராயணன்முன்னிவனுனுயிர்நீத்தநாளி
லேலாரவனில்லவளின்கருவெய்திநின்ற
சீரலதன்பின்றிகழ்சீவகன்றாயினல்ல
நீராரொருதிண்புயமைந்தனைநேர்ந்துயிர்த்தாள். (உ௨)

கோலப்பெருக்கற்குறுகோட்டியிற்கூர்ந்தநல்ல
சீலச்செருக்கார்சிலதிண்ணியர்சேர்ந்தன்றந்தக்
கோலக்குழந்தைக்கெழின்மாதவராயனென்று
மேலுற்றநாமகரணங்களிமிக்கிழைத்தே. உ௩)

காத்தற்குரியகணையாழியைக்கையிலிட்டா
ரேத்தற்குரியவிறைவன்னிவனென்றுசெப்பி
மூத்துப்பதினெண்வயதின்முடிசூடுகாறும்
பார்த்தற்குரியபதிகாணபணீசனென்றார். (உ௪)

கண்டானதையக்கடுங்கண்ணனுமுட்கியூனை
விண்டானடைந்தான்விதிர்ப்போடுபம்பாயிதன்னைக்
கொண்டான்பகையூரவரோடுடன்கூர்ந்தநாச
முண்டானுலகினெவனுகினுமுண்மையன்றே. (உ௫)

பூவிற்பொலிந்தவயமன்னியபோர்வலர்க்குண்
மேவிச்சிறந்தானிவனும்மெனமெச்சலாய
தாவிப்படுக்குந்தறுகட்புலியன்னவைதர்
பாவிக்கவிந்தவகைநாடுகேள்பண்பினீட்டி. (உ௬)

பல்லாரிகுத்தியுழையும்வயம்பற்றவெய்தி
மல்லாடியந்தக்குறுமன்னருமங்கவாட்டி
யெல்லாந்தனதுவயங்கொண்டனனெய்தியூனைப்
பொல்லாக்குடகுக்கெழுந்தானுடன்போனாவேட்டு. (உ௭)

போயங்குடற் றும்பொழுதிங்கரங்கத்திஞென்னுர்
மாயும்படிக்காமருந்தீட்டியசாலையூடு
தீயின்புலிங்கந்தெரியாதுவிழுந்துபற்றச்
சாயும்படியூர்ச்சனமெங்கணுமாண்டதன்றே. (உஅ)

முன்னுளிலங்கைமுழுதும்மெரியிட்டெரித்த
பொன்னுரரங்கன்றிருக்கோயிலும்போகத்தன்னஞ்
சொன்னுரிதனைக்குடகுற்றவன்சொல்லக்கேளா
வென்னுவிஃதோர்விபரீதமென்றேங்கிமற்றும். (உகூ)

போகுற்றவெல்லாம்பொருளொன்றெனப்புந்தியுள்ளே
ஞகத்தறிந்துதுயில்கூர்தருநாரணன்றன்
சேகுற்றபொன்னினிலயம்படுதீக்குளாய
பாகத்தையுன்னிற்பதைக்கின்றதென்சிந்தைமன்னே. (௩0)

கேளாயமைச்சவதனுெருதிங்கடன்னுட்
கோளாரரங்கன்றிருக்கோயிலைக்கூர்ந்தபொன்னின்
மீளாவனைந்தெற்குடன்மீண்டுவிளம்புகென்னுத்
தாளாளனிந்தவிதந்தீட்டுபுதான்விடுத்தான். (௩க)

கண்டந்தமோலைகருதுந்தொழிலாளரீண்டிப்
பண்டங்கதிர்மாமணியுங்கொடுபோங்கின்முன்னி
ஞெண்டும்படியேயரொருதிங்களின்முற்றுவித்தா
ரெண்டங்குசெல்வர்க்கெதுதானரிதாகுமீங்கே. (௩உ)

கோயிற்பணிமுற்றியதென்றவன்கூறக்கேட்டுச்
சேயக்குடகைவயங்கொண்டனன்சென்றரங்க
நேயத்தினெம்மானிலயத்தழகம்பகங்கண்
டேயப்புரிந்துதிகழ்கின்றதென்றின்பமுற்ருன். (௩௩)

பின்னேசிலநாட்செலப்பெட்டதசாமராயன்
மன்னேயொருமூன்றிரண்டாண்டுமகிழ்ந்துகாத்தே
யென்னேயிகவின்பெனக்கைத்திதைவிண்டெழுந்தான்
பொன்னேபொலியும்பொருவற்றதுறக்கமென்ப. (௩௪)

பெட்டசாமராசவுடையார் சருக்கம்

முற்றிற்று.

ஆக, செய்யுள்—ருகூரு.

பதினான்காவது

காலாசாமராசவுடையார் சருக்கம்.

சேணெறிநடப்பவரடிக்கடிசிறந்த
வூணயில்வதொத்தயர்வொழித்திடவும்பர்
காணரியநின்னடிகருத்திடைநினைந்திந்
நாணிலியிதைப்புரிவனுகவிணையிணைந்தோய். (க)

உம்பருலகெய்தியவற்கொண்புதல்வனின்றால்
வெம்பியிரண்டாவதுகிருட்டினனைவேட்டா
டம்பெரியசுற்றமுதிதந்தவிருமைந்த
ரம்பொன்முடிசூடுவதற்காயவரென்றுன்னு. (உ)

அந்தயவனற்கஃதியம்புதலுமன்னு
னெந்தமனை யயிவர்களிப்பெரியவாட்சிக்
கந்தமுளமைந்தரலராகையினுமக்குச்
சொந்தமுளசுற்றமினும்வேறுபலவுண்டே. (௩)

பனிவரையுமுக்கடலுஞ்சூழுமிருபார்மே
னனிவளருநாடுபுகழ்நின்மரபொன்றன்றோ
முனிவருமிம்மூத்தழகின்முழுமகருமிந்தத்
தனியரசுதாங்குதகைதாமுடையர்கொல்லோ. (௪)

அம்புவியளிக்கும்மனையேயரசசின்னம்
பம்பரியபண்புடையவேறுமகவொன்றை
நும்பணியிடுடுவெனென்றவனுவன்றான்
வெம்பியுளமன்னவனின்னிட்டமெனவிட்டாள். (௫)

அந்தநிருபர்க்குமுறையாயவர்களாருந்
தந்தமகவைக்கொணர்கதன்னுழைமெனக்கண்
டிந்தமுறியென்றவன்வரைந்துசெலவிட்டான்
வந்தனர்களந்தவணம்வாழுமகவோடும். (௬)

அரசமுறையின்றொழில்களாற்றுபவராரு
நிரைநிரைநிறைந்தவவையின்கணொருபாலி
னுருசிபெறுமொண்பழனுமற்றொருமருங்கின்
விரைசெய்மலர்மாலைதிகழ்வில்லெறிமணிப்பூண். (எ)

கூரியகொடும்படைகளினுமொருகோட்டிற்
சீரியதின்பண்டவகைசேரமறுபாலிற்
காரியமுணர்ந்தவைகவின்பெறவமைத்தே
யேரியல்சிறாரவரையின்புறவழைத்தே. (அ)

கண்மணிகளேநுமகருத்துறுமவற்றை
யண்மியெடுமின்களெனவச்சிறுவர்முன்னைப்
புண்ணியமிருந்தபடிபோயவரெடுத்தா
ரொண்முனையவாயுதமொழிந்தனவிழைந்தே. (கூ)

அச்சிறுவர்கட்குளுமுவாட்டைமகவொன்று
நச்சரவெனக்குலவுநாமவேலெடுக்க
விச்சையினெழுந்தவணிருந்தவர்கள்காண
விச்சிறுவனேயிறைவனென்றுரைவழங்கி. (க0)

மேதினிமனற்குரியமேன்மையுடனந்த
வேதிகொளுஞ்சாமராயனென்னரசமைந்தற்
காதரவினுடகமணித்தவிசிருத்தி
நாதனினிநீயேயெனநன்முடிகவித்தான். (கக)

இன்னணமவன்கரவடத்தினிகழ்வெல்லாங்
கொன்னவிலுங்கூரவிழிமன்னியகங்கூற
வன்னவளகத்துனியினுமெனவிருந்தா
ளென்னகதிகள்வரகஞ்சிக்கியவெவர்க்கும். (கஉ)

வேறு.

இலக்குமியென்றிசைக்கனுறுமரசியெணக்கெதிராயவ்
வாறேயன்னன்
விலக்கியரசளிக்கனுறும்விறல்வயதேமுன்னுடைய
வேந்தர்தங்கள்
குலக்குமரர்களைமகராய்க்கொள்ளுதலைக்குழந்தையொன்றை
நிருபன்காணென்
றலக்கணுறக்கொன்னேசெய்தரசதலமழுங்கும்வண
மடங்கச்செய்தான். (கங)

நாடாளுந்தன்மையெலாமேற்கொண்டானரபாலர்க்
குரியசுற்றம்
வாடாதவகையாரும்வனைந்தவதிகாரமெலாம்
வாங்கியன்னர்க்
கீடாகத்தம்மவருக்கீந்தரியசிட்டரெலா
மிணைந்துசாம்பிக்
காடாளுங்கதியிதனிற்கனம்பெருகுமின்பமெனக்
கலங்கச்செய்தான். (௧௪)

கண்ணறையனுமந்தக்கண்டகனுற்கருவலையிற்
சிமிழ்ப்புண்டேங்கு
நண்ணரியபிணையென்னநரபாலனுயகியுண்
ணலிவானெய்த்தித்
தண்ணளியோசிறிதுமிலாத்தறுகண்ணாளன்கடையே
தவிக்கும்வாழ்வின்
வெண்ணிலவுமுகத்தினரைவேண்டியவர்விறலாலிப்
பகையைவீட்டி. (௧௫)

அறம்பெருகுமவர்குடைக்கீழடங்கியெனுமளிப்பதுவே
யமையுங்கோடி.
மறம்பெருகுமிவன்செருக்காமரங்கொல்லும்வாளவரே
மற்றிங்கென்னுத்
திறம்பெருகுந்திருமலைராயர்நாராயணராய
ரென்றேசெப்பு
நிறம்பெருகும்பாகவதர்தமைமறைவினின்றழையா
நிகழ்த்திவிட்டாள். (௧௬)

அய்யங்காராமவர்களரசிவரைந்தளித்தமுடங்
கலுடன்போகி
வையங்காவல்புரிவோர்வாழ்வனப்பார்செஞ்ஜிபுரி
வல்லேயேகிச்
செய்புங்காரியதரிசிவெண்முகத்தோராளுகைக்குச்
சிறந்தோன்றன்பா
னையுங்காவலன்மனைவிநவின்றதையுநவில்குற்று
ரெழுத்துந்தந்தே. (௧௭)

TAMIL NADU ARCHIVES LIBRARY
108798

தாளாளரெனவுலகந்தான்புகழத்தரியலரைத்
தகையால்வென்று
கோளாருந்திரைவரைப்பெங்கணுநுந்தங்கொடியாடக்
குலவும்வீர
வாளாலேவலியடக்கிவாழ்ந்தவெமதரசரது
மரபும்பாழ்க்க
நாளாலேநலிவுறுத்திநரபாலன்மனைவிமுதற்
றமமரையெல்லாம். (௧௮)

கடுஞ்சிறையிலிட்டவரைக்கையறியாக்கையனவன்
காத்தற்காய
திடஞ்செறியுநிருபனுமிற்றன்பகடுநிகழாதென்
றுணர்ந்துதேறி
மடஞ்செறியுமகவொன்றைமன்னனெனவறிதமைத்து
மழையின்மாறு
நடஞ்செறியும்பொழின்முழுதுநமதென்றேயெண்ணியற
நலிவிக்கின்றான். (௧௯)

பேரோதைவாரிதிசூழ்வையமெலாம்பெரிதளிக்கு
மாழிக்கோமா
னோராதேயுயிர்களெலாநலிவுறுத்துங்குறும்பர்தமை
யொறுத்தற்குள்ள
வீரானேயத்தகையநீவிரெமைநெருக்குமந்தத்
துருக்கன்றன்னைப்
போரானேபொருதொழித்தெம்பொன்னாடுமின்னுயிரும்
போற்றுகென்றார். (௨0)

வேதியரின்வாய்மொழியும்வேந்தன்மனையாணிருப
மதையுங்காணு
வாதரவின்மனமுருகியவ்வூணனலமரன்மி
னன்னன்வேரின்
மேதினிவிண்டந்தகனுக்கிரையாணுமெனத்துணிமின்
மிகைசேரிந்தச்
சேதியெமதிறைவர்க்குச்சீமைதனக்கிப்பொழுதே
தெரிக்காநின்றேன், (௨௧)

அந்தணர்காடிருமுகமங்கிருந்துவருமளவுந்தண்
டலைசூழ்தஞ்சை
சந்தமுறப்புரக்குமனன்றன்னுழைநீருறைகவெனத்
தகவிற்போக்கிக்
கந்தமலர்க்குழலரையன்காதலிக்குங்கடுஞ்சிறைநீர்
கடிதின்விண்டீர்
நுந்தெவ்வனினிமூலத்தொடுமுடிந்தானெனப்பினென
வரைந்தும்விட்டான். (உ௨)

வேறு.

இங்கெறுழ்வலியினைதரிணையறும்படைகளோடுங்
கங்கறுதிருவினைந்துங்கடப்பையையடர்க்கப்போந்து
பொங்குறுமரணைச்சூழப்புரந்திடுந்துருக்கனுங்கே
கங்குலிற்கலங்கிமற்றுங்கருதினனிழைப்பாலென்றை. (உ௩)

காலனூர்தூதரொத்துக்கண்டவர்கலங்கக்கையின்
வேலினர்விறலின்மிக்கநூறுபப்பரர்கடம்மை
மாலினலுறங்குமைதரல்லியைமறைவினெய்தி
வாளினற்சிரத்தைக்கொய்துவம்மினென்றியம்பிவிட்டான். ()

குய்யமாயவருமெய்திநள்ளிருட்பொழுதிற்கோமான்
செய்புநித்திரைவெண்சிலைமாடத்தைச்சூழ்ந்துகாக்கும்
வெய்யவர்சிரத்தைக்கொய்துவிரகுடன்புகுதல்காணு
வொய்யெனவொருவனோடியைதரையுணர்த்திச்சொன்னான். ()

சூட்சியிற்சொல்லக்கேட்டதுருக்கனுமமளிதன்னி
னீட்சியார்பரியதிண்டைநேர்படவமைத்துமீதின்
மாட்சியார்போர்வையொன்றுன்மறைத்தனனகன்றுபோகித்
தாட்சியிற்றனைவேந்தனொருவனதகத்தைச்சார்ந்தான். (உ௬)

அவணயர்ந்துறங்குஞ்சூரரனேகரையுணர்த்தியந்த
யவனனைப்பிணித்துவம்மினென்றழன்றறைந்துபோக்க
வவர்களும்விரைவினெய்தியத்தலையணையைச்சீறி
யவிர்தரும்படையிற்றுண்டமயர்தருமவரைச்சூழ்ந்தார். (உ௭)

பொள்ளெனப்புலியனேகம்வளைந்ததுபுரையச்சூழ்ந்தக்
கள்ளரைக்கடும்பொன்வெய்யதொடர்கொடுபிணித்துக்கையை
யெள்ளருஞ்சிறையிலிட்டாரேழ்பரியிணையுந்தேரோன்
வள்ளவாய்மலர்வாய்விள்ளவந்தனன்றுணக்கின்மாதோ. (உ௮)

வைகறைவரலும்வள்வார்முரசொலிகறங்கமள்ளர்
கைகளிலொளிரும்வாளைக்கறங்கெனச்சுழற்றியார்க்கப்
பைகவின்பரவச்சிறும்பணியெனவெழுந்தவைதர்
கைகளுங்காலுங்கொய்துகள்ளரையொறுத்துமற்றும். (உ௯)

ஆடியசமரம்பொங்கித்துவக்கலுமமரினேற்ற
கூடலார்குருதிபாசங்கூட்டுணத்தகர்த்துக்கொன்று
நாடதுதனமேதயாகநகரையும்வயங்கொண்டந்தப்
பாடுறுக்கடப்பைபாண்டபதியையுங்கரத்திற்பற்றி. (௩0)

தாரபுத்திரர்களோடுந்தவலருஞ்சிறையிற்சிக்குண்
டூரகஞ்செறியப்போக்கியுவனரண்மனையுண்மிக்க [னர்
சீருறும்பொருள்கண்முற்றுந்திரட்டிக்கொண்டெழுந்தான்முன்
னேருறுந்திறைபைநேராநீரகினிகழ்ந்ததீதே. (௩௧)

அவுணரிலடன்மிக்கார்ந்தமகிடனன்றழகிற்செய்த
துவரிதழிடையுடுக்கைத்தோகையர்துதையுமைசூ
ரவிரரண்புரிசைதன்னையம்பரந்தடவமாடி
யுவரியைநிகர்ப்பப்பாங்கராழ்கிடங்ககழ்ந்தானேர்ந்தே. (௩௨)

பையராவணையிற்றுஞ்சும்பரமனதாங்கஞ்சூழு
மையறுதுறங்குமிஞ்சிமாணரணகலப்பின்னும்
வையமீதத்தற்குநேரின்றென்றினும்வழங்கவங்கு
மையலார்களிற்றுக்கொப்பான்மகிழ்தரப்பொலியச்செய்தான்.

பட்டணமருங்கிற்கீழ்பால்பகர்தருங்கஞ்சமென்று
கட்டழகுடையமாடநிரைபலகலந்தகன்ற
மட்டறும்வளத்திற்செல்வர்மகிழ்வுடன்வதியும்பேட்டை
கட்டினனருகிற்பாயுங்காவிரிக்கிடையின்மாதோ. (௩௪)

நந்தனவனமுநாணுநலத்தமேதோர் தரியாதெளலத்
தென்றினுமுலகஞ்செப்புமிரும்பொழிலிழைத்தானந்தச்
சந்தமர்பொழிலினூடுநிரல்படவடர்ந்தசாகிப்
பந்தியின்பகடுநன்குபகருதற்கெளிதோவம்மா. (௩௫)

ஒவ்வொருபொழிலின்கண்ணுமுள்ளகோடரமுமாங்கே
யொவ்வொருசாதிக்கண்ணுமுள்ளபாதவமுமாங்கே
யொவ்வொருபரிமளத்தோடுள்ளவந்தருவுமாங்கே
யொவ்வொருநிறத்திற்றண்ணென்றுள்ளவின்செடியுமாங்கே.

நாகமெத்துணையநாறுநரந்தமெத்துணையவாழ
சோகமெத்துணையகோங்கந்துணர்த்தவெத்துணையவோங்கும்
பூகமெத்துணையமாகந்தங்களெத்துணையபூத்த
சாகமெத்துணையவாங்கேயோளியிற்றழைத்தவம்மா. (௩எ)

சாலமேதழைத்தவின்றமாலமேகமழுங்காந்தள்
கோலமார்குரவந்தெங்குகுளிர்நிழலுதவும்புன்க
மேலமந்தாரம்வாசமெறியுஞ்சண்பகங்கள்சாந்தந்
தாலமின்னனதழைத்துத்தகையுறப்பொதுளுமாங்கே. (௩அ)

ஆதவன்கரங்கடீண்டாவதலடித்தலங்களெங்கு
மேதகுநிறமைந்தானுமிளிர்தருமலர்கள்வீழ்ந்து
காதமேகமழும்வண்ணம்வேறுவேறகக்காண்டல்
காதலைவிளைக்குங்காணினைந்தையுங்களைந்தார்மாட்டும். (௩௯)

ஆளியாயமருமாங்கணறைவருமகமமெல்லாம்
வாளைநேர்விழியார்கொங்கைமானுசெவ்விளநீரன்றி
நாளுமான்கறந்தபாலுநாகிளவெருமைமோரும்
வேளையிற்சொரிந்துநாளும்விழுத்தகச்செழிக்குமாதோ. (௪0)

தண்டலையதனினென்றுந்தவிருறுப்பழுத்துவீழு
மொண்டிருக்கனிமூன்றின்கணூறுமின்னிரதவெள்ளந்
தண்டலிற்றலைப்பெய்தோடுந்தன்மையாற்பொன்னித்தெண்ணீ
ரண்டரினமுதமானுஞ்சுவையினென்றறைவரின்னும். (௪௧)

அத்தகைப்பொழிலினப்பணவனயர்சதனமொன்றின்
சித்திரமெவணுமின்ருஞ்சீர்மையுமெவணுமின்ரும்
வைத்துளபொருள்களாங்குவையகத்தெங்குமின்ரு
நித்தியம்புதிதேயாகநிலவுறுநிதமுங்கண்டும். (௪௨)

வேறு.

இந்தவாறவனேந்தன்மற்
றெந்தநாட்டினுமில்லென
வந்தமாயவனுண்டுபின்
மைந்துறும்படைசூழ்வர. (௪௩)

ஆகையார்க்காடுசென்றவண்
வாகைகொண்டுறமேல்வையி
ஞேகையார்கள்ளிக்கோட்டையார்
தீகையார்செயல்செய்தனர். (௪௪)

அக்குழப்பமடக்குகென்
றெக்கமைந்தனுக்கோதலு
மிக்கதானையினன்னவன்
சிக்கெனப்புறப்பட்டனன். (௪௫)

திப்புவென்றிடுதீரனு
மப்பெருங்களிக்கோட்டையிற்
றுப்பறும்படிதுன்னலர்
செப்பருஞ்சமர்செய்கையில். (௪௬)

பெற்றவன்வெரிநுக்கிடை
யுற்றதோரிரணம்முயிர்
பற்றியல்லதுபோகலாச்
செற்றமுற்றதுசீறியே. (௪௭)

தண்டனைப்பிணிகட்கிறை
சண்டனுகையினப்புணக்
கண்டகன்முதுகார்தரச்
சண்டனேகொலோவேவினன். (௪௮)

ஐதரன்னதறிந்துளம்
வைதமாதவர்சாபமோத்
தெய்திநின்றதிங்கிதெனைச்
செய்தன்மேலினிதெண்ணியே. (சகூ)

பூரணையனேயாதியா
மாருமன்புளநண்பரை
வாருமென்றுவிளித்தரு
கோருமென்றிவையோதுமால். (ருO)

வேறு.

வேறற்கரும்பகைவர்மேதினியிலெத்துணையோர்
சீறிச்செறிதரினுஞ்செய்யேனொருபொருளாக்
கோறற்கொருவிரணங்கூர்ந்தெழுந்ததிங்கிதனை
நூறற்குரானிலனுய்நுவன்றிடுவனுந்தமக்கே. (ருக)

திங்கள்குலத்துதித்துத்திண்மையொடுகாத்தளித்த
தொங்கன்மணிவடமின்றோளழகன்கிட்டினன்முன்
பங்கம்படிந்தலையும்பண்பிலியாமெற்கருளி
யெங்குங்கிடைப்பரியவேற்றமெலாமீந்தனனால். (ருஉ)

எந்நன்றிகுன்றிடினுமிம்மைக்கண்ணேயொருவர்
செய்ந்நன்றிகுன்றுவதுசெம்மையலதென்றுணரா
வந்நன்றிகுன்றுமேயம்மரபிற்கின்றளவு
மந்நன்றுறுமவையேயாற்றியடிமையிழைத்தேன். (ருங)

போருக்கெழுந்துளவென்புத்திரனைப்பொள்ளெனவே
சேரத்திருவரங்கஞ்செப்பியவன்சேர்ந்ததுநான்
சீரிற்புரிந்தவதிகாரமவண்செய்யவிழைத்
தாருக்குமின்புறவேயாய்ந்தொழுகுமாறறைவீர். (ருச)

ஈன்றுனெனநெறியையெண்ணியொழுகாதே
சான்றாரகம்வெதும்பத்தன்மையலதிழைக்கின்
வான்றாவுஞ்சீரழிந்துவந்தவிறைமையும்போ
யான்றாருயிரகலுமாபத்துமார்தருமால். (ருரு)

கையர்கயவர்நடுங்கண்ணர்காமுகர்வெம்
பொய்யர்புரட்டர்புகலுமொழிகேளாமே
செய்யநெறியுணர்ந்துசெய்யுகவென்றெட்டுணையு
மையமிலாதியானுரைத்ததாயமறைமினென்றறையா. (ருசு)

சாலிசகமாயிரத்தேழ்நூற்றைந்திற்றுனரசர்க்
கேலுந்தமர்க்கிடுக்கணைத்துணையன்றிழைத்தனனே
சாலவதினூங்குழந்தச்சாற்றரியபுண்ணினுயிர்
காலனதுகையுறவேவகைகலந்தானவ்வுலகம். (ருஎ)

முன்புகன்றபூரணையன்முன்னுமோரைவரிதை
வன்புமிகுமைந்தனுக்குவழங்கிவரவிடுத்து
மன்பெரியதண்டினிவர்மற்றதுணராமே
யன்புமிகமறைத்தாராங்குமகனேடிவந்தான். (ருஅ)

வந்தமுழுதுவாய்திறவாவார்புனலுங்கண்ணிறைப்ப
நொந்துழையர்நூனெறியினுவலமனந்தெளியா
வந்தமறும்படையாமார்கலியிற்சென்றரங்கந்
கந்தமெழிலால்பாக்கின்கண்மறைத்தானவ்வுடலை. (ருகூ)

பின்னேபெருமகனைக்காணவவன்பெட்பினெடு
முன்னேயுயிர்த்தவனுக்குள்ளமுதன்மையெலா
மன்னேபெருஞ்சிறப்பின்மற்றளிக்கப்பெற்றவனு
நன்னேயமோடிறைவன்றெண்டுசிலநாளிழைத்தான். (சூo)

வேறு.

ஆண்டுதந்தைமுன்னயர்ந்தவண்ணமே
யாண்டமன்னவற்காற்றுந்தொண்டினை
வேண்டிநாள்சிலவிழைவினூற்றிமற்
றீண்டுமூர்க்கரினிதயமாறினன். (சூக)

மாறவன்மனமனுவினூனெறி
கூறுமாறுமுன்குறிக்கொண்டாற்றிய
பேறுவிண்டெதிர்ப்புரியல்பேணினன்
வீறுமுன்வினைவெல்லுவாரெவர். (சூஉ)

சிட்டர்தம்முளஞ்சிதையவெங்கணுந்
துட்டர்தங்களின்றெருகுதிவீறவும்
வட்டவாருலகுள்ளயாவரும்
பட்டதன்மதம்பரிவினூரவும். (சுங)

வற்புறுத்தினனவணங்குகோயில்கட்
கற்பினுற்றுறுஞ்சிறப்பையாதியா
முற்படுந்தொழின்முழுதுநீக்கியே
பொற்பணிகண்முதற்பொருளேவவ்வினன். (சுச)

கோயில்வாயில்கற்கொண்டுமூடினு
னேயதன்மங்களெவையுங்கொன்றருந்
தூயமாமறைத்தொழிலினர்க்குள
வாயமானியம்யாவும்வவ்வினன். (சுரு)

வேறு.

வணங்குறுங்கடவுட்குற்றவரத்தெலாநிறுத்திமன்னர்க்
கிணங்குறுஞ்சுற்றத்தார்க்குமேனையபுலவராதி
குணங்கொளுங்குரவர்கட்குங்கொடுத்துளவருவாயாவு
மணங்குறப்பறித்தன்னுரையகற்றினனயனுடேக. (சுசு)

கட்டமேவளர்ந்துநீளுந்தமரையேகருதிச்சேர்த்தா
ணிட்டமேவரவன்னூர்க்கேதொழிலெலாமியையவீந்தான்
வட்டமேவருவெண்கொற்றக்குடைநிழல்வதிந்துமன்ன
னிட்டவேலைகளையாற்றிவேதனமியைவோர்க்கெல்லாம். (சுஎ)

தவறுறிற்றக்கதண்டந்தானினைந்தியற்றுதன்னூர்
கவலுறக்கைகால்கொய்தானுயிரையுங்கழலச்செய்தா
னெவர்களிக்கவிகைநீழலிருந்தவரெமலோகத்திற்
றவவருந்துபவர்மானத்தவித்திடாதிருந்தாரம்மா. (சுஅ)

ஈங்கறஞ்சிறுகத்தீமையெங்கணும்பெருகவிஞ்சித்
தாங்கரிமணிவில்வீசுந்தமனியத்திழைத்துமற்று
மோங்கியதவிசின்மேவியொருகுடைநிழற்றவெல்லாப்
பாங்குடனிருந்தியானைபார்த்திபனவனிக்கென்றான். (சுகூ)

இன்னணமிவனிருக்கத்திருமலையெனுமையங்கார்
கர்னல்யங்கெனும்பேர்வெள்ளைக்காரர்தண்டினுக்குமன்னன்
றன்னுடன்றலைப்பெய்தந்தத்துருக்கனைத்தகர்த்துக்கொல்வான்
முன்னினன்முகவெண்சேனைமுழுதையுந்திரட்டிச்சென்றே. ()

சந்ததம்விளையுஞ்சாலித்தடவயற்கரூரைத்தாக்கி
வந்திடுயவனர்தம்மைவதைத்தமர்க்களத்துவீழ்த்தி
யந்தவூர்தமையுந்திண்டுக்கல்லையுமடங்கவெய்தித்
தந்திருக்கொடியையோங்கத்தகைபெறவெடுத்துநட்டார். ()

துருக்கரைமுருக்கிக்கொண்டதொல்பதியவற்றிற்கெல்லா
முருக்கிளர்திருமண்சாத்துமுயர்திருமலையையங்கார்
திருக்கிளரரசநீதிதிறம்பிடாதிணைக்கவென்று
பெருக்கமாரதிகாரத்தைப்பெட்புடனளித்தானங்கே. (௭௨)

இத்திறஞ்செவியுற்றந்தவிரும்பெனுமிதயத்திப்பு
வித்தகஞ்செறிந்தவெள்ளைக்காரருக்கிணைந்தாரென்னுக்
குத்திரஞ்செறிந்ததன்னுட்குறிக்கொளுமவரையெல்லாஞ்
சித்திரஞ்செறியச்செய்தவாதையாஞ்செப்பற்பாற்றே. (௭௩)

காய்சினக்களிறுதாளிற்சிலர்சிரமிடறக்கண்டான்
மாய்தரச்சிலரின்மண்டைமிசைவசிகடவிமாய்த்தான்
பாய்தருங்கரும்பொன்முள்ளுட்பம்பியவுருளையூடு
சாய்தரச்சிலரையேற்றியுருட்டினன்சலத்தின்மிக்கான். (௭௪)

அள்ளுறுமவர்க்குநெஞ்சங்குலைகுலைந்தயரவாங்கே
விள்ளருந்தனதுகொள்கைக்கியைந்தனவிருப்பிற்செய்யத்
தெள்ளியவுணர்வினந்தத்திருமலையையங்காரி
னெள்ளருமனுசனாராயணனெனுமெழினமத்தோன். (௭௫)

அப்படுகொலையுண்டார்க்குளொருவனுயகப்பட்டாங்கே
யெப்படிகரந்தானென்றவ்வேதிலார்துருவப்பையத்
தப்பினனகன்றுபோகித்தமையனைக்குறுகியுய்ந்தான்
மைப்புயலரியின்பாதமன்னுவார்க்குறுகணுண்டோ. (௭௬)

நூறுநூறளவாயுள்ளநூறுவாகினியோடன்னுன்
சீறுபுவெழுந்துமங்களுரினைச்செருச்செய்காலை
வீறுறுங்கோயம்புத்தூர்விழுப்பமார்பாலைக்காடு
மூறுறுவூணரீண்டியுடற்றுபுபிடித்துமற்றும். (எஎ)

பொன்னிசூழரங்கபட்டணந்தனைப்பொரவேபோகக்
கொன்னவிலுளத்தானந்தவினைவெலாங்குலையக்கேளா
மின்னுவெண்முகத்தாரோடுமென்மையின்வணங்கிச்சந்தி
மன்னினனினைக்கிற்காலாமதித்திடிற்சிகையாமென்ப. (எஅ)

சந்தியிங்ஙனமிழைத்தசலத்தினன்வெளுத்தாரோடு
மந்திணன்றிருமலாரியன்மிடைந்தலக்கணுற்று
மெந்தமக்கிகலினென்னுவுணர்ந்துணர்ந்தெரிந்துசேந்த
சிந்தையன்விழியனுகிச்சினமிகக்கிளர்ந்துமன்னே. (எகூ)

அவன்றனக்குறவாயுள்ளவனேகரைபெருக்கிவாளா
கவர்ந்தவருடைமையாவுங்காவலனளித்தமுன்ன
மவந்தனினபகரித்தான்மண்டையமெனுமவ்வூரை
யவிந்தகண்ணிருளிற்கஞ்சுமாறுமம்புவியிலுண்டோ. (அ0)

காலதூதரினத்திப்புகழுறியபதகர்போந்து
சேல்விழியரசிதன்னைச்செப்புகமலையன்செய்தி
வாலிதினெனவத்தோகைவாய்மையினவனைக்காணே
னேனுமோவவன்றன்செய்கையெமக்கெனவியம்பியுய்ந்தாள்.

கோறலோர்படிவமெய்திக்குவலயத்தெழுந்தாலன்ன
வாறிலாவவனும்பின்னரத்திருமலையாசானை
நூறுவான்றுருவவந்தநுண்ணறிவினனேர்ந்தஞ்சி
மாறிலாமலாடுசென்றுமறைந்துயிர்பிழைக்கலுற்றான். (அஉ)

கதிபயதிவசமங்குக்கரந்திருந்தனிநேகி
மதிதவழ்குடுமிமாடமலிதிருத்தஞ்சையெய்தி
யதிலுறையிரசிடெண்டுக்கறைந்தனன்றனக்குவாய்ந்த
கதியெலாங்கழறக்கேட்டக்கருணையான்கலங்கியுள்ளம். (அ௩)

படுகொலையுண்டவந்தப்பார்ப்பனச்சிட்டற்குற்ருர்
குடிதனிற்புரப்பாரின்றிக்கோடிலாக்கொடியினெல்கி
யிடருறுமவர்கட்கெல்லாந்திங்களுக்கிருநூருய
சுடர்விடும்பொன்கணல்கச்சொற்றனன்கவனர்க்கன்றே. (அச)

வேறு

வைகலவ்வணஞ்சிலவகலவென்மையு
மெய்கலந்தொளிருணர்வுரனுமேவிய
வைகலந்தொளிருவெண்முகத்தரார்ப்புடன்
பொய்கலந்தவனதுபுரத்தைமுற்றினர். (அரு)

கரைகடந்தார்கலிகலிப்பிற்சூழ்ந்தென
வரைகடந்தோங்கியமதிலைமாற்றல
ருரைகடந்துருமெனவுடற்றச்சூழ்தலுந்
திரைகடந்திலமிஃதெனத்தியங்கியே. (அசு)

சந்துமுன்னிழைத்தபின்றரணித்தேவனு
மந்தவெந்திருமலையையங்காரது
சொந்தமாஞ்சுற்றமேமுதலினோர்களைச்
சிந்திடவுதிரநாஞ்செகுத்ததன்மையால். (அஎ)

மற்றுமவ்வுணர்நம்மகிழுமாட்சியைப்
பற்றியபரப்புறும்படையிற்போந்தனர்
சற்றினியிவருடன்சந்துசெய்கிலா
துற்றிடினுயிர்துறந்தொழிதறிண்ணமே. (அஅ)

எனவவன்றுணிந்துளமினிநும்மாட்டியான்
மனநெருப்படத்தொடர்பிணைந்துவாழுவே
னினிதெனத்தழுவுகென்றியம்பக்கேட்டவர்
நனிவளர்படைக்கிறைநவில்வனீங்கரோ. (அகூ)

கோடியாறஞ்சுபொன்கொடுத்துநின்றிரு
நாடியாநணுகுறப்பகிர்ந்துபாதியை
நீடியாதளித்திடினதுகேண்மையின்
பாடியாம்விழைகுவேமென்னப்பன்னினன். (கூ0)

தீங்கினுக்குறையுளாந்திப்புவம்மொழிக்
காங்கொருப்பட்டுநாடத்தமீந்துபொன்
னீங்குமக்குதவவென்கரத்திலின்மையாற்
பாங்குறும்புதல்வரைப்பரிவிற்கொண்மினே. (சுக)

அத்தொகையனைத்தையுமளித்துமீட்குவேன்
வைத்துநும்வயத்ததுவரைக்குங்காமினென்
றெத்திருமகாரையுமொருப்பட்டீந்தனன்
வித்தகவிதியினைவிலக்கற்பாலரார். (சுஉ)

எழுகடல்வரைப்பினுமெங்குந்தம்புக
ழெழுதியவெழிற்கொடிபறக்குமன்னவர்
பழுதறுப்படையொடுமகன்றுபோயினர்
தொழுதழுதுருக்கனின்மகாரைக்கொண்டரோ. (சுந)

இம்முறையினுமிவர்சந்தியெய்தினர்
வெம்மையார்துருக்கனைவீட்டலின்றியே
யெம்முயற்சிகள்பயனின்றொழிந்தபின்
றம்மலையாரியனகங்குழைந்துபோய். (சுச)

சென்னைமாபுரிதனிற்புதிதுசென்றுள
நன்னயக்கவனர்பானவிலயாவையு
மன்னவனனைத்தையுமறிந்தழுங்குறே
றுன்னிடுமமயமத்துருக்கன்மாய்தர. (சுரு)

பொறுத்திடுசெறிதெனப்புகன்றவற்கினும்
வெறுக்கையும்விழுத்தகமதிகடோறுமீந்
திறுத்தியெம்முழையெனவியைந்துதேற்றினன்
பிறிப்பரோபெரியவர்பிணைந்துளார்களே. (சுசு)

வேறு.

வாசரமிவ்வாறுசிலவகன்றிடலும்
    வன்னெஞ்சத்துருக்கன்மீளப்
பேசரியபிழைகளைபெரிதியற்றத்
    துவக்குதலும்பிறைசோரம்
வாசமலர்த்தொடையலொடும்வயங்ககலப்
    புரவலனுந்தியங்காவுள்ள
நேசனிவனின்மூலமாயொழிவா
    னிகழ்த்துநுமோர்விரகென்றுன்னு. (சுஎ)

எண்ணின்பாலெண்ணெயெனவெவ்வுழியு
மிகவாதேயிருந்துசிவர்
பண்ணுங்காரியமனைத்துமவரவரின்
பண்டைவினைப்படியேபாரா
நண்ணும்பேர்ஞானிகளுநண்ணரிய
பரம்பொருளையோவாதுள்ளத்
தெண்ணுங்காலெம்பெருமானவற்கொருசே
யுதித்திடுமாறிதயங்கொண்டான். (கூஅ)

எம்பெருமான்றிருவுள்ளத்தெண்ணியது
மெழிலரையன்மனைவிமாருட்
கெம்பம்மையென்னுமொருகிளிமொழியாள்
கிளர்தருநற்சுபமூர்த்தத்தி
லும்பர்களுமுவப்பெய்தக்கருவெய்தியது
முறையேயுயிர்ப்புந்தாங்க
வொன்பதுதிங்களுமகலமேலதனி
னொருமகவையுயிர்த்தாண்மன்னோ. (கூகூ)

கருமலைபோற்களிறுகளுஞ்செறிந்தபொழிற்
காவலனுட்களிப்பின்விஞ்சி
யிருமிடலார்திப்புவுக்கிப்பெருமகிழ்வை
யியம்பவவனிதயம்வேறாய்ப்
பரிவுறினும்பரிவுளன்போன்மேனடித்துப்
பண்டைமுறைப்படியேயவ்வூர்த்
தெருவுதொறுஞ்சகடுகளிற்றெரிப்பரிய
சருக்கரைகொண்டிடவுஞ்செய்யா. (க00)

மகப்பேறுஞ்சிறப்பிதனைநகரெங்குஞ்
செவியுற்றுமகிழும்வண்ண
மிகப்பேரோதையைவிளைக்கும்பீரங்கி
வெடிகளையுமெழுப்புவிக்க
வுகப்போடுமன்னவனுமங்களநா
ணம்புரிந்தேயொளிறுகாலத்
தகப்பார்வைச்சோதிடரையழைத்துதய
பத்திரமும்வரைவித்தன்றே. (க0க)

சாலுஞ்சாலும்மெனவக்கணிதர்க்குச்
சகலவிதச்சிறப்புஞ்செய்து
வேலுண்கண்விழிமடவார்வெண்கவரி
செங்கரத்தான்வீசவார்ந்து
மேலும்பொன்னிரப்பறையைத்திறந்தெவரு
முகந்தெழுகென்றிசைத்துவிட்டா
ஞலஞ்சாயிரந்தசும்பினறியபணங்
கொண்டெழுந்தார்நகராரெல்லாம். (க0உ)

குழவிக்குச்செயற்பாலவிதிமுறைக்குங்
குலமுறைக்குங்கோடாவண்ண
மழகிற்செய்தபிதானங்கிருட்டினனென்
றறைந்தனனவ்வரியசேயுங்
குழவுச்சந்திரனென்னவளர்தரலு
நாடோறுமுயிர்த்தகொம்புங்
கழியப்பின்பொருமதிவிண்டிவ்வுலகங்
கலந்தனள்வேறுலகம்பாவம். (க0௩)

ஆண்டதன்மேல்கலவிரண்டைதர்மக
னரையனிவணடைந்தவின்பம்
வேண்டியதுண்டினிவிசும்பின்விரவியவ
ணரம்பையரின்முகிழ்மென்கொங்கை
யீண்டரியபோகமெலாந்துய்க்கவென
வெண்ணியொருவிரகானுய்க்க
மாண்டனனேமன்னர்தமக்கித்தகைய
மரணமென்றுமருவுங்கொன்னே. (க0௪)

காஸாசாமராசவுடையார் சருக்கம்

முற்றிற்று.

ஆக, செய்யுள்---௬௬௭.

பதினைந்தாவது

மும்மடி கிருஷ்ணராசவுடையார் சருக்கம்.

கண்ணுமொருகவிநின்கழன்மிசையேகழறிடினு
மெண்ணுயிரமியம்பும்புரைவழிதேயொழிவிலதோ
நண்ணுமொருபொறிபஞ்சதூநனிராசியினுடனே
பண்ணுதெனவழிவெய்துறவெவரோதுவர்படியில். (௧)

பாராளிறைபரலோகமதெழவேபடுபாவி
யேராரிணையறுமிப்பொழிலெனதேயெனவெண்ணி
நேராரொருவருமின்றெனநினைந்தேசொலவாயும்
வாராதவன்வலிதாற்றியவழுவத்தனைவகையும். (௨)

ஆளப்பிறந்துளவப்புதல்வனுக்கம்முடிபுனையான்
மாளப்பெருமறையோர்முதன்மகிபர்க்குளவெவருந்
தாளற்கருமனுரெத்தனைதானத்தனையிழைத்தான்
மீளப்புகல்குதுமின்னமுமிகையுற்றதோர்புதுமை. (௩)

பொன்னுக்கடகெனவைத்துளபுதல்வர்க்குளமயரா
மின்னுப்புரையரையன்றிருமயிலன்னவர்மேவும்
பன்னற்கருமந்தப்புரம்பழுதிற்புகுந்தவர்பான்
மன்னித்திகழ்பொருள்யாவையும்வலிதிற்கவர்ந்தின்னும். ()

நிலையந்தொறுநிலவும்பொருளெவையுங்கவர்தந்தான்
குலையும்படிநாடெங்கணுங்குடிகொண்டவர்தமதை
யலையும்படிவவ்வுற்றவையாவுந்தொகுத்தளித்தே
யுலையுந்தனதிருமைந்தரையொன்னார்களின்மீட்டான். (௫)

நேரிங்கிலீசாருக்கெதிர்நெறியாகியடியுபா
வீரங்கெடுமிதயத்தினனியம்புங்கொடுமொழிகொண்
டேரெஞ்சலிலந்தப்புரவிறைவன்றமராய
காரஞ்சுறுகுழன்மங்கையர்கலங்கப்புறம்பகற்றி. (௬)

அம்பேர்விழியாரன்னவரமூதேயயலேக
வம்பேபுரிசிலரைக்கொடுவைத்துள்ளனபலவுங்
கொம்பேயுறுகொடிபோலவர்குலேயப்பறித்தவரை
வெம்பேயுளவொருசிற்றிலில்வதியச்செலவிட்டான். (எ)

மற்றும்பிரஞ்சுத்தேசியின்மாணுவடுமொழியின்
முற்றும்மனன்சுற்றந்தனேமுடிப்பானுளமுனிவை
யுற்றஞ்செவியுட்காவிலக்குமியென்றிடுமரசி
யொற்றன்கையினுடனேலேயையுதவிச்செலவிட்டாள். (அ)

வேறு.

ஓடாவந்தவொற்றனும்பொன்னெளிருஞ்சென்னேயுயர்புரியை
நாடாவெய்திகரபாலன்மனேயாளோலேநல்குதலும்
வாடாமறையன்றிருமலேயாசிரியன்வாசித்துணர்ந்துடனே
பீடார்கவனரிடமெய்திப்பொருமிப்பேசும்வலியிலனுய். (சு)

வந்தகடிதந்தனேயுதவிவழங்குநாவுந்தழதழக்கச்
சொந்தவனேயிற்புரந்தவளின்சொல்லற்கரியவுயர்பொருளுஞ்
சந்தங்கமழுந்திருநாடுஞ்சதியிற்கவர்ந்ததன்றியினு
முய்ந்தங்குள்ளாருயிர்களேயுமொழிப்பானெண்ணியுளனுமே. (க0)

என்றுவிருகணீருடலமெல்லாமறைப்பவிரங்குதலும்
பொன்னுராழிப்பெருமாட்டிபொறித்துவிடுத்தகடிதமுங்கண்
டன்னனருளுமடல்சினமுமடங்கற்கிலவாய்மீதூரக்
கொன்னுர்மறையோர்குலவலவாகுலேயேனுள்ளங்குறையேனீ. (கக)

நெறியொன்றில்லாமுழுமகனந்நீசன்முன்னுளெமதுடனே
செறியும்போர்செய்திறனிலனுயருளேசெய்கென்றடிபணியா
வறையும்பணமுமுதவுநெறியறியானீன்றவருமகாரை
யிறையுநாணமின்றடகாயெம்பாலீந்தங்கெழுந்ததன்பின். (க உ)

முன்னுளடிமைகொண்டளித்தமுறைமேசேரிறைவன்கோயிலேயுந்
தன்னேரரியதடம்பொழிலுந்தகவில்கூறைதானயர்ந்து
பின்னேகொடியவழிவந்தபீடில்பொருளேயெமக்களித்த
கன்னேரிதயக்கள்ளனினிக்கலந்தானமனூரெனக்கருதாய். (கங)

என்றேதாழாதிரும்படைகட்கிறையாமாரீசனைநோக்கி
யின்றேவெலிசிலியினுடனேயெண்ணாயிரஞ்சேனையினிறைவர்
வன்றோர்வரியவயவரொடுந்தொடரப்படர்ந்துவனமயில்கள்
குன்றோர்கடத்திற்கூத்தாடுங்குளிரார்கன்னடஞ்செறிந்து. (கச)

காட்டுட்புண்டரீகமெனக்கள்ளத்தொழிலேபுரிந்தொழுகும்
வீட்டற்குரியதிப்புவுடன்விழைந்தேயெதிர்க்கும்வீரரெலாம்
போட்டுப்பொருதவுடன்மண்மேனமனூரிற்குடிபுகுத [டே.
வாட்டிக்குடும்பத்தொடுமவனைப்பிணித்தேவம்மின்வடங்கொண்

சேரார்வீயச்செருக்களத்திற்செய்யும்போர்க்குப்படைத்துணையா
வாராநிற்பர்மராடர்முதல்வலியாரெமதுநண்பரினு
நேராநிற்பிர்நீவிர்வயமென்றேயன்னுனிகழ்த்தலொடுஞ்
சீரார்சேனைக்கிறைவரெலாந்தெரியச்செய்தானுங்கவனே. (கசு)

தாழாதன்றேயெழுந்தபெருந்தானைக்கடலின்றகைமையெலா
மூழானுள்ளியுரைத்திடுவோருலகிற்குள்ளாயுளர்கொல்லோ
வீழாநின்றமழைத்துளியும்விண்மீனினமுமெண்ணிடினுஞ்
சூழாவெண்ணிச்சொலற்கரிதச்சொல்லற்கரியதளவீறே. (கஎ)

மண்ணார்முழவேமலிவயிரேமகிழ்வின்மோதுங்குளிர்முரசே
கண்ணார்துடியேதிண்டிமமேகலியார்பதலையேயிவைகண்
மண்ணார்விண்ணாரியாவர்களுமம்மரெய்திச்செவிடுறவே
பண்ணார்முறையினின்றியம்பப்பரவிச்சென்றபடையம்மா. (கஅ)

கேளாவீரங்கிளர்தரவக்கிணையேமுதலகெடலரிய
வாளார்வயவர்வரிசைகளும்வாவும்புரவித்தடநிரையுந்
தாளார்சதியின்முறைபிறழாதடைவிற்ருந்தாமெனவைப்பக்
கோளாரிசையினியம்பினவாலிறைவன்செய்யுங்குறிப்புணர்ந்தே. ()

அப்போதந்தவாகினிகட்காகுஞ்சகுனமாயடித்த
துப்பாரணிலத்தாங்கெழுந்ததுகளவ்விசையின்மேனாட்டி
னப்பார்முழுதும்படிந்தன்றோவந்நாண்முதலாவவனியெங்கு
மொப்போதரியவத்திருநாடோங்கியுயர்ந்தேயொளிர்தருமால். (உ௦)

ஏராரிங்கிலீசினர்வாகினியிவ்வாறேயெழுதராலுஞ்
சீரார்சென்னைக்கவனரதுசெல்வக்கடிதஞ்சேருதலுங்
கூராரேதிமராடர்களுநைசாநாட்டுக்கொற்றவனின்
நீராவன்மைத்திறலினருந்தெழித்தேபொங்கிப்படர்ந்தனரால். (உக)

வேறு.

தீவினைப்படிவமாயதிப்புவென்றிசைக்குந்தீரன்
றுவருஞ்சீற்றத்துப்பிற்றரியலர்தனதுநாட்டை
மேவரமிடுக்கினீங்கேயெழுதருமிகுதிகேளாத்
தீவிழிகனன்றுகாலத்தெருமராலுடனேபொங்கி. (உஉ)

மதுமறைந்தருந்திப்பின்னர்மன்றினிற்களிக்கும்பேதை
கதியெனவெறிகொண்டேகிக்கவின்கொளுமகிடனூர்போய்
மதிதவழ்குடுமிமாடமாளிகையரணங்கோயின்
முதலியமுழுதுநன்குதகர்த்தனன்முனிவின்மற்றும். (உ௩)

கோயில்பாழ்படுத்தானன்றிக்குலவுறுங்கடவுடம்மை
யாயினுகாதென்றுன்னனங்கபங்கஞ்செய்தன்றிச்
சேயநால்வருணத்தாரின்மனையெலாஞ்சிதைத்தவ்வூரை
வாயினுல்வழங்கலாகாவகைகெடப்படுத்திப்பின்னும். (உ௪)

ஊரவர்சிலவர்க்கந்தவூர்வடபுரத்திலாறு
நீரதிற்றண்ணென்றுள்ளநிலத்திடைவதியும்வண்ணஞ்
சீரறுங்குடில்கள்செய்துசேர்த்தினனதன்கணந்தோ
வீரமிலிறைவன்கீழ்வாழ்வெரிநரகிணையாமென்ப. (உ௫)

மங்களம்பெருகுமைசூர்மதிளரண்டகர்த்துவீழ்த்தே
யங்கதன்கீழ்பான்மற்றோரகல்வறுமரலையாற்றி
மங்குல்கண்படுக்குமாடமாதியவதனுட்செய்தே
நங்களினசரபாத்தெனுமமுமதற்குவைத்தான். (உ௬)

பேணிலாரடையினன்னூர்பீழையேயுறுகவென்று
வேணிலாமவர்கடானையெழுந்திடுநெறியிலுள்ள
மாணிலாமூர்கண்முற்றுந்திமடுத்தெரித்துமற்றுங்
கோணிலாங்குளங்களேரிக்கோட்டினையுடைத்துப்போக்கி. (உ௭)

பூசுரரிடையறாதேபொங்குநான்மறையாறங்க
மேசறுமிதிகாசங்களாதியாமெவையுமென்று
மாசறப்பயிலுமைசூரகன்றநீர்நிலைகணீரு
நாசகனுலரக்கோட்டினடுவெகழ்ந்தகற்றிவிட்டான். (உஅ)

இங்கிவன்கொடியபூசையிருகணுமுகிழ்த்தால்வைய
மெங்குமூடுறுமென்றெண்ணுமியல்பெனவிழைக்கவிவ்வா
றங்கவரணிகவெள்ளங்கவிக்குலமரக்கரூரைப்
பொங்கிமுன்சூழ்ந்ததென்னவளைத்தனபோரவரங்கம். (உகூ)

முத்திறப்படையுஞ்சூழ்ந்தமொய்ம்பினைத்துருக்கன்கேளா
வித்தகத்துணரும்பூரணையனைமுதலோர்வெய்ய
சித்திரச்செயலினோரைச்சிக்கெனவழைத்துக்கொண்டு
கொத்தளத்துயருங்கோபுரந்தனையிவர்ந்துகண்டான். (௩0)

கண்டவன்கலுக்கென்றுள்ளங்கலங்குறக்கடல்களேழுந்
திண்டிறன்மகரங்காரார்திமிங்கிலமுதலினோடு
மண்டியொன்றனபினொன்றாய்மலிந்தெழுதிரையினான்கி
னண்டையும்வளைந்ததென்னவார்த்தெழுமணிகங்காணா. (௩க)

அன்றுபொற்சிகரியேறியடல்செறிதுரக்குவெள்ளங்
கன்றியமனத்திற்கண்டகவின்குலவிலங்கைவேந்தி
னன்றுளங்கனன்றுதன்பானவைநணியுளதின்வேர்த்து
நின்றுபூரணனையாதிநீதியோர்பவரைநோக்கி. (௩௨)

அளப்பருநமதுதானையளக்கரைக்கிளப்பிவந்த
வெளுத்திடுமுகத்தர்வீரம்வீழ்த்துமென்றுரப்பவன்னான்
குளப்படிகடக்கவான்றோய்மரக்கலங்கொணர்வதொப்ப
வளைத்தவிப்புழுக்கடேய்க்கவான்முயற்சியுமேனையா. (௩௩)

கந்தவாரத்துளான்றன்குடங்கையினகன்றகண்ணார்
சந்தவாசத்துண்மூழ்குந்தடமுலைப்பயன்கடுய்த்துச்
சிந்தைமாசற்றுவாழ்திசெருநரைப்புடைத்துப்போக்கு
மிந்தமாசற்றசெய்கையெமதெனவியம்பமன்னோ. (௩௪)

புத்திக்கன்மாநுசாரியாமெனப்புகலும்வண்ண
மத்திப்புவெனுமரக்கனன்னவனதனுளுள்ளந்
தித்திப்பக்கவலொன்றின்றித்தெளிந்துதன்மனையுட்புக்கு
முத்துப்பொற்பவளமாலைமூலைக்குவட்டிவர்ந்துவாழ்ந்தான். (கூரு)

மந்திரத்தவர்களேவமறத்தினதுருவேமானுந்
தந்திரத்தவர்கடங்கடானைக்குப்பதாகைதன்னு
லெந்திரத்திகல்செய்கென்றுகுறிப்பினுனிசைக்குமுன்ன
மந்தரத்தகலமெங்குமாடினவசிகண்மின்னின். (கூசா)

உடைதிரைப்பரவையொன்றினென்றெதிர்ந்துடற்றுமாபோ
லடையலர்படையிரண்டுமென்றெதிர்த்தடர்த்தபோரைக்
கடையுறவெழுதநான்வன்மீகத்துக்கவிஞனல்லே
னடைவுடன்மறைவகுக்குமருந்தவமுனியுமல்லேன். (கூஎ)

அவ்வருந்தவர்க்குமுன்னேனென்றெழுதியபோரேழு
செவ்வியநிசிகளென்பர்பின்னவன்றிகழச்செய்த
திவ்வியசமரமூவாறிரும்பகற்செய்ததென்ப
விவ்விகலிரண்டுதிங்களென்றிடினியம்பவற்றே. (கூஅ)

வேறு.

அம்புதமென்றுமுறங்குவெரிந்மதி
லப்புறம்வெள்ளையினுடலாரும்
வெம்புமனத்துடனிப்புறமெய்ப்பறு
வீரமிலேச்சனின்விறலாரு
மும்பரும்வம்புறுதானவரும்முன
முற்றுரனெற்றியவிகலென்னக்
கம்பமுறத்திசைகண்டவருட்கிட
வெஞ்சமராடியகடிகைக்கண். (கூகூ)

அட்டகயங்களுமுட்கிணவெற்புக
ளட்டமுநெக்குவிட்டசைவுற்ற
வட்டநெடுங்கடல்வைப்பினையேந்திடு
மெட்டிருநாகமுமுடிசாய்த்த
மட்டொழுகைந்தருநீழலினுள்ளவர்
மற்றையமுற்றுளநைந்தார்கள்
சிட்டர்மகிழ்ந்தனர்துட்டரழுங்கின
ரற்றநுதிப்புவினடியென்னு. (சுO)

பூரணையன்பெருதானையுடன்புற
மேருபுபோற்றலரணுகாமே
பேரமர்செய்துதடுப்பலெனப்பெயர்
வுற்றயல்பெட்புடனுறைபோழ்தில்
வாரணகேசரியன்னதுருக்கரும்
வல்லவெளுத்தமுகத்தோருந்
தீரமுடன்பொருதெற்றினர்குத்தினர்
வெட்டினர்தீவிழிநனிகால. (சுக)

நூறுசதக்கினியின்வெடியோதையு
நுண்ணியதின்வெடியொலியும்புண்
ணூறிடவெவ்வியசெம்புனலோச்சிய
வேதிகடாக்கியவிசையார்ப்புஞ்
சீறுபுதின்னுவெயிற்றிடியோடு
தெழித்திடுவீரவாதத்தியமும்
வீறுறுகன்னவின்மல்லடுவெம்புயம்
வீரர்கள்தட்டியவிறலார்ப்பும். (சஉ)

செய்யவெருத்துரிகொண்டுகுயிற்றுவள்
வார்முரசெற்றியசிலைதாமுஞ்
செய்யமிகச்செருவூக்கமளித்திடு
செவ்வியபாண்டுகளின்னியமும்
வையமறைத்தனவானமறைத்தன
வள்ளமெனுந்திருவாய்மலரி
னையனமர்ந்தருளவ்வுலகின்மிசை
யண்டமும்விள்ளநிமிர்ந்தனவே. (சஙா)

என்றெதிருற்றவிரண்டுழவர்வடி
வாளையொருங்கெதிராயெறிய
நோன்றலையற்றவணிக்கணுருண்டிட
நூறுமுனாடியவெறியாட்டிற்
கான்றுதிரம்படியுங்கவந்தங்களு
மாடியகண்டனரகல்வானிற்
கான்றருமைந்தருமாலைபுனைந்திடு
காரிகையாரொடுநகைபூத்தார். (சச)

தன்னகலந்தனிலொன்னலனேற்றிய
கூரயிறன்வெரிநுருவக்கண்
டுன்னிவெறுங்கையினின்றிடுமோருழ
வன்பினதைப்பறித்துளமார
வென்னவிதென்றவன்பின்றிருகிச்சின
மேறிடமற்றதைவெளவிக்கொண்
டன்னவன்றன்னையுமுன்னவன்றன்னையு
மவ்வயிலேகொடழித்தானால். (சரு)

வெல்லருமோர்மறவன்றனெதிர்த்திடு
வேண்டலன்மீதெழுவெகுளித்தீ
யுள்ளமிருந்துயிர்ப்போடுபுறப்பட
வோவளர்கட்டமொடுயர்மீசை
யொல்லையெரிந்தவனந்தகனூர்புகு
தந்தனனென்னலனெழிக்காதே
வல்லவரேயெனுமொன்றெனமற்றெனும்
வல்விதியென்பதுவழக்கன்றே. (சசு)

கூரயில்கொண்டுசுழற்றுமிரண்டடல்
கொண்டவர்கொன்பெருமருமத்தே
யாரவொருங்குருவக்கடிதோச்சலு
மாங்குயிர்விண்டெழுவிசும்பின்மேல்
வேரியினந்தொடைசூடவெதிர்ந்திடு
வெம்முலையார்க்குமங்கிகல்கொண்டார்
சீரியதேவர்களாயினுமுந்நசை
யானுறுசெற்றமதகல்வின்றாம். (சஎ)

வேறு.

கால்வேறுகைவேறாய்க்கிடந்தவொருபாற்குணபம்
வேல்வீறுகொண்டழுந்தவிரிந்தவகலந்திறந்து
மேல்வீறுகுமரன்கைமின்னயிலாற்போழ்ந்தன்று
பால்வேறுபட்டயர்ந்தபருவரைபோற்கிடந்தசில. (சஅ)

வாள்வாய்தடிந்ததலைவவ்வியெழுவெங்கழுகு
நீள்வாயஞாளிகளுமாண்டலைப்புண்ணீர்மையையுங்
கோள்வாய்நரவிலங்கின்காட்சியையுங்கொண்டனவங்
நாள்வாயலகைகளினன்னகையுஞ்சொல்வதுவோ. (௪௯)

செங்குருதிநன்கருந்திச்செம்மாந்துளநடித்துப்
பொங்கித்துணங்கைபுரியுஞ்சிலபாசஞ்
சிங்கநிகராரீசுவெல்விசிலிசீர்த்திகளை
யங்கையறைந்தாடியறையுஞ்சிலபேய்கள். (௫0)

ஆடுங்கவந்தத்தறுந்ததலையொன்றயத்தின்
கூடும்பொழுததுவோர்குரகதநீள்கந்தரத்து
வேடந்தனையியையும்வெண்குடைகள்காம்பறுப்புண்
டோடுங்குருதிவெளத்தொள்ளியபேராம்பியென. (௫௧)

வடிவேலழுந்தகலவாய்நின்றுஞ்செங்குருதி
வடியப்படிமிசையேமாண்டுகிடக்கும்பிணங்க
ணெடியவரைமுதுகினின்றொழுகுஞ்செந்தாதின்
கொடிகள்படருடலிற்குலவுவதுபோன்றனவால். (௫௨)

தாளற்றுத்தானமொழுகுங்கடத்துத்தந்திபல
நாளற்றுவெங்களத்துநல்லுயிர்போய்க்கிடப்பனகள்
வாளத்தால்வானவர்கோன்வார்சிறகரீர்தரலுங்
கோளற்றசைவற்றகுன்றுகளேமானுமரோ. (௫௩)

கண்புரளத்தான்விழித்துக்கவ்வியதரந்துடித்த
மன்பெரியமீசையொடுமோங்குவடிவாளுடனும்
புண்பட்டொழிந்துளவோர்போர்வலவன்றன்னுடலை
யுண்பொருட்டுவந்திடுமோர்பூதமுணர்ந்துண்ணடுங்கும். ()

வெள்வதனத்தோர்படையின்வேந்தரமர்வெய்துடற்ற
முள்வதனத்தோர்வெடிகண்முன்னுயவோச்சுகையி
லுள்வதனமொண்மொழிகளோங்குகொடியாதிகளின்
கொள்வதனவிற்குறிப்பாற்குப்புறப்புவிமேல். (௫௫)

செய்யாவுயிர்பிழைத்துச்சென்றாரைமற்றெழுந்தே
யையாயிரவரானொடியின்மாய்ந்தொழிய
மொய்யாமுரண்கொண்டடற்றவவர்மொய்ம்பொழிந்து
கையாயுதங்கழலக்கட்டழிந்துமற்றிளைத்தார். (ருசு)

வேறு.

இளைத்தவமையத்துமுனிலங்கையெயிலிற்கடிதி
வர்ந்துபலகீசககுலம்
வளைத்துவயமாடியவகைத்திறல்வயங்குதவ
ளத்துமுகவாகினியெலா
முளப்பொலிவிஞெய்யெனவொருங்குகிளர்வுற்றிவரி
யோங்கரணகன்றுணுழையா
வளப்பரியவண்மைபொதுளந்நகரமங்கையக
மன்னவயமெய்தியுடனே. (ருஎ)

தம்புகழ்பொறித்தொளிருதாழ்வறுதுகிற்கொடி
தயங்கியிடநாட்டியகல்வா
னிம்பருடனும்பருமிருங்களியகத்தெழ
வியம்பியிடவென்றிமுரச
மும்பர்மலர்மாரிபெயவோதுமறையோர்முத
லுயர்ந்தவர்புகழ்ந்துமகிழ
வம்பொன்மணியெங்குநிறைதிப்புவுறைமாளிகையு
ளாடலொடுபுக்கனரரோ. (ருஅ)

புக்கவவரங்கவனேநாடினர்களின்றவனும்
பொங்கிவருபோழ்தவர்முன
முட்கியுளநாமுயிர்பிழைத்திடுதுமோடியினி
யென்றுதனியோடியெயிலின்
மிக்கசிறுவாயுணுழைபோதவணடர்த்தவொரு
மேவலனெறிந்தபடையா
னக்கணமனுதனெனவாருயிர்துறந்துபடி
மீதுகிடந்திட்டனனரோ. (ருக)

தேடியதிறத்தினர்தெரிந்தவனிறந்தது
தியங்கியழுமன்னவனின
நாடரியபெண்டுபிளேயாதியரைநன்மொழி
பகர்ந்துநலியன்மினினிநீர்
வாடறுசுகம்பருகிவைகவளிசெய்குது
மெனப்பலவழங்கியவனின்
பீடறுசவந்தனையும்பெற்றவனுடன்புதைதமி
னென்றுபொருடந்தனர்தனம். (௬௦)

எவருமழுங்குவணமேகொடியகோனட
விருந்தவனேவென்றவிருவர்
நீவிரனேவோருநகர்நீடுகொளேயாமமள
வாகநனிநேர்குதிரென
வாவலொடவர்க்குரியசேனையளகைக்குநிக
ரன்னகரினன்றயர்தர
மேவினர்பெரும்பொன்கிலரின்னுமிகுசெல்வரென
மின்னுவர்களன்னமரபில். (௬௧)

இப்புறமனைத்தும்வெருவுற்றலையவின்னல
திழைத்தகொடியோர்களிறையாந்
திப்புவெனுமிக்கபடுபாவியொழிதந்தசெய
றெள்ளிதினுரைக்கவிழைவா
னப்புறமுவக்கும்வணமேகினனெனத்துனேவி
னுடனூறுமேழுபரியா
ரொப்பரியதேரிரவியோடிநெடுமேனுததி
யூடுசெலவுற்றனனரோ. (௬௨)

வேறு.

புள்ளினங்குடம்பையுட்புகுந்தடங்கவானிரை
வெள்ளிடைக்கணின்றுகொட்டிலூடுமீளவெய்திட்
விள்ளருந்தொழிற்சனங்கள்வீடுவந்தொடுங்குறக்
கள்ளவிழ்ந்தகோதையார்களூடுகாமமெழுந்ததே. (௬௩)

அந்தவெங்களத்தவிந்தவழகமைந்தவீரரி
னொந்துழந்தகற்பணைந்தநுண்மருங்குலாருடன்
சிந்தையொன்றுபட்டகேள்வரோடுசேரவெரிபுக
வெந்துமூட்டுதீயையொத்ததந்திவானம்வெய்தினே. (சுச)

பிறையெயிற்றுடன்பிறங்குபெரியசெக்கர்வானமாம்
வெறிமுகத்தினந்தகாரமெய்யிணைந்தவந்தியென்
றறைதலுற்றகாலன்காதலார்தணந்தோராவியைக்
கறுவிமற்றகப்படுக்கவந்தனன்கொல்கட்டமே. (சுரு)

கொண்கன்வெங்களத்தவிந்தகோதைமாரரற்றலு
முண்பிணங்களோவெனக்குரைக்குமோரியோதையு
மெண்கடந்தவிங்கிலீசரிசையையேத்துமியம்பலும்
விண்கடந்தொலித்ததவ்விபாவரியின்முற்றுமே. (சுசு)

தன்னினத்தவெண்மதிக்குகந்ததண்குலத்தரா
மன்னருக்குவெண்முகத்துமகிபராலிணைந்ததாம்
பன்னலற்றவிபவமாதவன்மகிழ்ந்துபார்க்குமா
றுன்னிமற்றைவைகறைக்கணுதயவெற்பினோங்கினன். (சுஎ)

எரியிடைச்சொரிந்தநெய்யினெழின்மறைக்குலத்தினர்
விரியும்வெங்கதிர்க்கரங்கள்வீழவம்புயத்திடைப்
புரியவிழ்ந்தலர்ந்தொளிர்ந்தபோதுசெய்யவாம்பலுந்
தெரிவகன்றதீயர்செல்வமெனமழுங்கலாயதே. (சுஅ)

கைதளர்ந்தநண்பனிற்கழன்றயற்கணுதரமே
யுய்தலெண்ணியொன்றியொப்பவோதுபேதையாரென
மைதிகழ்ந்தமதுகரங்களாம்பலூறுமலர்தணந்
தெய்திநாளநாறுகஞ்சமிசைமிழற்றுகிற்குமே. (சுகூ)

வாரிதோறும்வாரிசத்துவண்டுபோணயர்ந்தகல்
லூரிதோறுமூற்றமுள்ளசிறுவரோதவந்தணச்
சேரிதோறுமாதியாயநூலையோதல்செயவியன்
னேரிதோறுமாடலாயுவிணைமலிந்தகோகமே. (எ0)

இன்னவண்ணமொற்றையாழியியையுதேருக்கனும்
பொன்னுருக்கிவிட்டதொத்துவையமெங்கும்பொலிதரத்
தன்னெழிற்கரம்பரப்பிவிண்ணகந்தயங்கலு
மன்னசேனைமன்னராயவிருவரங்கெழுந்தரோ. (எக)

உள்ளகம்புறத்துமெங்குமுடற்றிநாறமுடையெழ
விள்ளவாவிவீழ்ந்தொழிந்தவீரர்மெய்த்திரள்களை
யுள்ளபாவமொழிகவென்றுமொழுகுகாவிரிக்கிடைத்
தள்ளுகென்னவண்டிகொண்டுதாமறைந்ததக்கணம். (எஉ)

அவுணர்வீயவமரர்வென்றவன்றுகொண்டவம்முதந்
தவமணந்தசசிமணாளனெனவமாமுகிற்குல
முவரிநீரொருங்குமொண்டுகுமுறிநன்குபொழிதர
வவனியெங்குமுதிரமாற்றியசுத்தம்விண்டொளிர்ந்ததே. (எங)

புந்திபூரணத்தனப்புரத்துளாயமறையெலா
மந்தரங்கமாயறிந்தபூரணையனருகுற
வந்துகாணவிருவர்தாமும்வழங்கிநன்கவற்குரை
யந்தவூரிராசியங்களனைத்துமெல்லவறிந்துடன். (எச)

தானைமன்னனுகினின்றதிப்புவின்றனயனைத்
தேனையன்னவின்சொனன்கியம்பிநீதியங்கிடே
லேனைநின்னினங்களாகுமேவையுஞ்சுகமுற
வானையன்னவாழ்வினூரவைத்துமென்றியம்பியே. (எரு)

எம்மளிப்பினின்றுதொட்டிருத்திரென்றிருஞ்சிறை
யம்மவத்துருக்கராருமதனுள்வைகவைத்தவர்
தம்மதாயதானையாவுந்தமதகப்படுத்தியே
செம்மையாகமுன்னினுஞ்செழிக்குமாறளித்தனர். (எசா)

வேறு.

மற்றந்தவீரரிருவோர்களுமன்னர்தங்கள்
சுற்றங்களாயவனைவோர்களுஞ்சூழ்ந்துமோத
முற்றங்குவாழ்த்தமுகமன்பலவோதிவேந்தன்
சொற்றங்குகோயிற்செயல்யாவையுஞ்சொல்லுமென்றார். (எஎ)

முன்னைதனக்குமுரணார்ந்ததுருக்கன்செய்த
வின்னாமையாவுமெழுதிச்செலவிட்டவேந்தன்
கொன்னேதுறக்கங்குடிபுக்கதுங்கூறக்கேளா
வென்னேயெனேயென்றினைந்தார்நினைந்தாருலைந்தார். (எஅ)

அஞ்சாமராயனெழுதிச்செலவன்றுவிட்ட
தஞ்சாதவீரரவர்முன்விரித்தோதியக்தேச
நெஞ்சாணிணைக்கவருமித்தகையல்லலுண்டா
னெஞ்சாதவின்பமினியுண்கிலனேகினானே. (எகூ)

என்றேயவர்களினையும்பொழுதேந்தற்குற்றார்
நன்றேமணந்தநலத்தீர்விசும்புற்றமன்னற்
கொன்றேபுதல்வனொளிர்கின்றனனீண்டவற்குப்
பொன்றோய்முடிநீர்புனைந்தாண்மெனப்போற்றினாரால். (அ0)

கேளாவதனைக்கிளர்வாண்முகத்துள்ளுவந்து
தாளாளராயினவன்றன்றிருத்தங்கவைக்க
ணீளாதுநாளைவருதும்மெனநேர்ந்துரைக்கக்
கோளாரரசியதுகண்டுகுதூகலித்தாள். (அக)

மற்றைப்பொழுதத்திருலக்குமியென்னுமன்னி
யெற்றைக்குமுள்ளவெழிலாதனந்தன்னிலந்தக்
கொற்றக்குவவுப்புயமைந்தனைக்கூடநாப்ப
ணுற்றுப்பொலியவிருத்திப்புனைந்துள்ளுவந்தாள். (அஉ)

ஆரீசனாதியடலார்தமையாக்குவித்த
போரீசர்கட்குப்புகன்றிட்டதுமந்தவீரர்
பாரீசர்காணும்படிபூண்டவைவந்துபார்த்துச்
சீரீசனிந்தச்சிறுவன்னெனப்பொங்கிமற்றும். (அ௩)

இம்மாண்குலவுசிறுவன்வயதைந்திலிந்தச்
செம்மாவழகுமணந்துள்ளதின்சீர்மையுள்ளி
னம்மாவினியிவ்வகனாடுபுரக்குமாற்ற
லெம்மாலறையுந்திறமின்றியியைந்துவாழும். (அச)

என்னுவியந்துதமதுண்ணினைந்திந்தமன்னன்
பொன்னூர்புதல்வன்பொருவின்மரபின்பெருக்கு
முன்னுவினவிமுறையிற்றெரிந்தந்தமூத்த
மின்னார்நுதலின்மிளிர்வாட்கிவையாடலுற்றார். (அரு)

வேறு.

நீலந்தனையாமுனியாநிலவும்மயில்விழியாய்
கோலம்பெறுநினதேர்குலமன்னவரெவருஞ்
சீலங்கொடுநெறியிற்சேரார்குலமனுங்க
வேலங்கரவலியான்வென்றேமுடிபுனையா. (அசு)

சீதங்கொளுமதிசேர்திகழ்வெண்கவிகையின்கீழ்
மோதுந்திரையுலகமுழுதின்புறமகிழா
வேதஞ்சிறிதணுகாதிறைமைத்திறமிகவா
தோதும்படியுலகமுணர்ந்தேபுரந்தவராம். (அஎ)

யாமுண்மையினடையவழிதந்தனமதனை
னேமம்பெறவுலகோரிகல்செற்றனமிகலித்
தூமங்கமழ்குழலாய்துயர்மற்றினியகல்வாய்
நீமன்னுகமகிழ்வென்றிவைமற்றவர்நிகழ்த்த. (அஅ)

அம்மாமயிலனையாளகமீறியமகிழ்விற்
செம்மாந்துளஞ்சிங்கஞ்சிவணுந்திறலுடையி
ரெம்மாவியேயொன்றேவினிதின்புறவளித்தீ
ரிம்மாநிலமெவையுமினிவாழ்வுறவிழைத்தீர். (அகூ)

செய்யாவருளுதவிக்கெவையுள்ளனசெய்வா
னெய்யாவெமதுயிரேயெழிலார்புவியிதுவே
கையாலுமதுதவக்கலந்துள்ளனமதனை
மெய்யாநுமபொருளேமிகுந்துள்ளதுமெதுவோ, (கூO)

என்றேயினபலவாயினிதுற்றுரைவழங்கா
நன்றேயொளிர்மணியாழ்பணியேமுதலெவையு
மின்றேயிடையனையாண்மிகுதிப்படவுதவ
முன்றாழ்வுடனவைகண்முதமுற்றவரடையா. (கூக)

தம்பாடியைகணுகித்தமதாளுகைநடவும்
வம்பாடியகுழலார்வதியுஞ்செனைநகரிற்
கொம்பாடியகுயிலிற்குலவுங்கவனரிடைச்
செம்பாடையினெழுதிச்செலவிட்டனர்பலவும். (கூஉ)

அடல்வெம்பகையழியாவவராளுகைபறியா
நடல்கொண்டனர்புதிதாகணுகுற்றனரதனுற்
கெடல்கொண்டுளமுழலுங்கிதவத்திரள்சிலதை
மிடல்கொண்டொடுங்குறவேமிதமுற்றிடவொறுத்தார். ()

தீதுந்திகழ்நெறியுந்திதிகொண்டிடுமவனரக்
காதுங்கருணையுமேகருதித்தனியிறையா
யாதும்புரையணுகாதரங்கந்தனையெவ்வெப்
போதும்விழியிமையார்புரவுற்றனரவரே. (கூச)

வேறு.

பின்னரத்தகையராய்ந்துபெருமிகையிழைத்துமாய்ந்த
கொன்னவிறுருக்கன்மைந்தர்கோற்றொடியவரையெல்லாந்
துன்னிருங்காவலூடுதுதைந்தெழத்தூலையில்வேலூர்
தன்னகங்கடிதினுய்த்துத்தணப்பருஞ்சிறையில்வைத்தார். (கூரு)

நெறியலாநெறியினீட்டிநிலவுமாளிகையுள்வைத்த
பொறியெலாங்கவர்ந்தாரன்னன்பொலியுமொன்பதுசெஞ்சோதி
யெறிதருமணிகளார்ந்தவெறும்வலிப்புலியின்பீட
மறைதரற்கரியவின்னுமடையவுந்திரட்டிக்கொண்டார். (கூசா)

எண்ணியகருமமெல்லாமெளிதுளியிழைக்கவல்ல
நுண்ணியவறிவன்பூரணையனையினிதுநோக்கி
யெண்ணரும்பகலாயாண்டவழிவழியிலகுமன்னர்
கண்ணியமகிடனூரிற்கவின்கொளிவ்வரசன்சேய்க்கும். (கூஎ)

எதுராயன்றொடக்கமாகியெவர்களும்புனைந்தசோதி
யதியாகவெறியுமௌலியழகுறப்புனைதற்பாற்று
லிதமாகவினிதினேகியதற்குளவெவையுநீயே
மிதமாகாவகையினீட்டிமேம்படவமைக்குகென்றார். (கூஅ)

நன்றெனவவனும்பொங்கிநகைமதிமுகத்தினுட்கம்
மன்றலையறையவந்நாண்மனதகத்தடங்கலின்றிச்
சென்றுமேல்வழியுமோதமமுதெனமுறுவல்செய்யா
வன்றுடனனைவரோடுமந்நகரணைந்தாண்மன்னே. (கூகூ)

மந்திரத்தவனுமந்தமதிமுகத்தவர்கள்சொற்ற
சுந்தரக்கிளவிக்கேற்பச்சுடர்மணிமுடிகவிக்கு
மந்தவெஞ்சிறப்பிற்காகுமவையெலாமெளிதிற்சேர்த்தா
னெந்தநற்பொருள்களீட்டலரிதுரணிணையில்லார்க்கே. (க00)

அங்கமாறவற்றினென்றுங்கணிதநூலறிஞர்சொற்ற
மங்களசுதினந்தன்னின்மன்னவன்மகற்குநற்சு
மங்கிலிகளினைகங்கையாதியாம்புனிததோயத்
தங்கலந்தொளிருமேனிக்காட்டுவித்தரசிமற்றும். (க0க)

குடங்கையினகன்றகண்ணுங்குவிமுலைக்குடமுமுள்ள
நுடங்கிடையவரானுண்மைமென்மையாந்துகிலுடுத்து
வடங்களுமணிவில்வீசும்வயிரகங்கணமுன்னய
வொடுங்கிருளணிகளெல்லாமொளிபெறப்புனைந்தணிந்தே. (க0உ)

காவதங்கமழுமௌவன்மல்லிகைகுரவம்புன்னை
மேவருகுவளையாதிமென்மலர்த்தொடையல்சூட்டி
யேவருமதனனீன்றகுமரனிங்கிவனென்றோதத்
தாவரும்புனைதல்செய்துவணங்கினடழைக்குந்தெய்வம். (க0ங)

இன்னனநிகழவேந்தனரண்மனையிடத்தினிண்டை
மன்னியதிருமணாளன்மணிதிகழ்நிலயந்தன்னுட்
பொன்னினுமணியினானும்பொலிபுசெம்பவளத்தானு
மின்னியவபிடேகஞ்செய்மண்டபமிளிரவாற்றி. (க0ச)

குருவிருட்படலந்தானுமிரிந்தொளிகுலவவொன்பா
னருமணியிழைத்தசிங்காதனந்தனைநடுவணிட்டுச்
சிகழிகைமிசையினாற்றிச்செந்துளிமதுவினூற்றத்
தருமவைவெவையுமாங்கேதந்தனனிரப்பித்தாழான். (க0ரு)

வனப்பெலாங்குழுமும்வண்ணம்வனைந்தவன்குமரன்கோயிற்
றணிப்படர்ந்தவனைத்தந்தச்சிவிகையுட்டயங்கவேற்றிக்
கனைப்புறுமியங்களோதைகனைகடற்கிரட்டிமூள
நினைப்பருமலராணுதனிலயத்திற்கழைத்துப்போந்தான். (கoசு)

பட்டத்திற்குரியவும்பல்பரியுநன்கணிந்துபோத
வட்டத்தண்குடைபரிந்தமதியெனநிழற்றவானை
மட்டுற்றகுவளைவென்றமலர்விழிமயில்கள்பாங்க
ரொட்டிப்பொன்முறுக்குண்காம்பார்கவரிகாலுறவும்வீச. (கoஎ)

இன்னிசையமுதையாழும்வேய்ங்குழலிரதியன்ன
நன்னுதன்மகளிர்காளகண்டநேர்குரலுநன்கு
முன்னியமுழவினுயவிசையுடன்மயங்கிக்கேட்கத்
துன்னிடுமவர்கள்காதினூற்றிடச்சுவைகண்மிக்கு. (கoஅ)

பகைகெடப்படுத்துப்பட்டந்தரவருமிருவர்முன்னுந்
தகைபெறுந்திறலோர்தாமுந்தணப்பருமகிழ்விற்போத
வகைவகைதுரகங்காலாள்வாகினிவடிவாளேந்தி
மிகையுறுந்துகள்விண்போர்ப்பமிடுக்குடனடக்கமுன்னும். (கoகூ)

இன்னுமித்தகையமேம்பாடெழிலுறநடந்துபோந்த
பின்னரப்பூரணையன்கரங்கொடுபிடித்திறக்கி
மின்னுறுமபிடேகஞ்செய்மண்டபமிடைந்துநாப்பட்
டுன்னுறுதவிசின்மீதுதுலங்குறவிருக்கச்செய்தான். (கக0)

ஆதிநூலங்கந்துன்னவறிபுரோகிதர்களண்மிச்
சோதியார்கங்கணஞ்சேர்த்தோமமுஞ்சுடரிற்செய்து
வேதபாரகர்களோதும்விழுமறைத்துழனிவிஞ்சக்
கோதுறுதிமைக்கற்பாலயாவையுங்குலவச்செய்தார். (ககக)

வைதிககருமமெல்லாம்வகையுறவனைந்தபின்னர்
மெய்திகழ்விறலனரீசன்முதலதிபர்போந்து
பைதிகழரவமேந்தும்பாரகச்சுமையைமன்ன
னைதிகழ்குமரன்றுங்கவவன்புயகிரியிற்சேர்த்தார். (ககஉ)

ஆயிடையதிரவெங்குமடுக்கடுக்காகத்தீர்த்த
காயெரிவெடியினேசைகரம்புடைத்தார்க்குஞ்சும்மை
யோய்வருமுரசவோதையின்னனமொருங்கெழுந்து
மாயிருஞாலம்போர்த்துமாகமும்பரந்தமாதோ. (ககங)

தளவமேமுதலவாசந்தாங்கமழ்மலரும்வெண்மை
யுளபொரித்திரளும்வீசியுவகையிற்பலருமார்த்தார்
களனவிலனத்தினர்க்கும்பாடகக்காலின்மஞ்ஞை
யளகியர்நடனங்கண்டாரார்மனஞ்சலிப்பின்றன்றே. (ககச)

பட்டமாமதகரிக்கும்பரிக்குநன்கபிடேகஞ்செய்
திட்டமாநுதலிற்பட்டமிலகுறவிசைத்துநாம
மிட்டனரஞ்சராசன்செயராமனெனவேயந்த
வட்டமாக்கயநேரானைக்கயந்தனக்கடைவின்மாதோ. (ககரு)

பின்னராரீசன்பெட்பினிரத்தினத்தபிடேகஞ்செய்
தன்னவன்மரபிற்காதிவழிவழியடைந்தவாழி
தன்னையங்குலியினிட்டுத்தணப்பரும்பட்டக்கத்தி
மின்னுறமருங்குசேர்த்திமீரலத்துடனேமற்றும். (ககசா)

விலையிலாமணிகளோளிவேறுவேறழுத்திமின்னுந்
துலையிலாடகத்தினெய்பூந்துகிற்பணிகளின்ன
நிலைகுலாநிருபற்கீந்துநிற்கெமதிறைவன்றந்த
வுலைவிலாவிவைகளென்றுவணங்குபுவுரைத்தல்செய்தான். (ககஎ)

அரியவச்சிறப்பிற்காங்கேயடைந்தவந்தணர்களாதி
பெரியவர்சிறியரார்க்கும்பெட்புறவளித்தபொன்னுங்
குருமணிப்பணியும்பட்டுங்கோட்டுப்பொற்றுகிலுமின்னு
மருவினரணிவரந்தமரபினிற்பிறந்தோரம்மா. (ககஅ)

வேறு.

மற்றரும்பகடுறுமதியனரிசன்
கற்றநுண்ணறிவொடுகருமநன்குணர்ந்
தற்றமொன்றணுகுறாதாற்றும்வன்மையும்
பெற்றபூரணன்றனைவிளித்துப்பெட்புடன். (ககசு)

அந்தணர்நிறைதருமரசவைக்கணீ
மந்திரத்தலைவனுய்மகிழும்பேற்றினைத்
தந்தனன்றரணிபனிளைஞனுதலின்
வந்திடுந்துணையவனளிக்கும்வைகலே. (கஉ0)

இறையெனும்புரைபடாதிறைவனுட்சியைக்
கறையுறுக்கருத்துடனுணர்ந்தியாவையும்
பிறழ்வுறுக்கரணமூன்றியைந்தபெற்றியி
னெறிவழாவகையுளியளித்துநின்றபின். (கஉக)

அறைகழலவனிபற்களித்துமாட்சியை
முறையினன்குறுதியைமொழிந்துகீழ்ப்படிந்
துறைதிநீதிப்புவின்றனயற்கோங்குமிப்
பொறைதனையளித்திடத்துணிந்துபுந்தியில். (கஉஉ)

இருந்ததுதெரிந்துநாமதனையெண்ணிடா
தருந்தனமிதனைநிற்களித்துந்தெய்வநேர்
பொருந்தியபுரவலன்றனக்குத்தீங்குசூழ்ந்
தெரிந்தவரெனைப்பலரிதயங்கோடியால். (கஉங)

பிறிதொருகரியெவனிறந்தபேயனு
நெறிபிறழ்துருக்கனைநினைத்தியிங்கெனு
வறைதராவமைச்சருக்கடுக்குமாழியை
யிறைவனுக்கெதிர்தரவவனுமேற்றனன். (கஉச)

இரசிடென்டெனக்குளோசென்னுமொய்ம்பனை
யரசனுக்காதரம்பெருகவாற்றியே
வரைசெறிபுயவெலீசிலியென்வாகையன்
பரசனம்வெருவுபல்படைகள்சூழவே. (கஉரு)

பொள்ளெனப்போற்றலர்பொரவெழுந்திடின்
விள்ளுறவவர்தமைவிறலின்வீட்டுமா
றெள்ளருமரங்கபட்டணத்தினேன்றுற
வுள்ளிநன்கவன்றனக்குரைவழங்கினன். (கஉசா)

அவையினரறிதரவனைத்துமிவ்வணஞ்
சுவைமிகமொழிந்ததுஞ்சொலிக்கும்பூண்முத
னவையறுபரிசெலாநல்கப்பெற்றன
ரவன்முதலதிபர்களெவருமாங்கரோ. (௧௨௭)

அன்றவைகலைதலுமவன்முன்னுயவர்
சென்றுதமுறைவிடஞ்செலவவ்வைகலும்
பின்றையதினமிலக்குமியென்பேருள
மன்றலின்குழலியின்மனைக்குப்போந்தனர். (௧௨௮)

போதரப்புரவலன்குலத்துப்பூவையு
மேதகுமெழினியுளிருந்துமேவிய
சீதவெண்முகத்தினரிருக்கச்செய்துபின்
பாதரம்பெருகுறவறைதன்மேயினுள். (௧௨௯)

அறைவருமடலினீரெமக்கிங்காற்றிய
குறைவறுமுதவியுங்குணிக்கற்பாலதோ
விறையெனுமுதவிகுன்றுமைக்கென்குல
முறைமுறைவருகெனமுதல்வற்போற்றுவேன். (௧௩0)

அந்தநாளமரர்களரக்கர்க்கீசனு
னைந்ததுநுவலருந்துருக்கன்றீமையா
லிந்தமாநகரநாடியாமுமெய்திய
வெந்துயர்க்கிணையெனவிளம்பற்பாலதோ. (௧௩௧)

அரக்கரையழிக்குமுனிலங்கையாட்சியை
யருட்கடலிராகவனனுசற்கீந்தனன்
றுருக்கனையிவண்படத்தொலைத்துநீவிரிங்
களித்தனிருமக்குறுமரசையெற்கரோ. (௧௩௨)

எனப்பலமுகமனுமியம்பவாரிசன்
புனத்தெழின்மயிலனுய்பொருவினுன்மர
பினர்க்கிதுவழிவழியியைந்தபேறிதை
நினக்குறுமடியனுநெடிதுவவ்விஞன். (௧௩௩)

நுந்தவமுனமிழைத்திருந்தநோன்மையின்
வந்ததுதிருகிநும்வயினிவ்வாழ்வினிச்
சிந்தனைசிறிதுமின்றின்பங்கூர்மினென்
றிந்துவின்முகத்தினுயியம்பக்கேளினும். (கருச)

கோலிதைநுமதகங்கொடுத்தற்கேயிவ
ணெல்வருபெருஞ்சமரிழைக்கலாயதாற்
சேல்விழியிதற்குநஞ்செலவுங்கோடிபொன்
வாலிதினதையுநீவழங்கற்பாலையால். (கருரு)

தேயநின்னதுவிதைத்தெவ்வர்சேர்கிலா
தேயுநம்படையிவணிருந்துகாப்பதற்
காயதுமதிதொறுமறிந்துசெவ்விதி
னீயளித்திடுகெனநிகழ்த்திப்பின்னையும். (கருசு)

சிற்சிலவரையறைசெய்துகொண்டன
னற்புடனரசினியளிக்குந்தன்மையைக்
கற்புறுமரசிபாற்கழறியன்னவன்
பொற்புறும்பரிசொடுமீண்டுபோந்தனன். (கருஎ)

வேறு.

மற்றும்பூரணையன்மகிழுமாரீசன்சொற்
பெற்றுமைசூர்முன்னம்பேணலன்செய்தீங்கான்
முற்றுமந்தங்கெட்டுமுரணழிந்துள்ளதைச்
சற்றுங்குறைவின்றிச்சந்தங்கூறச்செய்வான். (கருஅ)

எண்ணியளவில்லாவிரும்பொருளிறைத்துக்
கண்ணகன்முதுகிற்கருமுகில்கண்டுஞ்சும்
வண்ணமுயரிஞ்சிவளைதரவிழைத்து
வெண்ணிலவெறிக்கும்வெண்சுதைதிமிர்ந்த. (கருகூ)

மாடமாளிகையும்மண்டபம்பலவுங்
கூடகோபுரமுங்கோயில்கள்பலவு
மாடரங்கும்வேந்தரரசிருக்கைதாமும்
பாடுபெறுங்கல்விபயிலிடம்பலவும். (கசo)

மதியகடுரிஞ்சும்மாழைமுடிமின்னும்
வதிதரவரசர்வயங்கரண்மனையுஞ்
சுதைபுரைமொழியச்சுந்தரிகள்வாழு
மதியழகவாவும்மந்தப்புரங்களும். (கசக)

அனவரதம்வையமாரவாரத்தோட
நனியெழுந்துகளைநாகமதநன்னீ
ரினிதுறவடக்குமிருமருங்குந்தென்னை
பனிநிழலுதவும்பரப்புடைமறுகும். (கசஉ)

கள்ளருந்தும்வண்டின்கானமும்பலவாம்
புள்ளினமுரலும்புகலருமிசையு
மள்ளிருஞ்சினைமேலம்புதந்துயிலும்
விள்ளருங்கமழும்விரிமலர்ப்பொழிலும். (கசங)

இன்னனபலவுமியைபுறவிழைத்தா
னன்னநகர்கண்டவனைவோருமமரர்
பொன்னகரிதுவோபுகழளகைதானோ
வென்னவிறும்பூதெய்திமகிழ்வுற்றார். (கசச)

பின்னரசியந்தப்பெருமகன்மதலைக்
குன்னரியகல்வியுள்ளனவெவையு
மன்னுகுருமாரின்மலிதரப்பயிற்றித்
தன்மரபினதுந்தானடையச்செய்தாள். (கசரு)

அப்புரவலன்சேயளப்பரியவிஞ்சை
தப்பறமணந்தேதவறுகட்கிடமாஞ்
செப்பரியகாளைப்பருவஞ்செறிதந்தே
துப்பிதழ்மகளிர்துணைமுலையுஞ்சேர்ந்தான். (கசசா)

மண்டணிப்புரக்குமதியடைந்தபின்னர்ப்
பண்டடறுருக்கன்பகரருந்தன்னாட்டின்
மிண்டொடுசிதைத்தமின்னுமறமெல்லாங்
கண்டுநிலைநாட்டக்கருதினனேமற்றும். (கசஎ)

ஊராலொருகோயிலொளிர்தரச்சமைத்தா
னீரானிரம்புற்றநெடுங்குளங்கடொட்டான்
காரார்கருஞ்சோலைகணக்கரியவைத்தா
னேரார்சத்திரங்களெத்தனைகளென்பேன். (௧௪௮)

ஆறுதுறைதோறுமரும்படியமைத்தா
னேறுமலைதோறுமெழிற்சோபானமாற்றி
நாறுபொழிறோறும்வேதிகைகணட்டிக்
கூறுவழிதோறுங்குளங்களுமெடுத்தான். (௧௪௯)

வேறு.

ஓங்குயருமாபலவெற்புச்சியிவர்தந்தே
யாங்கொளிருகோயிலினுமந்தமுறவாற்றிப்
பாங்குபெறும்பாடியவணென்றினிதுபண்ணி
யாங்கிரதமூர்மறுககன்றிடவிழைத்தான். (௧௫௦)

அம்மலைமுகட்டொளிருநாரணனையாதி
மெய்ம்மருவுமேவரியதேவர்களுவக்கச்
செம்மணியிழைத்தபணியேமுதலசெய்தான்
பொம்மலிளங்கொங்கையவர்போகநனியுண்டான். (௧௫௧)

நண்ணுவளநஞ்சனங்கூடெய்தியவணெற்றிக்
கண்ணுதலிறைஞ்சுபுகலன்களடியாவும்
பண்ணியுதவிக்குலவுபைம்பொனிலயத்தைக்
கண்ணகலவின்னமுங்கவின்கொளவிழைத்தான். (௧௫௨)

தந்தையுதிதந்தவரிகுடாரமெனுமூரை
யந்தமுறுமைசூரெனவாக்கவகமுன்னி
வந்தவர்கள்விந்தையுறும்வளவரணிழைத்துட்
கந்தவாரமாளிகைகணக்கிலசமைத்தான். (௧௫௩)

அகநகரும்புறநகருமகன்றிடவகற்றி
வகைவகைவனைந்ததொழிலாளர்பலர்வைக
முகநகவிளித்தவரைமொய்ம்புறவிருத்திப
பகர்வரியபொருளுதவிபண்ணினனெவர்க்கும். (௧௫௪)

கோயிலவணெத்தனைகளெத்தனைகுளங்கள்
வாயிலவணெத்தனைகளெத்தனைமடங்கள்
பாயொளிபரந்துயருபைம்பொனினியன்ற
சேயகலசச்சிகரிசெப்பவெளிதாமே. (கருரு)

தூவியனமன்னவர்கடோய்தரெழிலில்லுங்
காவிநிகர்கண்ணியர்நடம்புரியரங்கு
மோவியமதொத்தவருலாவரமியம்முங்
கோவியனடத்தரியகொற்றவனிழைத்தான். (கருசு)

இன்னனவிழைத்தபலவீடரியவந்த
நன்னகரிசாமராசநகரமெனுநாம
மன்னவெழின்மற்றெரரபிதானமதளித்தான்
பொன்பிதிர்சுணங்கிளமுலைச்சியர்புகழ்ந்தான். (கருஎ)

வேறு.

அந்நாண்முட்டினத்திடைநின்றேயடைதந்த
பொன்னார்பூவராகநிலயந்தனைவெய்யோன்
கொன்னேதிப்புநன்குதகர்த்துக்குலைந்துள்ள
துன்னுமன்னன்மற்றதையோங்கப்புரிவித்தான். (கருஅ)

என்றும்வானத்தின்னிடைநாப்பணிலகிற்கு
மென்றென்றாரும்மெண்ணிடவில்வீசிடுபொன்னிற்
றுன்றுங்கும்பமைந்துயருச்சித்தொழிலாய
வொன்றும்பாவைக்கோபுரமோங்கப்புனைவித்தான். (கருகூ)

ஏரார்முன்னிராசவுடையானியைந்துண்ட
தீராநஞ்சுந்தெள்ளமுதாகவருள்செய்த
சீராரரவிந்தையெனுஞ்செந்திருவோடு
மாராநின்றலக்குமிநாராயணனுக்கும். (கசூo)

அவ்வாருடகத்தொளிர்கோபுரமுனைய
வொவ்வாயாவுமொன்றியகோயிலுவந்தாற்றிச்
செவ்வாணாளுமின்னுமணிப்பூண்டிகழ்சேலை
யிவ்வாறுயவேனவையுமொப்பித்திறைஞ்சிட்டான். (கசூக)

தன்னின்கோயிறன்வலமானதலந்தன்னின்
முன்னங்கஞ்சனின்னுயிர்வீயமுடிவித்த
கண்ணன்கோயிலொன்றவன்கட்டியுளதின்சீர்
பன்னும்பான்மையன்னவன்பாயற்கெனுமாமே. (கசுஉ)

கண்ணகன்றவந்நிலயத்தூடிறையும்வீ
ணண்ணுந்தானமின்றடர்வுற்றுநனிவான
மன்னும்பொன்னினாமுடிமண்டபமுனாய
வண்ணஞ்சார்விமானமனேகம்வயங்கிற்கும். (கசுங)

சீறுங்கோதண்டந்திகழ்செந்தாமரைக்கைய
னாறுங்கூந்தற்சானகியோடுநனிவீரம்
வீறுந்தேறும்பின்னவனோடும்விரவுற்றன்
பூறும்வண்ணமங்கொளிர்கிற்குமுவந்துள்ளம். (கசுச)

வானத்தாரேவாழ்தருவேங்கடவன்கச்சி
யானைக்குன்றனந்தவரங்கனரசிங்க
னேனைச்செல்வராயனொடிந்தப்பெருமாள்கள்
வானக்கந்தக்கோயிலினூடேவதிகிற்பார். (கசுரு)

தேனாரம்புயத்தினன்முன்னந்திகழ்வித்த
கானார்சோலைக்கச்சியினம்மானருளாளன்
மானாள்பெருந்தேவியுமற்றக்கலகத்தின்
மேனாடுற்றம்மின்னுநிலயந்தனிலார்ந்தாள். (கசுசு)

பண்டைத்தொல்லைப்பாழ்வினைதேயப்பரந்தாமன்
தொண்டர்க்காருந்தொல்லுலகேகுந்திறலாருங்
கொண்டெய்ப்பின்றியேறுமுபாயங்குலவச்செய்
தண்டர்க்கேயும்பூதபுரிக்கணமர்ந்தாள்வோன். (கசுஎ)

அந்தச்சந்நியாசிகளீசனருளாறே
யெந்தக்காலுந்தண்டுதலின்றியினுமோங்கப்
பிந்திக்கண்டைப்பேரவதாரமெனவந்த
சந்தத்தூப்புற்சந்நிதியார்தேசிகன்றானும். (கசுஅ)

தேனுங்கைக்குஞ்செந்தமிழ்வேதமருள்செய்த
வானுங்கைக்கும்வண்குருகூர்மாறனேமுன்னு
மானுங்கைக்கும்மாதவனேரேபரமென்னு
ஊனுங்கைக்குமாமுளமேதோதுமுயராழ்வார். (கசுகூ)

என்றின்னோரின்விக்கிரகங்களினிதாற்றிப்
பொன்றங்கந்தக்கோயிலுணன்குபொலியச்செய்
தென்றும்பூசையாகமவாற்றினிழைக்கிற்பான்
குன்றில்வருவாய்பலகூரக்குறித்திட்டான். (கஎ0)

வேறு.

ஆரம்போலிருமருங்குமனவரதமொழுகுறுங்கா
விரியினுப்பட்
சீரங்கபட்டணத்துட்செஞ்சுடிகைப்பணமணியின்
சிவந்தசோதி
நீருண்காரிடையிடையேவெங்கதிரினீள்கரங்க
ளுழைந்தாலென்னக்
காரங்கத்திடைபாயவனந்தன்மிசைக்கண்வளரு
மரங்கனுர்க்கும். (கஎக)

வெலற்கருகண்டீரவனன்றெழுந்தருளுவித்தநர
சிங்கனுர்க்கு
மூலப்பரியவேங்கடவன்மேனுடய்தரவங்கு
மொளிருமென்று
சொலற்கரியகரிகட்டமெனுமலையின்சுடர்முடிமேற்
குலவுமாற்கு
நலக்குரியகைங்கரியமவனிழைத்ததெத்துணையோ
நவிலற்பாற்றே. (கஎஉ)

மாவலிபான்மண்ணிரந்துமாகமுறநிமிர்ந்தளந்த
மலராளுதன்
பூவடியைக்குண்டிகையினீர்கொடயன்புரிந்தன்று
துலக்கப்போந்த
தாவருநீர்கங்கையென்பநித்தியசூரிகள்விரசைத்
தகைசானீரான்
மேவருமத்திருவடியைமீண்டன்பினுலகுய்வான்
விளக்குங்காலே. (கஎங)

வந்ததுவேவைகுண்டகங்கையெனவழங்குவரவ்
　　வயங்குதீர்த்தம்
பந்தமறும்யாதவமாபருப்பதத்தின்வடபாலிற்
　　பாயுமின்னு
மந்தநறுந்தீர்த்தமுதலட்டவெழிற்றீர்த்தநிறைந்
　　தகத்தானுள்ளு
மெந்தவிடத்தவர்க்கெனினுமிரும்புளகமருப்புமெழி
　　லிணையின்றேயந்த. (களசு)

ஆரணத்தின்வடிவாயுமனந்தனதேருருவாயு
　　மலங்குமந்தச்
சீரேணற்கொல்லாவரையின்சிகரமிசைத்திகழ்தருசெங்
　　கமலக்கண்ண
னாரணற்குமெதுகிரியார்வல்லியெனுந்தாயார்க்கு
　　நரசிங்கற்கும்
வாரணத்தைநிகரன்னான்வனைந்தசிறப்பெந்தரமோ
　　வழங்கற்கம்மா. (களரு)

காகுத்தனருச்சனையுங்கண்ணனதுபூசனையுங்
　　கைக்கொண்டும்பின்
னேகுற்றங்கத்திநகர்க்கெழிறுருக்கன்பாவைமுலை
　　யிணையிற்றேய்ந்து
மாகுற்றமுலக்கலவந்தவிராமாநுசன்கைம்
　　மலரின்மற்று
மோகத்தினெழுந்தருளியெதுவரையின்முகடொளிருஞ்
　　செல்வச்சேய்க்கும். (களகூ)

கைம்மலர்க்கும்வாகுவிற்குங்கண்டக்குங்காதிணைக்குங்
　　கண்டாருள்ளம்
பொய்ம்மறைத்துப்புலந்தூய்தாங்கோகனகத்தாளிணைக்கும்
　　புகழ்நாசிக்கு
மம்மிகுத்தவரைதனக்குமரதனமேவிதம்விதமா
　　யழுத்திமின்னுஞ்
செம்மிகுத்தபொற்பணிகள்செய்தளித்தவெத்துணையோ
　　செப்பற்காமோ. (களஎ)

எந்தாயாரெதுகிரிவல்லியின்குமிழையிகழ்நாசி
நுதிசார்நாலுஞ்
சிந்தாவெண்ணிலவொளிருமொருமணியுஞ்செவியிடையே
செல்வப்பிள்ளைக்
கந்தாழாதொளிர்தரளமதுவொன்றுமாமிரண்டே
விண்ணும்மண்ணுந்
தந்தாலுமிணையாகாத்தன்மையவென்றூற்பிறக
டமக்கிடுண்டோ. (கஎஅ)

எம்பெருமான்வைகுந்தத்திலகுறும்பீதகவாடை
யியைந்தானேனு
மும்பர்தொழுமேதுவரையினுச்சிதனிலப்பரம
னுடுக்கச்சேர்த்த
வம்பரம்பீதகமேனுமதனிடையேநிரைநிரையா
யலங்குஞ்சோதிப்
பம்புபலமணியினலாற்பரந்தாமற்கெதுவுகப்போ
பார்மினீரே. (கஎகூ)

மேதினியின்மணிபலவுமிடைந்திடினுமொருமணியின்
மினுக்குக்கொவ்வா
வேதமறும்பலமணிகளிழைத்தமுடியொன்றியற்றி
யிதற்குநாம
மோதுகிருட்டினராசமுடியென்னவுரைத்ததனைச்
செல்வப்பிள்ளைக்
காதரவினணிந்தனனன்றரசவுடையானணிந்த
வதுபோலம்மா. (கஅ0)

செல்லுங்காற்சிகரமுடன்சேணளவுஞ்சிலம்பொன்று
செனுமென்றுருஞ்
சொல்லும்பேரிரதமிழைத்தொன்றுடித்திங்கடொறுந்
துலங்கன்னூற்கே
யொல்லுங்கிட்டினராசத்திருநாளென்றெென்றிழைக்க
வதன்கட்டேரிற்
புல்லும்போதம்முடியைப்புனைந்தூரமறுகிடையே
புரிந்தான்மன்னே. (கஅக)

அத்திருமாமணிமுடியுமாண்டுதொறுமவ்விரதச்
சிறப்பிற்சூடி
யெத்திசையோர்களுமிறைஞ்சவெழின்மறுகினெழுந்தருளி
நிலயம்போந்த
வத்துணையேவயிரமுடியழகுபெறிராசமுடி
யவையேமானச்
சத்திரசாமரையாதியுடன்மீளவரண்மனைக்குத்
தானுஞ்செய்தான். (கஅஉ)

எம்பெருமான்றிருவிழவிற்கிவன்பரிசாரங்களுட
னேகுங்காலை
வம்புசெறிகுழற்புயனும்வார்கிழியவளர்முலையும்
வாளார்கண்ணு
மம்பிறையினணிநுதலுமார்ந்தவமைத்தோளியர்க
ளுடனேயாங்கே
தங்கியிடச்சினகரத்தின்றன்னருகோர்மந்திரமுந்
தயங்கச்செய்தான். (கஅங)

வேறு.

கஞ்சனங்கடுக்குங்கண்ணர்கதிர்முலைப்போகந்துய்த்த
மஞ்செனுங்கரத்தினந்தமன்னவனிணையமாடித்
தஞ்சமென்றடைந்தோர்தீயவினையெலாந்தளரநோக்கு
மஞ்சனவரையினற்குமரும்பணியயர்வானெண்ணி. (கஅச)

அன்றிராசுடையான்சிக்குத்தேவராசுடையானுய
வன்றிறலிருவர்தாமும்வனைந்துவேங்கடத்தாற்கீந்த
நன்றுதண்டரளமாழைகளினிழைத்தொளியைநல்கு
மின்றிருக்கவிகைதாமுஞ்சிதிலமாயிருத்தல்கேளா. (கஅரு)

பணஞ்செலவதிகமிட்டுமுன்னினும்பத்துப்பங்கு
குணந்திகழ்வனப்புக்கூரப்புதுக்குபுகொடுத்துமற்றுங்
கணங்கொளுமணியிழைத்தபணிகளேமுதலபல்ல
வெணுந்திறம்விலையயின்றுமெவர்களுமிழைத்துத்தந்தான்.

அங்காரமெனச்செஞ்சோதியலங்குமாடகத்திரண்டு
கங்காளம்பெரிதாயாற்றிவைகளுங்கமழும்பொங்க
லங்காரவவையிரண்டினமுதுசெய்திடுமாசெய்தான்
கொங்கானெய்முழங்கைவாரக்கூர்ந்திருஞ்சுவைத்ததாமால். ()

அத்திருப்பொங்கனுளுமயவிடமிருந்துபோந்த
வித்தகமறையோர்க்கியவிழைவினிற்பணித்துவாசக்
கப்புரங்கமழுநானமாதியகலந்தசாந்த
நித்தமுந்திருவாழ்மார்பத்தணிதரநிருமித்தானல். (கஅஅ)

வானளாவவரைமீதந்தவானவருணவின்விஞ்சு
மானறுஞ்சுவையாறுள்ளவோதனமகிழ்விஞளுஞ்
சீனிவாசனைச்சேவிக்கச்சேர்பவரருந்தச்செய்ய
தானசத்திரமொன்றுங்கேயழகுறவமைத்தானன்றே. (கஅகூ)

அன்னசத்திரமதன்கணந்தணவறியார்வந்து
சொன்னதக்கணமவர்க்குச்சுபந்தருவதுவையாதி
மன்னுசத்தருமமெல்லாமகிழ்வொடுபுரியச்செய்தான்
முன்னசற்கருமமுள்ளார்முனிவரோவறத்திற்கென்றும். ()

வேங்கடத்துறைவாற்கிந்தவிதமினுமிழைத்துமற்றப்
பாங்குறுந்தலங்கடோறும்பண்புறும்பலவுமாற்று
யாங்கணுமிவனிஞருமறமுணர்ந்திழைத்தாரின்றென்
றோங்கியவுவகையோடுமுரைத்திடுமுரையும்பெற்றான். (கசுக)

காயகர்கழையின்கூத்தர்கவின்பெறநடிக்குமஞ்ஞைச்
சாயலரிரதமூறுங்கவித்திறஞ்சாற்றுஞ்சான்றோர்
தூயமாமறைமுன்விஞ்சைத்துறையெலாங்கைபோயுள்ளார்
மாயிரும்புவியின்மற்றுமன்னவருவக்கவல்லார். (கசுஉ)

எனைப்பலரிருந்தாரந்தவிரும்புகழிறைவன்காலத்
தனைப்பலர்களுமன்றன்கையரும்பரிசடையாராரே
கனிப்பழுமரமொன்றுள்ளூர்கண்டற்றாலரியசெல்வ
நினைப்பழ்குடையான்கண்ணேநேருமெலென்பமன்னே ()

ஆய்மறைவழுவாதோதிமகம்பலவயர்ந்துமுத்தீ
யோய்வறும்புரத்தற்கொத்தவேதியர்க்குணர்ந்துமுன்நான்
காயவக்கிரகாரஞ்செய்தளித்தனனவற்றிற்கேய்ந்த
சேயபல்பொருள்களோடுஞ்செழுவளவயல்களோடும். (கசுச)

கவிகடார்க்கிகர்களென்னுங்கரிகளுக்கரியேறுய
புவிபுகழ்தூப்புற்பிள்ளைபூசைசெய்கடவுளன்று
ரவிர்மதமிரண்டுமோராதனம்புரிந்தவனியெங்குஞ்
செவையுறத்தழைக்குஞ்செய்யபரகாலமடமேயென்றும். ()

தங்குலகுருவாயோங்குந்தன்மையையுணர்ந்தாங்கே
வெம்பவங்கழலுமாறுதாபமுன்னைந்தும்வேய்ந்து
சிங்கவேறனையானந்தமடந்தனக்கயர்ந்தசீர்மை
யெங்களாலியம்பலாமோவெவர்கண்மற்றியம்புவாரோ. (கசுசு)

அத்தகைச்சிறப்புமற்றையமீகோபிலமடமுறைய
வெத்தகைமடங்களுக்குமியல்புளியிழைத்தானென்ப
குத்திரமகலயாவுங்குழிக்கொடுகுலவக்காக்கும்
வித்தகஞ்செறியும்வேந்தர்வேற்றுமையுணராரன்றே. (கசுஎ)

வேறு.

வண்டுண்டானம்வழிகதுப்பின்வரைகள்வரையின்றுளவரையன்
கண்டுண்டாயவறம்பலவுங்கவினவிழைத்துக்காத்துறலும்
பண்டுண்டாயபண்பதினும்பல்கச்செல்வம்பூரணையன்
கொண்டுண்டாயமதிவலமாவரசன்கோலைப்பெருக்குகையில் (கசுஅ)

மீகளாமதியிற்கிளர்நிலவைச்சொரியுந்தண்ணந்தரளவடத்
தோளாரரையன்றுனிசிறிதுதுதைந்தானென்றுதோன்றுதலும்
வாளாவிலகிவிண்டனனவ்வமைச்சற்குரியவண்மையினிற்
ருளாரன்றேசிறிதிழிவுமானந்தாங்குந்தன்மையவர். (கசுகு)

பின்னேவருவதறிந்துதவும்பெரியாரின்றிப்பெருமகனுந்
தன்னேரரியபுந்தியினேதரணிதாங்கத்தலைப்படலு [வினை
மென்னேயிறைவன்றொழிலிழைத்தற்கியைந்தாராற்றிப்போந்த
கொன்னேபாரம்வெண்மழுகத்தோர்கோடற்காயததுமற்றும். (உ00)

கோலின்கீழார்குடிகளிடைக்கொண்டவரியினெறியென்னே
யேனும்வருடந்தொறும்பலர்களேகிக்கொடுமினிறையென்று
ஞலந்தாயமுறையையாநம்பாலாயதெனவழுதாற்
காலுங்கையும்பிணித்துதைப்பார்கள்ளரென்னக்கருணையிலார். ()

காணித்தீர்வையாண்டுதொறுங்கட்டற்பாலதித்துணையென்
ருணற்கருத்தின்வரையறைசெய்தாங்குக்கோடலதுவின்றி [க்கிக்
வீணிற்பொருளின்வேட்கையெழவிரைந்தேயுள்ளோர்தமையொறு
கோணிக்குடிகள்குலைந்தழவேகொள்வாரிறையுமுணராமே. (உ0உ)

வரியேகொள்ளும்வகையீங்குவைகத்தீயோர்தமையொறுத்துப்
பரியாநல்லோர்தமையளித்தபாங்குமென்னென்றறைகுதுமாற்
பரிதானந்தந்திடுமவனேபண்பினெறியினொழுகுபவன்
றெரியார்தீமையொழுகெளியார்தீயார்தெண்டக்காங்குரியார். ()

தண்டம்புரியுந்தன்மையையுந்தன்னமீங்குத்தெரிக்குதுமாற்
கொண்டுஞ்சரிகைநாசிசெவிகொய்வார்கைகால்குறைத்திடுவார்
விண்டங்கரியவரைமுடியினுருளவுருட்டிவிழைந்துகப்பார்
புண்டங்கயில்கொள்படையுடலிற்புகுமாறின்னம்பலபுரிவார். (உ0ச)

பனையார்கரத்திற்கொண்டுதறிப்பண்ணுவிஞ்சைபலவிழைக்க
முனையார்கோட்டுமுரண்மதமாமுகப்பவளித்துமுதங்கொள்வார்
தினையார்தீங்கிற்கிறப்பவிழைத்திறப்பவிழைக்குந்தீங்கினரை
நினையார்வாளாவிடுத்திடுவார்நெறிதானென்றுநேர்மையிலார் (உ0ரு)

அரையன்றொழில்களாற்றுமுறையதிகாரிகளிவ்வாறயரக்
கரைகண்டிலராய்க்கடுந்துன்பக்கடலுக்கினையுமனைவோரும்
புரையொன்றின்றிப்புவிபுரக்கும்பொருவில்கவனரிடம்புலம்ப
விரைவின்னவனுமைசூராள்விதமங்கடையவாய்ந்துணரா. (உ0சு)

குடிகள்படருங்குறிக்கொண்டேகோமானுள்ளம்போமாறே
யடைவின்மலியவூர்களையுந்திறையொன்றின்றியளித்ததனல்
வடுவில்வருவாய்வந்ததினுங்குறையாநாளும்வருவதையு
நடுவினுணராநாடதனைநன்குதிருத்தத்துணிந்தனனல். (உ0எ)

துணிந்தோரிறைமைத்தொழிறுறையிற்கைபோயுள்ளான்றனைவிடுக்
வெணும்பேரறிஞனவன்போந்தவ்வினையில்லாட்சிதனையேன்றே [க
யிணங்காதிறைவற்கிரும்பொழிலையின்னுதிழைத்ததீயர்களை
யணங்காவுள்ளமகன்றொழியவகற்றிப்புரக்கப்புகுந்தனனால். (உ0அ)

வேறு.

முத்திறத்தனவாற்றன்முழுதுள
வத்திறத்தெழிலாங்கிலேயாருழை
யுத்தமத்திருநாடுறைந்தோங்கிய
தொத்திரும்பகலென்றுலகோதுமால். (உ0கூ)

ஏரிகட்டினரின்குளம்வெட்டினர்
வாரிவற்றரும்வாய்க்காலெடுத்தன
ரூருமுற்றுநகரியுமொன்றுறச்
சீருறும்பெருவட்டைகள்செய்தனர். (உக0)

வாயுவேகமுறம்புகைவண்டியு
மேயுமாமனவேகமென்றேத்துறுஞ்
சேயதந்தியுஞ்சேணெழச்செய்தன
ராயவல்லவராரவற்றின்றகை. (உகக)

காடுவெட்டிக்கழனிபலவிழைத்
தேடெழிற்பலநெற்பயிரேற்றியே
பாடுபட்டுப்பயன்பலதுய்த்தெந்நா
நாடுமுற்றுநலம்பெறச்செய்தனர். (உகஉ)

கப்பனுதிகமீசனரின்னன
செப்பரும்பலசீருறச்செய்ததா
லொப்பரும்வளநாளுமுயர்தர
வப்பெரும்பணக்கோசமுமார்ந்ததாம். (உகங)

ஆண்டனேகமகன்றபினம்மன்னன்
மீண்டுகோலினைமேவரத்தாணிதம்
வேண்டுமொறுவிழுத்தகவாக்கியுங்
காண்டிலாதொருகாசளவென்பரால். (உகச)

பின்னராளப்பெறுமகவின்றியே
மன்னவன்மனமங்குபுழுப்புற
வெண்ணினன்சுவீகாரமிழைத்திடக்
கன்னல்வில்லிகடுக்குமோர்சேயினை. (உகரு)

புத்திரப்பெருக்கின்றியபூவிது
வெத்திறத்துமினியெமதாகுமென்
றுத்தியிற்சிலருள்ளிமகிழ்ந்தனர்
பித்துவிஞ்சும்பெருவிழைவென்பரால். (உகசு)

ஆடுதாழ்வடத்தாரகலத்திறை
பீடுறுஞ்சாமராயனென்பேரனைக்
கோடல்செய்துபிற்கோட்டினன்வெண்முக
வாடலாருமதிபனுக்காங்கதை. (உகஎ)

கொண்டிடுஞ்சுவீகாரங்குலைதரக்
கண்டழுக்கறுப்போடுகேலகஞ்செய
மண்டுபுண்ணியமாக்கள்சிலரெணம்
விண்டுவெள்கிவெதும்பினருள்ளமும். (உகஅ)

பூமிபாரம்பொறுத்துச்சிறிதுபோழ்
தேனுமின்னுயிர்நீப்பலென்றெண்ணியே
தாமமாமணித்தாருறமன்னவ
னுமனேகமுயற்சிகளாற்றினன். (உகசு)

மற்றுமன்னனரசுமணக்குமா
றுற்றியாமிழைப்பேமெனவொண்பொருள்
பெற்றுவஞ்சமிழைத்தபிறன்பொருட்
கற்றநோக்குமவர்பலராயினர். (உ௨௦)

எண்ணமெய்துதலின்றியிறையவன்
புண்ணினுள்ளம்புலம்பப்புவிநசை
மண்ணின்மாய்தரமாய்ந்துதுறக்கமே
நண்ணினனவணன்மையுந்துய்க்கவே. (உ௨க)

மும்மடி கிருஷ்ணராச வுடையார் சருக்கம் முற்றிற்று.

ஆக, செய்யுள்— கூகஅ.

பதினாறுவது

சாமராசேந்திர வுடையார் சருக்கம்.

காளியன்முடியினடித்தவன்கருவங்
கவிழ்தரக்கருணைசெய்கண்ணா
நீளிரும்புகழேநிகழ்த்தவாய்செவிக
ணிரந்தரங்கேட்டிடவுனதை
யாளரும்பதத்தையங்கையர்ச்சிக்க
வளியனேன்றலைநிதமிறைஞ்சக்
காளமாமுகினின்னழகினைக்கண்டு
களித்திடக்கண்ணெனக்கருள்வாய். (க)

அப்புறமாங்கிலேயருக்கதிப
ராட்சியையளிக்குதுமரைய
னொப்புறக்கொண்டமகற்கெனவிடுத்த
வோலையையுணர்ந்தனரவருஞ்
செப்பருமுவகைச்செழுங்கடலாடிச்
சிறுக்கமிலவர்குணப்புகழத்
தப்பருமுந்தமதலையுங்குழவித்
திங்களிற்றழைத்தனனாளும். (உ)

அமைச்சருக்கமையுந்தகையெலாங்குடிகொ
ளரங்கவாரியனெனுமறிஞன்
கமைக்கொருநிதியாங்காவலச்சிறுவன்
கலைக்கடல்கடக்குமாறிழையாச்
சுமைக்குளுஞ்சுமையாவளித்திடுஞ்சுமையைச்
சுமக்குறுமறிவையும்புகட்டி
யெமக்குறுமிறைவனிவனெனாவெவரு
மிசைக்குமாறிழைத்தனனென்ப. (ங)

சோடசகலையினிரம்பிடுமதிபோன்
மன்மகன்சோடசவயதி
னீடியவனப்பினிலவுறக்காணா
நெறிவழாவத்தகையமைச்ச
னேடவிழ்குழலியொருத்தியையவன்ற
னெழிற்புயத்திசைக்குமாறெண்ணி
நாடினன்குணனுங்குலனுநல்லொழுக்கு
நண்ணுமோர்கன்னிகாமணியை. (ச)

பிறந்தனன்பரத்துவாசகோத்திரத்திற்
பெருகியநரசராசன்முன்
னிறந்திடுமகப்பற்கியைந்திடுஞ்சகல
னீன்றனன்மூன்றருஞ்சேயைச்
சிறந்திடுமவருளிருவர்பெண்மணிகள்
செல்வன்மூன்றுமவனவனே
திறம்படுகலையுநீதியுந்திணிந்த
காந்தராசரசெனத்தெரிப்போன். (ரு)

அவர்தமையளித்தவரசருந்துறக்க
மாண்டெழுமக்களும்பெருமா
ளவிர்தருங்கருணையான்வளர்ந்துறலு
மவர்களுண்முன்வருமரிவை
திவளொளிமணியிற்றிகழ்தருமுடலுந்
தெரிப்பருவனப்புநுண்ணறிவுஞ்
சுவையுறுமொழியுநற்குணச்சுமையுந்
துலங்குவதுணர்ந்தனன்மற்றும். (சு)

அங்கமோராறினமைவுறுஞ்சோதி
டந்தனிலான்றவராய்ந்தே
பங்கமின்றுரைத்தபரிசினலவணி
பரித்திடுமரசியாய்த்துரிசி
றங்குலந்தழைக்கும்புதல்வரைப்பயந்து
தளிர்த்திடுமென்பதுந்தெரியா
வங்கவடனையேயரசினுக்குரிய
துணைவியாயயர்தரத்துணிந்தான். (எ)

துணிந்தொருதனிநல்லோரையிலவளைத்
துலங்குறுமலர்க்கரம்பற்றக்
கணங்கொடுகளிவண்டுமிழ்மதுவார்ந்த
கலம்பகத்தொடையலாடகலன்
பணந்தனைப்பரலையெனவிறைத்தயர்ந்த
வதுவையின்பரிசுநாமறைய
வெணுந்திறமுளமோவிந்திரன்புதல்வற்
கிழைத்ததற்கிணையெனலென்னே. (அ)

நனந்தலையுவரிமேகலையவனி
நரபதிக்கிழைத்ததற்கிரட்டிப்
புனந்தலையுலவும்பூம்பிணைவிழியாட்
கிருங்கலைத்திறமெலாம்புகட்டிக்
கனந்தலைவருமாங்கிலையமும்புரக்குங்
கருத்தையும்பயிற்றினன்கருதா
மனந்தலைவருமுன்மதிவலோராய்ந்தே
மாடுவததற்கியல்பன்றே. (கூ)

அத்தகையரியவரசிளங்குமர
னயில்விழிக்குயிலுடனளவி
யொத்தவைம்பொறியினுறுசுவையொருங்கே
யுண்டனனூர்ந்தனன்போதப்
பத்துடனிருநான்கிணைந்திடுவயதுங்
கழிதரப்பாரகச்சுமையை
வைக்குதுமரசன்புயத்தெனவெள்ளே
வாண்முகத்ததிபர்கள்வழங்க. (க0)

கண்டதுமகிடன்கடிநகர்ப்பொழிலுங்
களிப்புறநகரமுங்காவல்
கொண்டுயர்ந்தோங்குங்கோயிலுமுதல
மணிகளுங்கனகமுங்கொண்டு
விண்டணிநகரின்விழுத்தகவணிந்தார்
விலையிலாமணிமுடிபுனையு
மண்டபத்தொளியிற்கங்குலும்பகலா
யிலகிடினுரைப்பதென்மற்றும். (கக)

வேறு.

ஓராயிரத்தெண்ணூற்றெண்பத்தொன்றுவதுமார்ச்சி
நேராகுவிக்கிரமத்திடைநிகழ்பங்குனிமதியி
லேரார்பிறைநுதலாளொடுமணியாதனமிவர்ந்தே
பாராளிறைபொன்மாமுடிபண்பிற்புனைவுற்றான். (கஉ)

பொன்னாரரிபுகலாசியின்மறையோர்மிசையிறைத்தார்
மின்னார்துவரிதழ்வாய்கொடுமிளிர்மங்களம்படித்தார்
தென்னாதெனவெனவண்டறைதேமாமலரெவரு
மன்னார்மிசைதூவிக்கரமறைந்தாரவாரித்தார். (கந)

களித்தாடுறுகலவக்களிமயிலன்னவர்நடித்தா
ரொளிக்காருயர்புகழ்யாவையுமுறைவந்தியர்படித்தார்
துளித்தாரசைமணிபொற்குடைதுலங்கத்திசைபிடித்தார்
குளித்தார்முதவுததிக்கிடைகுலவவ்விழவெடுத்தார். (கச)

முரசோதையுமுழவோதையுமுடுகுங்கிடிகிசையும்
வரைசேர்கரிபிளிறைறங்கதிவாசித்திரள்கனைப்புந்
தரைசேர்தலமொன்றேவுயர்தருசேர்தருதலமு
முரைசேர்செவிசெவிடெய்துறவோங்கிப்பரந்தனவால். (கரு)

மதிமந்திரிரெசிடெண்டுடன்மகிழ்சென்னைகவனரு
முதமங்கெழுமுகமன்சொலியுதவிப்பலபரிசே
யதிகஞ்சுடர்விடுமாமணியணியாரமேழுதல
விதமிங்கிதினிலையென்றவரிறும்பூதுறவிழைத்தான். (கசு)

தத்தந்நிலைதகுமாறடைதரையாள்பவர்முதலோர்க்
கத்திண்புயவரசன்றருபரிசங்ஙனநிற்கக்
கத்துந்திருமறைவாணருங்கையேந்திரவலரும்
பெற்றங்ககமொத்துண்டதுபேசுந்திறமெவனே. (கஎ)

சுவைவிஞ்சிடுமிசைவாணருஞ்சூழுங்கணிகையரு
நவையின்றியபரிசுண்டதுநனியோர்புறநிற்க
வெவையுந்தருகவிவாணருமெண்ணும்புலவர்களுங்
குவைகொண்டதுமிடிசென்றதுங்கூறுந்திறமுளமே. (கஅ)

வேறு.

இன்னணமகுடஞ்சூடுமெழில்செறியரசனானத்
தன்னனுடைவின்முற்றுந்தொடங்குபுதழைக்கவாண்டு
பன்னிரண்டுடனேயொன்றிற்பரிந்தவனிழைத்தவெல்லாம்
பன்னிடினெவர்தாமுள்ளம்பான்மையிலுவக்கலாற்றுர். (கசு)

சுடர்விடும்பசும்பொன்னெங்குஞ்சோர்வறவிளையுநாட்டிற்
குடிகளின்வளத்தினேறுங்கோலெனக்குறிக்கொண்டன்னுன்
றுடியிடைமனைவிமக்கட்டொகுதியினதன்கணேயம்
படர்தரமிகுதிவாழும்பான்மையிற்பரிந்துகாத்தான். (உ0)

காடெலாங்கழனியாயகழனிகண் முழுதும்பாயு
மாடகத்துகளாமெக்கலயர் தரும்பொன் னித்தெண்ணீர்
வீடறநிரம்பலாயவிளையுளுஞ்சிறந்தவாற்ரு
ஞடெலாங்கனகமாகினகர்வளமறிமினீரே. (உக)

தன்னதின்ஞணை தன்னைத்தலைமிசைச்சுமந்துநீதி
தன்னமுந்தளர்தலின்றியயர் தரும்வினைஞர் தம்மிற்
பின்னமொன்றடையாவண்ணம்பிரசைகட்குணர்ந்துநாளுங்
கன்னவிறிரமேடோட்காளைகண்டுபோந்தனனுன்மற்றும். (உஉ)

காணுதற்கெளியனுகிக்கடுமொழிகடிந்துகேளாப்
பேணுபுபிரசைமாற்றம்பெட்பினபிழையாதாற்றி
வாணிலாமுறுவலார்தம்வார்த்தையினினியபேசிச்
சேணிலாஞ்சீர்த்தியாளன்செய்தனனரசுமன்னே. (உ௩)

ஆண்டுதோறகனன்னுடியாவையுமரிதினெய்திக்
காண்டுகண்ணெவ்வோருருமேழையுங்கனமும்பேதம்
பூண்டிடாநெருங்குநோக்கிப்புகறருகுறைகண்முற்றும்
வேண்டுபுசெவியுற்ருங்கேவிரும்பியவிழைத்துப்போந்தான். ()

மற்றுமாநவமிதோறுமாடருந்திருவிழாவிற்
கொற்றவெண்குடையினீழற்குலவரிமணியினுய
பெற்றபேர்தவிசிருந்துபெருமிதம்பெருகுமன்ன
னுற்றுளங்குடிகளோதவோரவையொளிரச்செய்தான். (உரு)

அத்திருவிழவேயிந்தவவனியினரிதினுளு
மெத்தகையிறைவரேனுமியற்றுவோரிதருண்டே
சொற்றிடற்கரியவந்தவைபவஞ்சொன்னேமுன்ன
ருத்தமனெனுமிராசவுடையனஞ்சரிதையூடே. (உ௬)

விசயமாதசமிகாறும்வெண்முதற்றிதிமுன்னுகத்
தசதினச்சிறப்புநன்குதகைபெறவணிந்தபின்னர்
மிசைவருபரிதியன்னமின்னுபொன்முகட்டினேங்கும்
வசையிலோர்மண்டபத்தூடவையொன்றுவளரவைகும். (உ௭)

சங்கமங்கதனிருட்டிற்றகைவளர்பகுதிதோறுந்
தங்களுக்கிணையாயாய்ந்துதேர்ந்துறைசனங்கள்விட்ட
பங்மொன்றணுகாதெண்ணிப்பகர்வலம்படைத்தநீரா
ரங்குவந்தடைவர்பல்லாற்றும்பொழுதடைமாடென்ன. (௨௮)

கூடுறுங்கோட்டிதன்னிற்கோமகன்கோலால்வீழாய்
நாடியேநிலையத்தாங்கிநல்கமாத்தியனுமொவ்வோர்
பாடுறும்பிரிவினோரின்பகர்வெலாமமையக்கேளாக்
கோடருமிறைகளேற்கக்கூறுவனினிதுமாதோ. (௨௯)

ஏகியவருடந்தன்னிலியற்படவிழைத்ததின்னு
மாகலாகயனந்தன்னிலாற்றுறத்துணிந்ததெல்லாம்
வாகைசேரிறைவன்வாய்மையெனவரைந்தவைக்கண்வாசித்
தோகையினெவருங்கேட்பவுணர்த்துவன்முன்னரோர்வான். ()

வரவொடுசெலவுமோதும்வழங்குறுவகையுமோதும்
புரைதபவளிக்குநீதிபோற்றியவகையுமோது
மரசிறைநெறியைவிள்ளாதாகியவகையுமோதுங்
கரவடமணுகுங்கொல்லோகணக்கொடுநடப்பார்கண்ணே. ()

வேதனம்பெரியதாயவிழுமியோர்க்ககனுடெண்ணி
யாதரம்பெருகியுய்க்கவடைந்தவர்தமக்குமாங்கே
மேதகவிழைக்குமுண்டாட்டதன்பகடெவர்தாமேவுங்
காதகங்குளிர்ப்புறுதார்கருத்தகந்தளிர்ப்புறுதார். (௩௨)

புரக்குமித்தகையிற்போரிற்புகுமெனிலரியேறொக்கு
முருக்கிளர்குமுதவாயாரூறுதேனதரமாந்து
மருக்கமழ்தொடையன்மன்னன்மண்டலமகிழுமைந்து
திருத்தகுமக்கடம்மைத்தேவிதோண்மருவிப்பெற்றான். (௩௩)

பஞ்சரத்தினநேரந்தப்பாலகரவருண்மூவர்
பஞ்சரத்தமுதிற்பேசும்பைங்கிளியனையநீரார்
குஞ்சரக்குழகக்கன்றேயனையவரிருவர்கோமா
னெஞ்சுறக்களிப்பநாளுநேர்பெறச்செழித்தாரன்னார். (௩௪)

வேறு.

சிங்கக்குருளேயெனச்செழித்துவருமுற்பிறந்தோன்
வங்கக்கடல்புடைசூழ்வையம்புரந்திடுவான்
றங்குற்றதன்மையுடன்றான்வளர்ந்தானுமமவற்
கங்கிட்டனர்கிருட்டினன்பெயரையாய்ந்தடைவே. (௩௫)

ஆங்கிலமுங்கன்னடமுமாராயுமின்றமிழு
மோங்கும்வடகலேயேமுன்னுயவொண்கலேகள்
பாங்குபெறவவற்குப்பயிற்றுவித்தானுய்ந்திறைவன்
றீங்ககலுங்கல்வியினுந்திண்பொருளும்வேறுளதோ. (௩௬)

புத்திரரைப்பெற்றெடுத்துப்பூவலயமுண்மகிழ
வித்திறத்தினுளரையனேய்ந்தசிலகுறிகண்
மற்றுணர்த்தத்தேறியினிமாள்வேமெனவலியா
வித்தகத்தினேர்பொழுதுவைகியிடும்வேலேதனில். (௩௭)

தன்னருகுவந்துதொழும்போதகநேர்தன்புதல்வன்
முன்னவனேக்கைகளினுன்முரண்சேருரத்தணேயா
மன்னுதிருவுச்சிமுகந்துள்ளுருகிமாழாந்து
தன்னமசைவற்றிருந்துதானுணர்ந்துமற்றுரைப்பான். (௩௮)

தாழாமதிமரபுதானுயரவந்திடுநீ
யூழானுஞற்றுபவையோர்ந்துரைத்துங்கோடியினி
யாழாழிவையகநின்னம்புயத்தின்மேற்சுமந்து
வாழாவகமகிழவண்மைபெறவாளுகையில். (௩௯)

நண்ணுதார்நண்ணியவர்நாடாநொதுமலரென்
றெண்ணுதமயமுறினேய்ந்ததுலேபோலமர்ந்தே
கண்ணுரக்கண்டுளதைக்காணின்மிறைபொறுப்பாய்
தண்ணார்முறுவலுடன்சின்மொழியேதான்புகல்வாய். (௪0)

பூசுரரைப்போற்றிடுகபுல்லியரைப்பேணற்க
தேசிகரைமேலோரைத்திகழுங்கடவுளரை
யாசறவேபூசனேசெய்தன்னேமொழிகடவா
தீசனதேயேதுமெனவெண்ணியிருபற்றறுப்பாய். (௪௧)

இல்லார்தமக்கிடுகவீரிரண்டையேபயக்கு
மெல்லாருங்கல்விபயின்றந்நெறியினேன்றொழுகி
யெல்லாவினைகளையுமெண்ணித்துணிந்திடுக
நல்லாருழையவர்சொனன்னெறியைவிடற்க. (௪௨)

நாடுங்குடிவளரநம்பேறுந்தான்வளர்மென்
றாடுமைவையனுங்காதாழிலொன்றுஞ்சில்பொழுதில்
வீடும்வகையுளியேவேண்டுவனதாமுதவிக்
கோடல்புரிமற்றளியிற்கொள்ளுமலர்த்தேனெனவே. (௪௩)

இடிக்கும்பெரியோரினின்மொழியையேற்றிடுக
கெடுக்கும்பகைவர்பணிமொழியைக்கீழ்த்திடுக
வெடுக்குமபவாதக்கெந்நாளுமஞ்சிடுக
விடுக்கண்வருபோழ்தும்வாய்மையிகவற்க. (௪௪)

கற்றஞ்சுந்தீவினையைக்கண்ணன்னநாவலர்பா
லுற்றென்றுநீபயில்கவூறொழியுஞ்சச்சனர்கண்
மற்றென்றுங்கண்ணோடிமாணாமறமகற்றி
யற்றந்தருசினத்தையடிவேரரிந்திடுக. (௪௫)

வருவாய்க்கிழிந்தசெலவயர்ந்திடுகமற்றயரு
மருவாக்கடஞ்செயற்கமாற்றலரின்சேடமொடு
தெரியாவருகடனின்சேடமுந்தீயெச்சமிவை
விரிவாயெழுந்துடனேவீந்தொழியச்செய்தருமே. (௪௬)

ஆராயறிவுவயதான்முதிரமாத்தியர்பா
லேரார்வினைகளிருந்தாராயுமேல்வையினிற்
சீராரும்பஞ்சரத்துச்செந்தார்ப்பசுங்கிளியும்
பாராவகமிருந்துபண்புறவேயெண்ணுதியால். (௪௭)

மற்றோர்மனநலியுமாற்றநகையானும்
பொற்றோளென்கண்மணியேசற்றும்புகலற்க
சொற்றொழும்புல்லியர்க்குஞ்சொல்லரியநல்லோர்க்கு
முற்றோருயர்வுமிழிவுமுளுற்றற்க. (௪௮)

நெடுநீர்மறதிமடிதுயிலுநீத்திடுக
நடுவாமுன்னையந்தவர்பாடுடாதார் தம்முழையும்
வடுவாகவையமொடுதேறுவையும்வையற்க
விடுவாய்மறத்தல் விளம்புமொழியாண்டெனினும். (சகூ)

முன்னோர்மொழி நாலுண்மோகத்தயர்ந்துமன
மன்னுவசைமாற்றமற்றென்றும்பேசற்க
வென்னுவிவைமானுமேய்ந்தபலவின்மொழிகள்
பொன்னார்மணிப்பூணன்புந்திசெலப்போதித்தான். (ருo)

வேறு.

செவியுறுமவைபவன்சிறுவனுகினு
நவையறுமனத்தெலாநணுகக்கொண்டிறை
யுவகையிற்பெருகுறவிறைஞ்சியோர்சன
னிவையெமக்கியம்புறவிவணென்னென்றரோ. (ருக)

அகறலுஞ்சிலபகலரையனோர்தின
நகைமதிமுகத்தியுநலங்கொண்மக்களு
முவகையினுழைவரவூரிற்றீர்ந்துபோ
யகமகிழ்வங்கநாடடைதன்மேயினன். (ருஉ)

ஈண்டுயர்பரதகண்டத்திற்கேய்தலை
பூண்டுறுநகரமென்றெங்கும்போற்றுறுங்
காண்டகுங்காளிகட்டத்திற்சென்றவண்
மாண்டகுஞ்சிறப்பொடுவதிதன்மன்னினன். (ருங)

அன்னமாநகருழையரம்பைமார்பொதுள்
பொன்னின்மானகரிடைப்பொருந்துமாறுபோ
லின்னலஞ்சிலபகற்பருகியெய்துறப்
பின்னையுற்றதுமவற்கடைவிற்பேசுவாம். (ருச)

திவசமொன்றவணெழின்மிடற்றிற்சில்லெண
வவசமாஞ்சிதளஞ்சிறிதுண்டாயதா
றுவசமாகளிற்றனுந்தொண்டையாமயங்
கவசமானத்தனமறைப்பக்காண்டுமால். (ருரு)

என்றுழையிருந்தவர்க்கியம்பவேவருஞ்
சென்றுநம்மிறையவனிதரதேயங்க
ளொன்றலபலபடவுழன்றுவந்ததா
ணின்றநீர்வேறுவேறிருந்தநீர்மையால். (௫௬)

மாறுபட்டவற்றினைமணந்ததாஞ்சிறி
தூறுபாடெனவவருளத்தின்முன்னுபு
தேறினர்தெரிவுறத்தெரிப்பத்தேறினான்
வீறுறுமிருதுவும்பனியின்விம்மலால். (௫௭)

தொண்டையின்சிமிழ்ப்பதுதுன்னலாரென
மிண்டுறப்பயப்பயமிளிருவாட்கரன்
கண்டனணிதுவெனமைக்கவருறுமையே
விண்டெழலரிதெனவிளம்புற்றனரோ. (௫௮)

பழுத்தசேயறிவினர்பாங்கராங்குறும்
விழுப்பமாரமைச்சரேமுதலவேண்டுவோ
ரழிப்பருமருத்துவர்க்கறையப்போந்தவ
ரெழுப்புதுமிறையையென்றிசைத்துச்சூழ்ந்தனர். (௫௯)

சுரமறிகருவியையுரத்திற்சேர்த்தனர்
கரமதுகரங்கொடுபிடித்துக்கண்டனர்
வரவரவிடிக்கிரிவளர்ந்தநூற்றின்மேல்
விரவுகொய்னாவுமேவியர்த்தமுண்டதால். (௬௦)

வீவில்சீவீவில்சீயெனவிளம்பின
ராவதுமறிகிலர்திகைப்பதாயினார்
தீவருமரவுபற்படலுந்திண்மையின்
மேவருவிடமெனமிகைத்ததன்னதோ (௬௧)

இடியெனுமிணையிலாவின்னவாமயத்
தடையலாரறிவுறுவரையனாருயிர்
படிதுறந்தலரொடுபரந்தகற்பகக்
கடிகமழ்பொழிலினூர்கலத்தன்மேயினான். (௬௨)

வே று.

ஆயிரத்தெண்ணூற்றுத்தொண்ணூற்றுநான்கிற்காய
டிசம்பரினிருபத்தெட்டாநாளிற்
பாயொளிசேர்பைம்பூணரகலனுங்கே
பரலோகந்தனைமணக்கப்பரிவாரத்தின்
மேய்புரையுமென்றேளிவயிறுவாய்த்த
விளக்கமுறுமக்களொடுமலர்வாய்விண்டு
தூயகலைதனையிழந்தபிணைபோலுள்ளந்
துளங்கியழுதாற்றினளாந்துயர்மீதூர. (கஙு)

முன்னெண்ணித்துணிந்தவினைமுடிக்குமாற்றின்
முதியவரேமுதலாயோரமுங்கித்தேறி
மின்னன்னநுண்ணிடையாடனையுந்தேற்றி
மீளிதனக்கீமமதிலியற்றுங்கன்ம
மென்னுண்டோவவையடையவெழிலார்விண்டு
பதிமருங்கிலியற்றியுடன்றணந்தவ்வூரைப்
பொன்னண்ணுந்தமதுபுரிபுகுந்தாரெங்கும்
பொருமலொடுபுலம்புறமண்மரமும்பாவம். (கஙச)

அற்பதிகஞ்செய்தளித்தவாயைக்கொன்னே
பறிகொடுத்தவருங்குழவித்திரளேமானச்
சொற்பெரியநகரடையக்கடலினார்த்துச்
சோகமெனுங்கடன்மூழ்கிக்கிரியைமுற்றும்
பொற்புறவேயவன்புணியவுலகம்போதப்
பொருளதிகஞ்செலவயர்ந்துபுரிதந்தாரா
மற்பெரியபுயவலியினருத்தமீட்டு
மன்னவர்கட்கெவையரியமகியின்மன்னே. (கஙு)

மற்றந்தமன்னவன்மூன்மதலையாய
மன்னுமெழிற்கிட்டினராசுடையாற்காங்கே
பொற்றங்குமணிமடங்கறவிசினேற்றிப்
பூசுரர்களாசிசொலமகுடஞ்சூட்டிக்
கொற்றங்கொளவன்புரக்கும்வயதுகூடுந்
துணையுமவற்பெற்றெடுத்தகுயிலேபோல்வா
ளுற்றந்தத்தொழினடத்தற்குரியாளென்ன
வுவள்கரத்திற்செங்கோலையுதவித்தந்தார். (கஙசு)

அவளவனிதவமகிழவாளமைந்தற்
காங்கிலத்தான்கைபோயவொருவன்றன்னை
யவனிபதிக்கருகதைதயையாக்கற்கேவ
வவன்மணியைச்சிலைவட்டத்தலங்கவாற்று
முவமையெனப்பலகலையினொளிர்வதன்றி
யொன்னலர்களொடுங்கவிகலுஞற்றற்கண்ணும்
புவனநெறிவழுவாதுபுரத்தற்கண்ணும்
புலமைமிகப்புதுக்குவித்தான்புலத்தின்மிக்கான். (சுஎ)

வேறு.

சந்தமொழுகந்தமடமானரசிசாலப்
புந்திமகிழ்வோடெவரும்போற்றுறவளித்த
விந்தைதமையெந்தவலவெம்புலவர்தாமே
யந்தமுறவாய்ந்துகவிபாடவலராவார். (சுஅ)

பெற்றவிணையற்றிடுதம்பேடைமயில்கட்குங்
கொற்றமுறமுன்னர்வருகோமகன்றனக்கு
மற்றவண்முடித்தமணமன்னுபெருமைக்கீ
டுற்றிடிலுரைக்கவிசும்பொன்றுவதுமுண்டே. (சுகூ)

வெள்ளிமுடிவெற்பதைவிசும்பினிவந்தோங்க
வெள்ளைநகைசெய்தொளிரும்விழுத்தகவிழைத்த
பிள்ளைமணநன்கயரவன்றுநனிபேணிக்
கொள்ளைமிகுபொற்செலவயர்ந்தவுயர்கொட்டில். (எ0)

பாடகர்கணக்கிலர்கள்பாவலருமன்னர்
நாடகநடிக்குமடவன்னநடையார்கண்
மாடகமணிப்பொனுறுயாழ்வலவர்தாமு
மாடகமணித்தொடியலர்க்கைமடவாரும். (எக)

வாழுமறைபோதிவருவைதிகர்கடாமுந்
தாழுமுடிமன்னவையிலெளகிகர்கடாமு
மாழிமனன்பின்முனுறவதுவையிலமர்ந்த
வூழின்முகென்னெனவுரைத்திடுதுமம்மா. (எஉ)

சுற்றியரக்காடைமுடிசொல்லுமறைவாயா
ருற்றதுமுருக்கலர்வனத்தையுறழ்வுற்ற
மற்றவர்திரண்முன்மலிவுற்றதுவெண்கோடன்
முற்றுமலர்வுற்றொளிருமுறைமைமணந்தன்றே. (௭௩)

நாம்பெரியநாம்பெரியமென்றிகலுமந்த
வாம்பெருதிரட்கிடையமர்ந்தொளிருமன்ன
னேம்பலினிருந்தமைவிழைத்திடுதலொத்தா
ஞேம்பருபுதல்வரனைக்கோர்படியர்தாமே. (௭௪)

வெண்முகம்விளங்குபவரோர்முதலயாரு
மெண்ணருகுழத்திரளிருந்திலகுமந்த
வண்ணமணிமண்டபமுமுண்டுலகமர்ந்த
வண்ணலெழிலாரகடுபோன்றதெனலாமே. (௭௫)

அங்கடிமணப்பெண்முகவம்புலிநிலாவாற்
கொங்கலர்தொடைக்குமரன்குலவுபணிநிலவாற்
கங்குன்மணிமண்டபவிளக்கநிரைகாணுந்
திங்களெதிர்வானநிறைமீனிரையிற்றேய்ந்த. (௭௬)

கரிக்குலமுருக்கெழுதிமிங்கிலங்கடுக்கும்
பரிக்கிளருபந்திநனிபாய்திரையடுக்கு
நெருக்கமொடடர்ந்துவருநீள்வயவரோளி
கருக்குறுமெயிற்றடுகராநிகரமொக்கும். (௭௭)

நட்டநடுவேவிடலைநாயகியொடுற்ற
சுட்டபொன்மணித்தவிசுசுமந்துமுதுகூரும்
பட்டநுதலோடைமின்பருத்தபகடாடிக்
கட்டழகினேகுயர்மரக்கலங்கடுக்கும். (௭௮)

கண்டவர்வியந்துதமிலாடல்செய்கலிப்பு
மண்டினியபல்லியமுழங்குறுமிசைப்பு
மொண்டொடியரின்னடவடிச்சிலம்பொலிப்புந்
திண்டிறலுடன்குளிர்திரைக்கலிநிகர்க்கும். (௭௯)

உம்பறுணையின்வெரினிணைந்துறவுளுற்று
மின்பமுறிதண்மிசையினேந்திழையராடல்
கும்பமுலையின்றுணைகுலுங்கவராத
ரம்பரதலத்திடைநடித்தலுறழ்வாகும். (அ0)

இன்னவணமின்னவணமென்றுளியுளத்திற்
பன்னரியபாவலருமாகியபகட்டின்
மன்னுமணிமாடமறுகாடலொடுலாவு
மன்னவன்வரும்பவனியார்கலியின்மாதோ. (அக)

வேறு.

இத்தகைவதுவைசெய்தாளெழினகரகலவின்னுங்
தத்துறுமணிமாடங்கடணப்பிலவிழைத்துவேத
வித்தகர்க்களித்தன்னூர்கள்விழுமிதினுகர்ந்துவாழ
வற்றரும்புனல்வளத்தவயல்களும்பெரிதுதந்தாள். (அஉ)

வருவழிவளரச்செய்தாள்வளஞ்செறிபொழிலினெங்கு
மருகிவீழ்பொன்னிவீழ்ச்சியதனின்மின்சாரவன்மை
விரியுநாடெங்கும்போகிவிளங்குபொற்கனிமுன்னாய
வரியமாதலங்கடோறுமருந்தொழிற்கமையச்செய்தாள். ()

சாலையெத்துணைகளென்பேன்சத்திரமெனையவென்பே
னாலயத்தளவுமென்னென்றறைகுவேனங்கங்காற்று
மேலுறும்டங்கடாமுமென்னெனமிழற்றுகிற்பேன்
பாலையேபுரையுஞ்சொல்லப்பைந்தொடியழகினம்மா. (அச)

மன்னவர்வதியுங்கோயின்மற்றவளிழைத்தாளொன்றப்
பொன்னகரடைவினாளும்புனைதருந்துவட்டாவென்பா
ணிந்நகரெழிலைநோக்கிப்பயிறாவிதயம்வெள்கி
மண்ணவரறியாவண்ணமறைந்துவந்தகலுமாதோ. (அரு)

ஆயிரமுகடாரம்பொன்மேருவேயனையவந்தக்
கோயிலின்முடிகணின்றுங்கொழுஞ்சுடர்ப்பிழம்புபாயச்
சேயபொன்னுலகமென்றும்பகலெனத்திகழுமென்று
லாயதனணியுமிற்றென்றெவர்கடாமறிதலாற்றார். (அசு)

ஓவியத்துறைகட்கெல்லாமுறையுளாமுலகிற்பாடும்
பாவலர்பொருள்கட்கெல்லாம்பவனமாமிசையுலாவுந்
தூவுநீர்ப்புயல்கட்கெல்லாந்துயில்வணையிடமதாகுந்
தேவியுண்மகிழ்ந்தோவாதுதிகழ்தரற்ககமதாமே. (அஎ)

புரியவிழ்புதியநீலப்பொற்புணும்விழியாளந்தச்
சுரிகுழற்கணவற்காளுஞ்சுமைப்புயமிவர்ந்தபின்னர்
வருடமோரிரண்டினேர்ந்தவலம்பெருகமைச்சன்சேடாத்
திரியையன்றிறத்தையன்னன்மருவலர்புகழ்வரின்றும். ()

கிழவனுங்கிழத்திதானுங்கிளர்தரவளித்தகால
மிரண்டினுமுறையேயாயவிணையறுஞ்செயல்கணுட்டிற்
பழையமூவாற்றலாரப்பண்புறுமமைச்சனுகு
மழகுறுங்கருவிதன்னுலாயதென்றறியாராரே. (அகூ)

பொன்விளைபுவியும்பொன்னிப்புனல்வளமிருந்தும்புற்கை
யின்பறவருந்திமெய்த்தோமுன்னரிங்கிவனுற்சாலி
யன்புறுமடிசிலோவாதருந்தலாயினமென்றுரு
மன்புகழிசைப்பினன்னுன்மதிவலமுணர்மினீரே. (கூ0)

ஈரொன்பான்வருடமன்னுனெனுந்தொழிலிழைத்தகாலத்
தோரொன்பானிதியமோங்குமும்பர்கோனகராரென்னப்
பாரின்பாலிருந்துமின்பம்பருகுதற்கரியவெல்லா
மாரன்பானயின்றன்னுணையகங்குளிர்ந்தறைகலாதார். (கூக)

ஏரியொன்றிழைத்தானன்னுனதன்பகடிசைத்தற்கென்னே
மாரியின்கணவாயேரியென்றதுவழுங்கலாகும்
காரிபன்மலையதற்குக்கரையெனக்குலவுமென்று
லோருமினதன்கீழ்ப்பாயும்பரப்பினையுணர்ந்துநீரே. (கூஉ)

பரப்புளதெனினுமுப்புப்பரவையையிணையென்றேதக்
கருப்பினிநிரதமானுஞ்சுவையிலகரையாயோங்கும்
பொருப்பிலையாழுமில்லைசொன்முதல்விளையும்பொற்பி
னிருப்புமின்றீயாரென்னவிரைதருமதுவுமென்னே. (கூங)

மாழையேவிளையுமைசூர்மன்னவர்க்கவனிநய
வாழமாரிதுவும்பொன்னியம்புவீழூரத்தின்மின்னின்
சாரவன்மையுமேயூழிபெயரினுஞ்சலிப்புறாத
வாழ்வினைவளர்க்குமென்றுவழங்கிடுமுலகமம்மா. (௯௪)

ஈங்குவன்பல்லாற்றானுமெழில்வளஞ்சுரக்கவாற்றி
யோங்குமீறிவின்மன்னன்றொழிலினையுஞற்றுமெல்லாப்
பாங்குறும்பிறிவினர்க்கும்வேதனம்பல்கச்செய்தான்
வீங்குநீருலகமுய்யுமொருவனின்விறலினென்ப. (௯௫)

வாழ்வாணிவிலாசந்தன்னுள்வதியுமக்கெம்பம்மையுந்
தாழ்வாராதிந்தவண்ணந்தாங்குபுதரணிமைந்தற்
கூழ்வாடாதாண்டரொன்பானுவகையிற்கழிந்தபின்னர்ச்
சூழ்வாரியவனிபாரஞ்சுமத்துறத்துணிந்துசூழ்ந்தாள். (௯௬)

ஆயிரத்தெண்ணூறொடுமணைந்திடுமிருபத்தஞ்சாஞ்
சாலிவாகனசகாத்தாவணியின்முற்பக்கந்தன்னி
னாயகன்கருவைத்தாங்கிநனியுயிர்த்தெனவேயன்னான்
சேயகோலினையுஞ்சின்னாடாங்குபுசிறுவற்கீந்தாள். (௯௭)

ஆலைவாயடுமின்கன்னற்கரும்புகையடரவிண்ணிற்
சோலைவாய்மயில்களுள்ளிப்புயலெனவகவுஞ்சூழும்
வேலைவாயகனன்னாடுவிழவுறமணந்துகாத்தான்
மாலைவாய்மதுகரங்கள்பாண்செயுமகிபன்மைந்தன். (௯௮)

நான்மடிகிருட்டினன்றனலம்பெருகறிவினாடித்
தேன்மலிபொழினாடாளத்தலைப்படமறங்கடேய்ந்து
வான்மலியறங்களோங்கிமறையவர்வளரநாளு
மான்மலிந்தகமகிழ்வாராயினரெவருமம்மா. (௯௯)

மண்டலம்புரக்குமைசூர்மன்னவர்சரிதமோங்குந்
தண்டலைதழையுங்கோழியாலமாநகர்க்கண்வந்த
விண்டுவினடியன்சீநிவாசவாரியனன்காய்ந்து
தண்டமிழினிதுபாடித்தந்தனன்றகவின்மாதோ. (௧௦௦)

ஈற்றினிலிருபத்தைந்தையிணைந்தவாயிரத்தெண்ணூருஞ்
சாற்றுறுஞ்சாலிவாகனன்சகவருடந்தன்னி
லேற்றவாவணியிற்காந்தராசன்கேட்டிடுதலாலே
யாற்றினனிறையக்கண்ணனருள்கொடுசிறக்கமன்னே. (க௦௯)

சாமராசேந்திரவுடையார் சருக்கம்

முற்றிற்று.

ஆக, செய்யுள்—க௦க௯.

மைசூர் அரசு

முற்றுப் பெற்றது.

ARCHIVES LIBRARY
108798
MADRAS
V 213
A 3-2

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
அ	உரு	னங்குநங்	னங்குறுங்
உச	ரு	ோணிலாம்	வேணிலாம்
உஎ	எ	பழனங்கிள்ளி	பழனக்கிள்ளி
ஙo	கக	யளித்தவற்கப	யளித்தவர்க்கப
சகூ	உo	தோன்றானே	தோன்றாளே
ருo	ககூ	யிசைக்கென்	யிசைக்கென
ருக	உகூ	கொலைபடை	கொல்படை
கூச	உகூ	முதல்	முதல
கூஎ	ங	தன்டி	தண்டி
கூஅ	எ	படுகைமை	படுதகைமை
எகூ	உங	மீண்டன்னான்	மீண்டனனான்
கoச	உ	கடும்பொன்	கரும்பொன்
க உ	உஅ	தனவிற்கு	தனவின்கு
ககூச	ரு	தனயாமுனி	தனைமுனி
கசங	உக	முலக்கல	முலககல